
# அதிசய உலா



கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

# அதிசய உலா

கற்பவர்க்கு ஓர் கல்வி உலா

**கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்** B.F.A

**வெற்றிமணி வெளியீடு** 2007

நூலின் பெயர்

**அதிசய உலா**

விடயம்:
**கட்டுரைகள்**
பக்கங்கள்: 96

ஆசிரியர்:
**கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்** B.F.A

முதற்பதிப்பு: 2007

உரிமை: **வெற்றிமணி**

வெளியீடு:

**வெற்றிமணி வெளியீட்டகம்**

வடிவமைப்பு: **கண்ணா**

Title:
Athisayaula

Author:
Dr.M.K.S.Sivakumaran
Brinker Höhe 13
58507 Lüdenscheid
Germany

Edition:First Edition 2007
Publication:
VETTIMANI

**அன்பளிப்பு**




பயன் உள்ள இந்நூலை
அன்பளிப்புச் செய்வதில்
அக மகிழ்கின்றேன்

அன்புடன்,



**பூக்களுக்குப் பதிலாக**
**புத்தகத்தைப் பரிசாகக்**
**கொடுங்கள்!**

# அணிந்துரை



வெற்றிமணி இதழ்களில் அவ்வப்போது வெளிவந்த சுவைமிகு அறிவியல், ஆன்மீக, வரலாற்றுப் பதிவுகள் போன்றவற்றைத் தொகுத்துத் தன் கைவந்த கலையான புகைப்படக் கலவைகொண்டு மெருகேற்றி அதிசய உலாவாக உங்கள் கரங்களில் திரு. மு.க.சு.சிவகுமாரன் அவர்கள் தவழவிட்டிருக்கிறார்.
இது அவரது வெற்றிமணி வெளியீட்டகத்தின் பதினான்காவது வெளியீடு. வழமைபோலவே இதுவும் ஒரு வித்தியாசமான பார்வைப் பதிவு.

பிரித்தானியாவின் கலைக்களஞ்சியம் (Encyclopaedia Britannica) என்ற தகவல் களஞ்சிய நூல் 1768இல் இரண்டு தொகுதிகளுடன் தனது முதலாவது பதிப்பைக்கண்டு காலப்போக்கில் வளர்ச்சிகண்டு, 2003ம் ஆண்டில் 15ஆவது பதிப்பை 30 தொகுதிகள் கொண்ட பாரிய பதிப்பாக வெளியிட்டுள்ளது. தகவல் என்பதற்கு பழையது புதியது என்ற அளவு கோல்கள் இல்லை என்பதற்கு பிரித்தானியக் கலைக்களஞ்சியம் ஒரு வாழும் உதாரணம். பதினாறாம் நூற்றாண்டிலிருந்து சேகரித்து வந்த தகவல்களை இன்றும் புதிதாக வாசித்தறிய மக்கள் இக்கலைக் களஞ்சியத்தினையே நாடிவருகின்றார்கள். ஒரு தகவலை வாசகன் அறிந்து கொள்ளும்வரை அது அவனுக்குப் புதியது தான்.

வெற்றிமணி நீண்டகாலமாக யேர்மனியிலிருந்து வெளிவருகின்றது.
அண்மைக் காலங்களில் அது தன் சிறகினை விரித்து சர்வதேச வெளியீடு களைக்காண நாற்றிசையும் பறக்கத்தொடங்கியுள்ளது. தாயகத்தை நோக்கியும், கனடாவை நோக்கியும், அண்டை ஐரோப்பிய நாடுகளை நோக்கியும் அதன் வண்ணச்சிறகுகள் விரிந்துள்ளன. இந்நிலையில் வெற்றிமணி தன் முன்னைய இதழ்களில் உள்ளகப்படுத்திவைத்திருந்த பல சுவைமிகு தகவல்களை தமிழ்கூறும் நல்லுலகிற்கு தனித்தொகுதியாக்கி வழங்கமுற்படுவது தவிர்க்கவியலாததாகும்.
அவ்வகையில் அதிசய உலா மிகக் கனதியானதொரு ஆவணமாகும்.
உலகச் செய்திகளைச் சுவையாகவும் வண்ணக்கலவை கொண்டும், தேர்ந்த புகைப்பட ஆவண உதவியுடன் புகலிட மண்ணின் உயர்தர அச்சக வசதிகளைப் பயன்படுத்தி இங்கு பதிவுசெய்துள்ளார். எட்டுப் பிரிவு களுக்குள் தான் தேடிப்பதிவுசெய்த தகவல்களை வகைப்படுத்தியுமுள்ளார்.

இத்தகவல்களில் நான் காணும் பொதுப்பண்பு என்னவெனில் ஏதோ ஒரு வகையில் இவை எமக்குப் பரிச்சயமான விடயங்களாக இருப்பதேயாகும். எம்முடன் சம்பந்தமேயில்லாத, நாம் அறிந்துகொள்ளவதில் பயனேயில்லாத வரண்ட விடயங்களை திரு.சிவகுமாரன் அவர்கள் இத்தொகுப்பில் திணிக்க முயலவில்லை. அவர் தனது வாசகர்கள் அறிந்துகொள்ளவேண்டும் என்று தேர்வுசெய்யும் தகவலை அப்படியே உள்ளது உள்ளபடியே கக்கி வைக்கவுமில்லை.

முதலில் அத்தகவலின் நம்பகத்தன்மையினைத் தானே பரிசோதிக்கிறார். அதற்கான தேடலில் உடனடியாக இறங்குகின்றார். அதற்காக சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொள்கின்றார். போதிய புகைப்பட ஆதாரங்களைப் பெற்றுக்கொள்கின்றார். பின்னர் அதை சுவையான, நறுக்குத்தெறிக்கும் வசனங்களால், நகைச்சுவை உணர்வையும் கூட்டுச்சேர்த்துச் சுருக்கமாகப் பதிவுசெய்கின்றார். இந்நூலில் வாசகர் காணும் இவரது தகவல் பதிவுகளின் தெளிவிற்கு இதுவே மூலகாரணமாக அமைகின்றது.

ஒரு நல்ல நூலின் பக்கங்களில் எழுத்துருக்களால் சொல்லப்படும் செய்தியைவிட அதிலுள்ள புகைப்படங்களால் சொல்லப்படும் செய்திக்கு அதிக வலுவிருக்கும். பிரித்தானிய தொலைக்காட்சியில் சில காலங்களுக்கு முன்னர், கடலுள் வீழ்ந்து மறைந்த விமான விபத்தொன்றினைப் பற்றிய செய்தியைக் குறிப்பிடும்போது, கடலில் மிதந்துகொண்டிருந்த ஒரு ஒற்றைப் பாதஅணியையே காட்டிக் கொண்டிருந்தார்கள். அது ஒரு பச்சிளம் பாலகனுடையது. விமான விபத்தின் தாக்கத்தை அந்த ஒற்றைப் பாதஅணி நெஞ்சில் உறைக்கும்படி தெளிவாகச் சொல்லிற்று. அது வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதது. அதிசய உலாவிலும் பல புகைப்படங்கள் ஆசிரியர் சொல்லவரும் செய்தியுடன் சொல்லாத பல செய்திகளை எமக்குப் புரியவைக்கின்றன. கூர்ந்து பார்த்துக் கண்டு இரசிப்பது அவரவர் வாசிப்புத்திறனையும், கற்பனைவளத்தையும் பொறுத்தது.

இன்றைய புலம்பெயர் சூழலில் எமது குடும்பங்களின் பொழுதுபோக்கு அம்சமாகப் பெருகிவருவது தொலைக்காட்சித் தொடர்களே என்ற குறை பாடொன்றுண்டு. கவர்ச்சிகரமாக, எம்மவர்களின் மனதுக்கு நெருக்கமாக அமைந்து, எமது வீட்டு வரவேற்பறைகளை ஆக்கிரமித்துக்கொள்ளும் இந்தத் தொடர்களை எதிர்ப்பவர்களிடம் கேட்கப்படும் கேள்வியொன்றுண்டு. சரி, அவர்களை இந்தக் குப்பைகளிலிருந்து மீட்டெடுக்க, அவர்களுக்கு மாற்றுப் பொழுதுபோக்குகளை கவர்ச்சிகரமாகவும், அறிவியல் நோக் குடனும் வழங்க நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பது தான் அந்தக் கேள்வி. இதற்கான பதிலாகவே இன்று வெற்றிமணி வெளியீடாக வெளிவந்திருக்கும் அதிசய உலா அமைகின்றது.

இத்தகைய சுவையான நூல்கள் எதிர்காலத்தில் எம்மவரின் வீட்டு வரவேற்பறைகளை ஆக்கிரமித்தால் வாசிப்பினால் வாழ்வை வளமாக்கும் அறிவாரோக்கியமான புலம்பெயர் தமிழர் சமூகமொன்று மீளுருவாக்கம் பெறும் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு.

அந்த நம்பிக்கைகளுடன் நண்பர் மு.க.சு.சிவகுமாரன் அவர்களின் இப்பணியை வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

என்.செல்வராஜா
நூலகவியலாளர், லண்டன்.
29.10.2006

# "பழசு என்று எதனைச் சொல்வது"



யேர்மனியில் வெற்றிமணியின் 14வது வெளியீடாக "அதிசய உலா" வெளிவருகின்றது. ஒவ்வொன்றும் வித்தியாசமான பயனுள்ள வெளியீடுகளாக அமைந்தன. இதனை வாசகர்களும் விமர்சகர் களும் பல முறை வழி மொழிந்துள்ளனர்.
அதிசய உலா -இது வெளிவரக் காரணமும்,
வித்தியாசமானது! சுவையானது!!
வெற்றிமணியின் பழைய இதழ் ஒன்றினை ஒரு வாசகர் தாயகத்தில் படித்துச் சுவைத்தபோது அருகில் நின்றவர் பத்திரிகையின் திகதியைப் பார்த்துவிட்டு "இது பழசுபோல் உள்ளது" என்று கூறினார்.
இதனைக் கேட்ட வாசகர் உடனடியாக அப்பத்திரிகையை கொடுத்து........ "இதில் பழசு என்று எதனைச் சொல்வது" காட்டுங்கள் என்றார்.
பார்த்தார்.... பார்த்துவிட்டு பதில் இப்படிக் கூறினார்:
"உண்மைதான் சொல்லப்பட்ட காலம் பழசாக இருக்கலாம் ஆனால் செய்தி இப்பவும் எப்பவும் புதுசா புதுமையாகத்தான் இருக்கு" என்றார்.
அப்போது என் மனதில் உதித்த எண்ணக்கருதான் தற்போது உங்கள் கரங்களில் அதிசய உலாவாகத் தவழ்கின்றது. இந்த இனிய உலாவில் உங்களை அழைத்துச் செல்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.
அதிசய உலா, விநோத உலா, கலை உலா, காதல் உலா, சாதனை உலா, சரித்திர உலா, சமய உலா, என்று உல்லாசமாக வலம் வரலாம்.
தாயகத்தில் உள்ள மாணவர்களுக்கு இது ஒரு கல்வியுலாவாக அமையும்.
அதிசயமாக விரியும் பக்கங்களுக்குள் எல்லாம் அடக்கமாக என் தேடல் களை நிறுத்தியுள்ளேன். உங்கள் அன்பும் ஆதரவும் மேலும் பல அதிசய உலாக்களுக்கு உங்களை அழைத்துச் செல்ல வழிவகுக்கும்.
இந்நூலுக்கு அணிந்துரை எழுதிய நூலகவியலாளர் N.செல்வராஜா அவர்கள் சுவாசிப்பதைப் போன்று சீராக நூல்களை வாசிப்பவர், நேசிப்பவர். அதனால்தான் இது வரை நூல்தேட்டம் என்னும் நூலின் நான்கு தொகுதிகளை தமிழ் உலகுக்கு அளிக்கமுடிந்தது. அவர் இந் நூலுக்கு அணிந்துள்ள அணிந்துரைக்கு என் நன்றிகள்.
என்னை இலக்கிய உலகுக்கு நன்கு இனம்காட்டிய கவிஞர் கலாநிதி வி.கந்தவனம் அவர்களுக்கும், என்னைத் தமிழாய் நேசிக்கும் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களுக்கும், வாழ்த்திய நல் உள்ளங்களுக்கும் எனது நன்றிகள்.

Brinker Höhe 13
58507 Lüdenscheid
Germany

என்றும் தமிழுடன்
மு.க.சு.சிவகுமாரன்

| | |
|---|---|
| அதிசய உலா | 07 - 20 |
| கலை உலா | 21- 32 |
| காதல் உலா | 33 - 40 |
| சாதனை உலா | 41- 48 |
| விநோத உலா | 49 - 58 |
| சரித்திர உலா | 59 - 72 |
| விஞ்ஞான உலா | 73 - 84 |
| சமய உலா | 85 - 92 |


## உலா வீதி

*வாழ்த்துரை*

## ஓர் அதிசய மடை!

கல்வி உலா
கனிந்த பலா!

நிலாக்களிற் சிறந்தது
வசந்த நிலா
பலாக்களிற் சுவைப்பது
கனிந்த பலா
உலாக்களில் உயர்ந்தது
கல்வி உலா!

முன்னாட்களில் மாணவரை
"வெற்றிமணி'யில்
உலாவரச் செய்தவர்
அதிபர் மு.க.சு.
இந்நாட்களில்
அதனைத் தொடர்பவர்
மைந்தர் சிவக்குமாரன்!

கற்றறிவு பட்டறிவாக -
பட்டறிவு பகுத்தறிவாக -
பகுத்தறிவு பக்குவ அறிவாக
இந்த நூல்
யாவர்க்கும்
சொந்த நூலாகுக!

இந்த உலாவால்
யாதும் ஊராகும்
யாவரும் கேளிராவர்!


கொடைகளிற் சிறந்தது
கல்விக் கொடை!
அதிலே சிவகுமாரன்
வைத்திருப்பது
ஓர் அதிசய மடை!
அறிவை வளர்த்து
அற்றம் காக்கும் படை!

நடவுங்கள் -
நல்ல
நாகரிக நடை!

**வி. கந்தவனம்** (கனடா)

# ஐரோப்பாவில் ஒரு அதிசயப் பாலம்!

கற்பனை பண்ண முடியாத பலவற்றை ஒற்றுமையான முயற்சிகள் மூலம் சாதிக்கலாம் என்பதனை அடிக்கடி உலகம் நினைவூட்டத் தவறுவதில்லை. சுவீடனையும் டென்மார்க்கையும் கடல் மார்க்கமாக இணைக்கும் பாலம் இதனையே எடுத்துச் சொல்கிறது.




(Oresund Bridge) இது டென்மார்க்கில் South Copenhagen இல் இருந்து சுவீடனில் West Malmo நகரத்தை இணைக்கின்றது. இதுவரை காலமும் கடலை Ferry மூலம் கடக்க ஒரு மணித்தியாலம் சென்றது. தற்போது 20 நிமிடங்களில் உங்கள் வாகனங்களி லேயே கடக்கமுடிகிறது.

ஐரோப்பாவிலேயே அதி நீளமான பாலமாக இது அமைகின்றது. இதன் நீளம் 16.4 கி.மீ ஆகும்.

இப்பாலத்தினை அமைக்க 1991 ஆண்டு டென்மார்க் - சுவீடன் அரசுகள் முடிவு செய்தன.

இதற்கான வரைபடம் 1994 ஆம் ஆண்டு நிறைவு செய்யப்பட்டு இரு நாடு களும் ஏற்றுக்கொண்டன. 1996ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட கட்டட வேலைகள் சரியாக இரண்டரை வருடத்தில் பூர்த்தியாகி இப்பாலத்தின் ஒருபகுதி கடலுக்கு அடியில் சுரங்கமாக அமைக்கப்பெற்று அதனூடாகச் செல்கின்றது. இதன் மூலம் கடலில் வரும் கப்பல்கள் சுரங்கப்பாலத்தின் மேலால் கடலில் தங்குதடையின்றிச் செல்லமுடிகிறது. (படத்தில் சுரங்கப்பாதையையும் பாலத்தையும் காணலாம்.)

இப்பாலம் 14.08.1999 இல் கட்டிமுடிக்கப்பட்டதும் டென்மார்க் இளவரசர் Frederik அவர்களும் சுவீடன் இளவரசி Victoria அவர்களும் உறவுப்பாலம் அமைத்த மகிழ்வில் பாலத்தில் வந்து கைகுலுக்கிக்கொண்டனர்.

பின்னர் வைபவரீதியாக மக்களுக்கு அப்பாலம் 2000 ஆண்டு ஆடிமாதம் திறந்துவைக்கப்பட்டது.



அவ்வைபவத்தில் டென்மார்க் நாட்டின் அரசி Margrethe 11 அவர்களும், சுவீடன் நாட்டு மன்னன் Carl XVI அவர்களும் கலந்து கொண்டனர்.



திட்டமிட்டபடி இரு நாடுகள் ஒரு பாலத்தை திடமாக இரண்டரை வருடங்களுக்குள் எந்தக் குழப்பமும் இன்றிக் கட்டிமுடித்து மகிழ்ந்தன.





ஒன்று உண்டு என்று நம்பப்பட்டதை உலகில் இல்லை என்று நம்பவைப்பதென்பது எளிதான காரியமல்ல. சீனாவில் தொடங்கிய சாள்ஸ் நோய் மிகப்பெரிதாக கனடா நாட்டினையும் 2003 இல் பாதித்தது. இதனால் கனடாவை உலக சுகாதார மையம் சாள்ஸ் நோய் அதிகம் உள்ள நாடாகப் பிரகடனம் செய்தது. இதன் பின்னர் விழித்துக்கொண்ட கனடா அரசு, தனது நாட்டிற்கு ஏற்பட்ட இந்த நிலையை துடைக்க படுவேகமாக ஈடுபட்டது.

அதில் வெற்றியும் கண்டது. இந்த வெற்றியை சும்மா தனக்குள்ளே வைத்திருக் முடியாது அல்லவா? எனவே இதனை பிரமாண்டமாகக் கொண்டாடி உலகத்தின் கவனத்தை தன்பால் ஈர்த்து, இப்போ கனடாவில் சாள்ஸ் நோயின் அபாயம் இல்லை என்ற செய்தியை உரக்கச் சொல்லத்தீர்மானித்தது. அதன் வெளிப்பாடே (30.July.2003) நடந்து முடிந்த மிகப்பெரிய இன்னிசை நிகழ்ச்சியாகும்.

சாள்ஸ் நோய் கொண்ட நாடெனக்கருதப்பட்ட கனடாவினை வளமான நாடு என்று பிரகடனப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்ட இசைநிகழ்ச்சியின் பெயர்: Molson Canadian Rocks Toronto Festival ஆகும். இந்த நிகழ்ச்சியில் அரை மில்லியன் இசைப்பிரியர்கள் கலந்து கொண்டனர். சர்வதேச இசைப் புயல்களான Stones,AC/DC,Justin ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இந்த இசை நிகழ்சியைக்காண முதல் நாள் 60 ஆயிரம் இசைப் பிரியர்கள் கூடிவிட்டார்கள். இவர்களுக்கு Stones இசைக் குழுவினர் இலவசமாக காலை உணவினை வழங்கினர். வெக்கையின் தாக்கத்தை தணிக்கதீயணைக்கும் படையினர் அரங்கத்துள் செயற்கை மழைபொழிந்தனர். இங்கு விற்பனை செய்யப்பட்ட கம்பேக்கரின் தொகை எவ்வளவு என்று கேட்டால் உங்களுக்கு மயக்கமே வந்துவிடும். உலகில் உயர்ந்த கோபுரம் எது? அது கனடாவில் அமைந்துள் CN Tower அல்லவா! இங்கு விற்கப்பட்ட கம்போ்க்கரை (Hamburger) ஒன்றன் மேல் ஒன்று அடுக்கினால் அந்தக்கோபுரத்தின் உயரத்தை விட மூன்று மடங்கு அதிகம். பாவனைக்கு மக்களுக்கு வைக்கப்பட்ட மலசலகூடத்தில் உள்ள Toilet Paper இதனை பாய்போல் விரித்தால் ரொறன்ரோவில் இருந்து U.S.A வரை செல்லுமாம். அரங்கத்துள் மதுபானம் மற்றும் புகைப்பது தடைசெய்யப்பட்டு இருந்தது. இதனால் நடைபெற்ற சுவாரசியமான நிகழ்சிகளைப் பாருங்கள்.

அரங்கத்தினுள் நிகழ்ச்சி ஆரம்பிப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்னரே போதை விரும்பிகள் கண்ணிவெடி புதைப் பதுபோல் மதுப்புட்டிகளை நிலத்துள் மறைத்துள்ளார்கள். இவை பின்னர் காவலர்களால் கண்டுபிடிக்கப்பட்டு நிகழ்ச்சிக்கு முன்னதாகவே அகற்றப்பட்டுவிட்டன. ஆனால் எப்படியோ போதைப் பொருட்கள் உள்ளே சென்றுதான் விட்டது. எப்படித் தெரியுமா? உடம் புக்கு போதை ஊசி போட்டால் போதை வரும். அதே ஊசியை தண்ணீர் போத்தலுக்குப் போட்டல்லவா எடுத்துச் சென்றுவிட்டனர். எப்படி ஊசிமூளை.




இந்தவிழா மூலம் உலகிற்கு கனடாவில் சாள்ஸ் நோய் இல்லை என்று கூறியதுடன் சாள்ஸ் நோயாளர்களுக்கு 450,000 டொலர் பணமும் சேகரிக்கப்பட்டது. அரங்கத்துள் மணிக்கு சென்ற இசைப்பிரியர்களின் தொகை 25,000 பேராகும்.

# பறக்கும் தட்டுக்கள்

## யேர்மனியும் உருசியாவும் அனுப்பிய வேவுத் தட்டுக்களே?



1946

கொள்ளிவால்பேய் புளியமரத்தடியில் இருக்கிறது என்றும் அந்தப்பக்கம் போக வேண்டாம் என்றும் புளியமரத்துச் சொந்தக்காரன் புரளியைக் கிளப்பிவிட எந்தத் திருடனின் தொல்லைகளும் இன்றி மரம் கொத்துக் கொத்தாகக்காய்க்க தோட்டக்காரன் கொள்ளிவால்பேயின் புண்ணியத்தில் பக்கத்து ஊர்ச் சந்தையில் பழத்தைவிற்று பணத்தை மூட்டை மூட்டை யாகக்கட்டுவான்.

இப்படி மனித மனங்களை திசைதிருப்ப நம்மவர்கள் கண்டுகொண்ட வித்தையை அமெரிக்காவும் விட்டுவிடவில்லை.

பறக்கும் தட்டுப் புரளி 1960 இல் உச்சத்தில் இருந்தது. 1946 இல் இருந்து இப்படி ஒரு புரளி உலாவியது. வேறு உலகத்தில் இருந்து பூவுலகவாசி களைவிட அறிவுகூடிய மனிதர்கள் அடிக்கடி பறக்கும் தட்டில் பூவுலகுக்கு வருவதாகவும்,அவர்களது அறிவுக் கூர்மையைப் பயன்படுத்தித்தான் எகிப்திய பிரமிட்டுக்கள்கூடக் கட்டப்பட்டதாகவும், இதற்கும் மேலான ஒரு கற்பனையாக மேலோகவாசிகளான ஏலியன்ஸ்கள் பூவுலகப் பெண்களுடன் கலந்து புத்தி ஜீவிகளைப் பெற்றதாலேயே அதிசயிக் கத்தக்க விஞ்ஞானிகள் இங்கு தோன்றினர் என்றும் கதைகள் பறக்கும் தட்டைவிட வேகமாகப் பரவின.


இப்பறக்கும் தட்டுக்கள் யேர்மனி உருசியா நாடுகள் முதன் முதல் வேவு பார்ப்பதற்காக செய்யப்பட்ட ஒரு விமானமே. இது நின்ற நிலையில் இருந்து செங்குத்தாகக் எழ வல்லது. அதாவது பறக்கும் தட்டு Saucer வடிவுடையது. இதன் மேற்பரப்பில் உள்ள காற்று மண்டலத்தை உறுஞ்சி வெற்றிடமாக்கி அவ்விடத்திற்கு கப்பல் நகர மேற்பகுதியில் உறிஞ்சப் பெற்ற காற்று கீழ்பகுதிக்கு வந்து உதைக்க பறக்கும்தட்டு செங்குத்தாக எழும். இப்படி ஒரு தொழில் நுட்பத்துடன்கூடிய வேவு விமானங்களை 1946 மட்டில் யேர்மனிய விஞ்ஞானிகளும் இரசிய விஞ்ஞானிகளும் தயாரித்து பறக்கவிட்டனர்.

இதனைக் கண்டு மக்கள் அச்சம் கொள்ளாது இருக்க பறக்கும் தட்டுப் புரளிகிளப்பப்பட்டு மக்கள் மனங்கள் திசைதிருப்பப்பட்டன.

கொள்ளிவால் பேயைவிட மேல் உலகத்தில் இருந்து வருவதாகக் கூறப்படும் ஏலியன்ஸ்களை மக்கள் வெகுவாக நம்பத் தலைப்பட்டனர். காலம் சில உண்மைகளை தானாகவே தரும் என்பது உண்மைதான்.

# யேர்மனியில் பெருந்தெருவில் இறங்கிய விமானம்





*Landed on High Way 38*


## பாதை மாறிய பறவை ஒன்று

அது! அது! அந்த இடத்தில் இருந்தால்தான் மதிப்பு என்பார்கள். அது போல் அது! அது! அந்த அந்த இடத்தில் ஓடினால்தான் மதிப்பு, இல்லை என்றால் விபத்து.

புகையிரதம் தான் ஓடும் தண்டவாளம் என்னும் அந்த இடத்தைவிட்டு தரையில் ஓடினால் விபத்து. வாகனம் தெருக்களைவிட்டு தடம் மாறினால் விபத்து. நீர்க்கப்பல் நீரைவிட்டு தரை தட்டினால் விபத்து.

யேர்மனியில் ஒரு விமானம் தான் தரை இறங்கவேண்டிய விமானத் தளத்தைவிட்டு பெருந்தெரு ஒன்றில் சடுதியாக இறக்கப்பட்டு பெரும் பரபரப்பை ஏற்படுத்திவிட்டது. நல்லவேளை சாதாரணமாக இருக்கும் வாகன நெருக்கம் அப்போது அந்தப் பெருந்தெருவில் இல்லாமல் இருந்தது.


இல்லை என்றால் குறைந்தது 200 பேரது உயிரைக் குடித்திருக்கும். இச்சம்பவம் கடந்த 10.12.2001 யேர்மனியில் பெருந்தெரு 38 இல் Halle eine இடத்திற்கு அண்மையில் இடம் பெற்றது. படத்தில் உள்ள தனியார் விமானம் ஒன்றை 50 வயதுடைய ஒருவர் ஓட்டிவந்ததாகவும் அந்த விமானத்தில் கோளாறு ஏற்படவே அவசரத்தில் அதனை வாகனம் ஓடுகின்ற பெருந்தெருவில் இறக்கியதாகவும், அந்த விமான ஓட்டுனர் பொலிசாருக்கு தெரிவித்துள்ளார். அத்துடன் அந்தப் பெரும் தெருவில் வாகனங்கள் ஏதும் ஓடாமல் அமைதியாக இருந்தமையால்தான் அந்தப் பொரும் தெரு திருத்தவேலைக்காக மூடப்பட்டு இருக்கலாம், என்ற துணிவில் இறக்கி விட்டதாகவும், இறக்கிய சில நிமிடத்தில் எதிர்வந்த வாகனங்களைக் கண்டபோதே தன் பிழையை எண்ணியதாகவும், பெரும் அதிர்ச்சிக்குளாகிய நிலையில் அவர் தெரிவித்துள்ளார்.



இதே போன்று யேர்மனியைச் சேர்ந்த தனியார் விமானம் ஒன்று அண்மையில் இத்தாலி நாட்டில், மின்லாண்ட் விமான நிலையத்தில் ஒரு விபத்தை எற்படுத் தியது. பனிப் புகாருக்குள் இறங்கு தரையில் ஒரு பயணிகள் விமான த்துடன் மோதி 200க்கு மேற்பட்ட பயணிகளை பலிகொண்டது.

# உங்கள் பயணம் "இன்பமயமாகஇருக்க வேண்டும்" என்பதே எங்கள் விருப்பம்

## *வானில் எண்ணச்சிறகுகளை அகல விரிக்கலாம்*





உங்களது பயணம் இன்பகரமாக இருக்கவேண்டும் என்பதே எங்கள் விருப்பம். இது எங்கே எப்போ யாரால் சொல்லப்பட்டது. என்ன இந்தத் தேவாரம் யாரால் எப்போ அருளப்பட்டது சந்தர்ப்பம் கூறி விளக்குக என்பதுபோல் இருக்கிறதா? எயர் லங்கா விமானத்தில் பயணம் செய்யும் போது பணிப் பெண்கள் இப்படி மழலை மொழியில் கூறுவர்.
அங்கே பயணம் இன்பகரமாக அமையாவிட்டால் தற்பாது காப்புக்காக என்ன செய்யவேண்டும் என்றும் செய்து காட்டுவார். அந்த நேரத்தில் பலர் தாங்கள் கொண்டு செல்லும் பணம் இம்முறை செலவிற்கு காணுமோ?
அல்லது இம்முறை போற நாங்கள் அந்த வேலிப் பிரச்சினையைத் தீர்த்து மதில் கட்டிவிட்டு வரவேண்டும். அல்லது அம்மாவுடன் இம்முறை முழுநேரமும் நிற்க வேண்டும். சென்றமுறை சேலையைவாங்கிவந்து சட்டைத் துணி அந்த நிறத்திற்குப் பொருத்தமாக எடுக்கமுடியாமல் திண்டாடினமாதிரி இம்முறை நடக்கப்படாது. எடுத்தால் இரண்டும் ஒரு கடையில் எடுத்துவரவேண்டும் இப்படி எண்ணங்கள் விமானம் கிளம்பும் முன்னமே கிளம்பி பறக்கும்போது பணிப்பெண் பாதுகாப்புக்குச் செய்து காட்டுவது எங்கே புரியப்போகிறது.
அத்துடன் சிலர் விமானம் விழுகிறது என்று தெரிந்தாலேபோதும் மூச்சு போய்விடும் பின் என்னவென்று இந்த குடைகளை விரித்து வானில் இருந்து குதிப்பது, என்று சொல்வதை அசட்டையாக விடுவதும் உண்டு. இது எமது இனத்தின் கவனமின்மை என்று சொல்லவரவில்லை பொதுவாக மக்களது போக்கு இப்படி என்றே கருதுகின்றனர் விமானச் சேவையாளர்.
இதனால் இவர்கள் இப்போது ஒரு முடிவுக்கு வந்து ஒரு பரீட்சார்த்திகமான முயற்சியில் ஈடுபட்டுவருகின்றனர்.


அதாவது விமானம் விபத்திற்குள்ளாகும் அறிகுறி தென்பட்டால் தனித்தனிய ஒவ்வொருவரும் பாதுகாப்புக் குடை விரிக்காமல் விமானமே மொத்தமாக ஒரு அசுரக் குடையைவிரித்து தன் வேகத்தைக்குறைத்து தரையிறங் கவைப்பதே அம்முயற்சியாகும். இதன்மூலம் முழுப்பயணி களையும் பாதுகாக்க முடியும் என்பது அவர்கள் திட்டம்.

சிலவகைச் சிறிய விமானங்களில் ஏற்கனவே இந்த பாதுகாப்புத்திட்டம் அமுலில் உள்ளது. இப்போது பாரிய வர்த்தக விமானங்களிலும் பயணிகள் விமானங்களிலும் இதைப்பயன்படுத்துவது பற்றி ஆராயப்படுகிறது.

அமெரிக்காவின் புதியகண்டுபிடிப்பு நிறுவனம் ஒன்று இவ்வருடத்தில் மாத்திரம் 500 பாதுகாப்புக் குடைகளை விற்பனை செய்துள்ளது. விலை 16.000 டொலராகும். விமானங்களுக்கான இந்த பாதுகாப்புக் குடை தயாரிப்பதில் விமானத்தின் எடையும் வேகமும் முக்கிய கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது என அமெரிக்க தேசிய போக்குவரத்து பாதுகாப்புச் சபையின் தலைவர் ஜேம்ஸ் ஹால் தெரிவித்துள்ளார்.

இந்நிறுவனத்தின் அதிகபட்ச பரசூட் 4000 இறாத்தல் விமானங்களைத் தாங்கக்கூடியது. சிறியரக விமானங்கள் பொதுவாக 2000 இறாத்தல் எடையையும் 175 மைல் வேகத்தையும் கொண்டிருக்கும். ஆனால் வர்த்தக விமானங்கள் சுமார் 80,000 இறாத்தல் எடையைக்கொண்டிருக்கும் மணித்தியாலம் 600மைல் வேகத்தில் பறக்கும்.

இந்தநிலையில் பாரிய விமானங்களுக்கான பாதுகாப்புக் குடை (பரசூட்)களைத் தயாரிப்பதில் நாசாவுடன் இணைந்து ஆய்வுகளை மேற் கொண்டுள்ளது. இந்த ஆய்வுக்காக 670,000 டொலர்களை ஒதுக்கியுள்ளது. இவை எல்லாம் சாத்தியமாகும்போது விமானத்தில் இன்னும் நம் எண்ணச்சிறகுகளை அகலவிரிக்கலாம்.



# வானமெனும் வீதியிலே...

## மீண்டும் ஒரு உலக அதிசயம்



சாதனைகள் செய்வது சாதனைக்காக என்று மட்டும் கொள்ளாது அச்சாதனை மனித குலத்திற்கு பயன் உள்ளதாகவும் அமையும் என்றால் அதுவே உன்னதமான சாதனையாகக் கொள்ள முடியும். பரிஸ் நகரில் அமைந்துள்ள ஈபிள் ரவர் உலக சாதனையாகத் திகழ்கின்றது.
ஆனால் அதன் பயன் என்ன? அதற்கு விடை தருவதாக அமைகிறது இன்று பிரான்ஸ் நாட்டில் கட்டப்பட்டுவரும் உலகில் அதி உயரமான பாலம். இதன் தூண்களின் உயரம் ஈபிள் ரவரை விடக்கூடியது. ஈபிள் டவரைக்கட்டிய அதே நிறுவனம்தான் தற்போது இப்பயனுள்ள பாலத்தையும் கட்டுகின்றது.

இந்தப் பாலம் தெற்கு பிரான்சின் மில்லாவ் நகரில் டார்ன் ஆற்றுக்கிடையில் பாரிஸ் நகருக்கும் பார்சிலோன நகருக்கும் இடையில் கட்டப்பட்டு வருகிறது. இரண்டு உயர்ந்த மலைகளுக்கு இடையே உள்ள மலைகளைக் கடக்கும் பாலம் இது.




இதன் நீளம் 2.கி.மீட்டர். உயரம் 300மீட்டர். உலகில் இதுவரை கட்டப்படாத ஒரு அதிசயப் பாலம் இது. இதனைக் காலைபனிமூட்டத்தில் பார்த்தால் ஒரு விமானத்தில் பறப்பதுபோன்று கொள்ளை அழகாக இருக்கும். சுருங்கச் சொன்னால் இப்பாலம் வானவெளியில் செல்கிறது என்று சொல்லலாம்
வானமெனும் வீதியிலே இனிவாகனங்கள் பறக்கத் தயாராகலாம். ஆனால் ஒருவாகனம் அந்தவீதியில் பறப்பதற்கு 5யூரோ அறிவிடத்திட்டமிடப் பட்டள்ளது. மனிதனுடைய வேலைப்பாடுகள் இயற்கையுடன் ஒன்றியுள்ளது. பாலத்தின் தூண்கள் இயற்கையாகவே பூமியில் இருந்து வளர்ந்தவை போன்று காணப்படுகின்றன. பி.பி.சி செய்தியாளர் கூறுகையில் இந்தப்பாலம் 21ம் நூற்றாண்டின் பொறியியல் துறையின் அதிசயத்தைக் காண இனிக் காலம் காலமாக அங்கு சுற்றுலாவுக்கு பெரும்திரளான மக்கள் கூடுவர் என்கிறார். பாலத்தின் மத்திய பகுதிகளில் 270 மீட்டர் உயரத்தூண்களும் அதற்குமேல் 90 மீட்டர் உலோகத்தால் ஆன உறுதியான கம்பமும் கொண்டது. பாலத்தின் மொத்த உயரம் 336 மீட்டர். பாலத்தின் கட்டுமானச் செலவு 4 ஆயிரம் கோடி இலங்கை ரூபாய்.



பாலங்கட்டுவதற்கு உபயோகிக்கும் உலோகம் லேசானதும் அதேசமயம் உறுதியானதாகவும் இருக்கும். 120 வருடங்கள் தாங்கும் சக்தி கொண்டது என உறுதி செய்யப்பட்டுள்ளது.
சுரங்க வழிப்பாதை கொண்டதூண்களில் பணியாளர்கள் வேலை செய்ய ஏற்றவகையில் அமைந்துள்ள மேடையை இங்கே காணலாம்.

# "முற்பிறப்பின் இரகசியம்"





முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் றெகனுக்கு 90 வது பிறந்த நாளின்போது!

நாம் அடுத்த பிறப்பில் என்னவாகப் பிறப்போம் என்கிற கரிசனையைவிட எலலோருக்குமே முற்பிறப்பில் என்னவாக நாம் பிறந்திருப்போம் என்ற எண்ணமே அதிகம்.

காதலித்து திருமணம் செயது கொண்டவர்கள் இது முற்பிறப்பின் தொடர்ச்சி என்பார்கள். நல்ல நண்பர்கள் தாம் முற்பிறப்பில் சகோதரங்களாக இருந்திருக் வேண்டும் என்பார்கள். இப்படியாக மனதில் தோன்றுவதை வாழ்வாக்கி வாழும் இயல்புடையவர்கள்தான் இந்த மனிதர்கள்.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி றோனால்ட் றேகன் 6.02.1911 ஆண்டு பிறந்தார். இவர் சினிமாத் துறையிலும் கைத்தொழில், வர்த்தகம் ஆகியவற்றிலும் உயர்படிப்பை பல்கலைக்கழகத்தில் முடித்தவர். 1937 இல் ஹொலிவூட்டில் கொடிகட்டிப் பறந்தார். Love is in the Air என்னும் படம் அவரின் புகழை உயர்த்தியது. 50க்கு மேற்பட்ட படங்களில் நடித்து முடித்தபின் 1965 இல் அரசியலுக்கு வந்தார். 1966 முதல் 1974 வரை கலிபொனியாவில் கவர்ணராக பதவிவகித்தார். 1980 இல் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜிம்மிக்காட்டைரைத் தோற்கடித்து ஜனாதிபதி யானார்.

உலகில் முதலாவது சினிமா நடிகர் மாநில முதல்வர் ஆனது தமிழகத்தில். அப்பெருமைக்குரியவர். எம்.ஜி.ஆர். அடுத்து ஒரு சினிமா நடிகர் ஜனாதிபதியாகியது அமெரிக்காவில். அவர்தான் டொனால் றேகன். 1989 ஆரம்பம் வரை பதவியில் இருந்தார்.



1994 இல் உடல் நலம்பாதிக்கப்பட்டார். அப்போது அவர் கூறினார் "இனி தனக்கு சூரிய அஸ்தமனம் என்று". தற்போது தன் அன்பு மனைவி நான்சியின் அரவணைப்பில் வாழ்ந்து வருகிறார். 1952 இல் நான்சியைத் திருமணம் செய்துகொண்டார்.

நீண்டகாலமாக சினிமாவுலகிலும் அரசியல் வானிலும் கொடிகட்டிப்பறந்த, சகலவல்லமை பொருந்திய ஒரு ஜனாதிபதியாக பதவிவகித்து தன் வாழ்வைக் கழித்த அந்த பெருமனிதருக்கு அப்போ 90 வயது.

அரசியல்வாதிகள்,சமூக வாதிகள், சினிமாவுலகம் என்று பல பொறுப்பான வர்கள் எல்லாம் பூக்கொடுத்து வாழ்த்தும் வேளை, அவருக்கு "நான் யார்?" என்று தெரியவில்லை. எனக்கேன் இந்த மரியாதை? என்பதை எல்லாம் மறந்து, பழையநினைவிழந்த நிலையில் இருந்தார்.

ஒரு சாதரண மனிதனாக தன்மனதுக்குள் வாழ்க்கை நடத்தும் முன்னாள் ஜானாதிபதி ரேகனுக்கு தன் வாழ்வின் முற்காலப் பகுதியே நினைவில் இல்லை என்றால், எப்படி எமக்கு முற்பிறப்பு நினைவில் வரும்.



வாழ்க்கையில் நாம் தேடும் பல வினாக்களுக்கு எம்கண்முன்னேயே விடைகள் பாய்விரித்துப் படுத்திருக்க நாம்தான் பாய்து பாய்து தேடுகிறோம்.முற்பிறப்பு எண்ணங்களை விட்டுவிட்டு இப்பிறப்பை கவனியுங்கள்.

இந்த நிலையில்லா வாழ்கையின் இரகசியத்தைச் சொல்லாமல் சொல்லி தன் 90வது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார் ஒரு மன்னன். இவர் தற்போது அமரத்துவம் எய்திவிட்டார்.

## உலகில்....



Jennifer Lopez

# அதிசய விலைகள்!!!

உலகத்தில் சிறந்தது எது என்று கேட்டால் தமிழர்கள் தயங்காது தாய் என்பர்.

ஆனால் இங்கு உலகத்தில் உயர்ந்தது அன்பால் அல்ல! பணத்தால்!! எது என்று பார்ப்போமா?

பிரபல பாடகியும் நடிகையுமான Jennifer Lopez தன்னைக் காப்புறுதி செய்து கொண்டதொகை என்னதெரியுமா?

ஒரு மில்யலின் டொலர் ஆகும். இதுவே உலகில் செய்யப்பட்ட அதிகூடியகாப்புறுதியாகும்.



உலகில் அமைந்துள்ள உயர் விடுதிகளில் துபாய் நாட்டில் அமைந்துள்ள Burj Al Arab என்ற விடுதியே அதிகூடிய பணம் வசூலிக்கும் விடுதியாக அமைந்துள்ளது. அங்கு ஒரு இரவிற்குத் தங்க 770 டொலர் முதல் 7.700 டொலர் வரை உயர்வான கட்டணத்தில் அழகிய அறைகள் வாடகைக்கு உள்ளது. வாழ்க்கை முழுவதும் செலவு செய்தாலும் இந்தப்பணம் ஒருவருக்கு முடியாது அல்லவா? (Mr அருணாச் சலத்தைத் தவிர - ரஜினியின் படம் )




அதிக விலையுள்ள காரின் பெயர் 250 GTO Ferrari. இதனது விலை 10 மில்லியன் டொலராகும்.



Burj Al Arab in Dubai

இவற்றை எல்லாம் விட உலகில் உயர்ந்த உருளைக் கிழங்கின் விலை தெரியுமா?

500 டொலர் ஒரு கிலோ. இந்த உருளைக்கிழங்கின் பெயர் LaBonntte இது பிரான்ஸ் நாட்டில் உற்பத்தி



# எப்படி! எப்படி!! படிப்படியாய்!!!

சிப்பிக்குள் முத்து இருக்கும் அந்த முத்தை வைத்தவன் இறைவன் என்றால், இந்த போத்தலுள் இந்தப் பெரிய பாதவணியை வைத்தவன் எவன்? அதே இறைவனால் படைக்கப்பட்ட மனிதனேதான்.

மிகவும் குறுகிய விட்டமுள்ள அதாவது துவாரமுள்ள (27மி.மி)அந்த போத்தலின் வாயினூடாக இந்த பெரிய (அளவு 7 ) ஒட்டகம் அதுதான் அப்பெரிய பாதவணி எப்படி நுழைந்தது. அதுதான் அதிசயம். ஆம்! அந்தச் சிறு துவாரமூடாக தோலை உள்ளே செலுத்தி போத்தல் வாயினில் தைக்கவேண்டிய பகுதியினைப் பிடித்துப், பிடித்து தைத்து முடிக்கப்பட்டது. முயற்சி திருவினையாக்கும் என்பதற்கு பாருங்கள் இந்தப் பாதஅணியே சான்று!

# தன் மனைவியைச் சிரிக்கவைக்காத சாலிச் சப்பிளின்!!!









உலகையே சிரிக்கவைத்தவர் சார்ளி சப்பிளின். இறந்தபின்னரும் மக்களை நகைச்சுவையால் பழையபடங்கள் மூலம் புதிய சந்ததியினரையும் சிரிக்க வைத்தவர் அவர்.இந்த நகைச்சுவை மன்னன் காதலிலும் மன்னன்.இவருக்கு நான்கு மனைவிமார். இவர்களில் ஒருவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விவாகரத்து மனுவில் அந்த மனைவி என்ன கூறினார் தெரியுமா? இது எவ்வளவு பெரிய அதிசயம் என்று.

உலகம் முழுவதையும் நகைச்சுவையில் ஆழ்த்தி, மனம் விட்டுச்சிரிக்க வைத்தவர், என்னுடன் வீட்டில் ஒரு முறையாவது சிரித்துப்பேசியது கிடையாது. அழாக் குறையாக இப்படிக் கூறியிருந்தார். வீட்டில் சிரிக்காத கலைஞர்கள் சப்பிளின் மட்டுமா?

# ஆகாயத்திலும் வேண்டும் இனி சமிக்கை விளக்குகள்



வெடித்துச் சிதறிய விமானத்தின் ஒரு பகுதி

இனி வரும் காலத்தில் பெரும் தெருக்களில் நடைபெறும் வாகன விபத்துக்கள்போல் ஆகாயத்திலும் நடக்கும் என்பதற்கு கட்டியம் கூறுவது போல் ஒரு விபத்து யேர்மனியில் நடைபெற்றது.

மஸ்கோவில் இருந்து புறப்பட்ட ஒரு பயணிகள் விமானம் ஒன்று ஸ்பெயின் நாட்டில் உள்ள பார்சியோனா நகருக்குச் சென்று கொண்டிருந்தது.

இதே போல் டி.எச்.எல் நிறுவனத்திற்குச் சொந்தமான 747 ரக சரக்குவிமானம் ஒன்று பக்ரைன் நாட்டில் இருந்து பெல்ஜியம் தலைநகரான பிரசல்சுக்கு சென்றது.

இந்த இரண்டு விமானங்களும் யேர்மனி எல்லையில் நேற்று அதிகாலை (யூலை2003) அண்டவெளியில் மோதி விபத்தில் சிக்கியது. இதனால் பயணிகள் விமானத்தில் சென்ற 69 பேரும் பலியானார்கள். இதில் 47 பேர் சிறுவர்கள். இவர்கள் விடுமுறையைக்கொண்டாட ஸ்பெயின் சென்றபோதே பலியானார்கள். விமானம் 12ஆயிரம் அடி உயரத்தில் மோதிக்கொண்டதால் 30 கிலோமீட்டர் தூரத்திற்கு விமானத்துண்டுகள் பரவிக்கிடந்தன.

விமானம் அடிபட்டபோது இடிமுழக்கம் போல் சத்தம்கேட்டது என்றும் விமானம் மூன்று துண்டுகளாக வெடித்துச் சிதறியதாகவும் நேரில் கண்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

சுவிஸ்நாட்டு கட்டுப்பாட்டு அதிகாரிகள் கொடுத்த தவறான தகவல்களே விபத்துக்கு காரணம் எனவும் சொல்லப்படுகிறது.

# காணாமல் போன ஓவியங்கள் 10 மில்லியன் Euro

பேர்லினில் அமைந்துள்ள கலாபவனத்தில் (Brücke Museum) அண்மையில் காணாமல் போன 9 ஓவியங்களின் விலை 10 மில்லியன் Euro என்று மதிப்பிடப்பட்டுள்ளது.




'உங்கள் இராணுவம்'



'அழகியபெண்ணே' 1908

இந்த ஓவியங்களில் பெரும் பாலானவை 90 வருடப் பழமை வாய்ந்தவை.

காணாமல் போன ஓவியங்களில் இரண்டு ஓவியங்களான 'உங்கள் இராணுவம்', 'அழகியபெண்ணே' என்கின்ற ஓவியங்களின் படங்களை இங்கே காணலாம்.



தூக்கமும் கண்களைத் தழுவட்டுமே
அமைதியும் நெஞ்சில் நிலவட்டுமே!

# தூக்கம் ஒரு அதிசயம்

*Good Night*

தூக்கத்தைப் பற்றி வெகுகாலமாகவே பலர் பலவித கருத்துக்களைக் கூறிவந்திருக்கின்றனர். ஷேக்ஸ்பியர் தன்னுடைய உலகப் பிரசித்தி பெற்ற மாக்பெத் என்ற நாடகத்தில் தூக்கத்தைப்பற்றி பலவிதமான புகழ்மாலை களைச் சூட்டுகிறார்.

கவலை என்ற கிழிந்துபோன சட்டையைத் தைத்து மூடும் சாதனம் தூக்கம். என்று கூறும் ஷேக்ஸ்பியர் தூக்கம் என்பது அன்றாடம் ஏற்படுகிற மரணம். அனால் மறுநாள் விழித்துக் கொள்கிறோம். என்றோ ஒரு நாள் உறங்குவது போலக் கண்மூடும் மனிதன் மறுபடியும் விழிப்பதே இல்லை. அதனால் இரவு தூங்கப்போகும் நாம் மறுநாள் எழுந்திடுவோம் என நிச்சயமாக நம்பிக் கொண்டு இருக்காதீர்கள் என மக்களை எச்சரிக்கவும் செய்கின்றார்.

கடுமையான உழைப்பினால் உண்டாகும் அலுப்பினைக் கழுவித்தள்ளும் குளியல்தான் தூக்கம் என்று மொழிகிறார்.

ஷேக்ஸ்பியர் மேலும் சொல்கிறார். தளர்ந்து போன மனத்திற்கு தூக்கம் ஒத்தடம் கொடுக்கிறது.தூக்கம் இறைவன் தந்த விலைமதிப்பற்ற கொடை. வாழ்க்கை என்ற விருந்தில் பரிமாறப்படும் அருமையான ஊட்டச்சத்து தூக்கம். உங்கள் அருகில் தன்னை மறந்து தூங்கும் உங்கள் மனைவியைப் பாருங்கள் காலை முதல் மாலை வரை பம்பரமாய் இயங்கிய அவளுக்கு இந்த தூக்கமும் இரவில் இல்லை என்றால் அந்தக் குடும்பப் பெண்ணுக்கு ஓய்வுதான் எப்போது? பகல் முழுக்க உழைத்து வியர்வை சிந்திய கணவன் தன்னை மறந்து தூங்குவதும் இந்த இராப்பொழுதில்தான்.

ஆண்டவன் இரவைக் கொடுத்தது மனிதனுக்கு உடலில் ஒரு பகலைக் கொடுப் பதற்காகவே. ஷேக்ஸ்பியரின் உணர்ச்சிபூர்வமான இந்த மொழிகள் தூக்கத்தை பற்றி தெளிவான விளக்கங்களாக அமைந்து உள்ளன.

மனித உடல், உள்ளம் ஆகிய இரண்டின் நலத்தையும் காக்கவும், மீட்கவும் இயற்கையளித்த விலைமதிப்பற்ற அதிசயப் பரிசு உறக்கம். தூங்குவதற்கு முன் குறைந்தது இரண்டு மணிநேரத்திற்கு முன்பு உண்ணுங்கள். உண்ணும் வேளையில் விவாதங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் உறங்குவதற்கு முன் நல்லதோ கெட்டதோ எந்தச் சிந்தைனைகளும் இன்றி மனதை அமைதியாக வைத்துக்கொண்டு தூங்கச் செல்லுங்கள்.

எதையாவது நினைக்கத் தொடங்கினால் நினைவுகள் சங்கிலித் தொடர்பு களாக வந்து தூக்க நேரத்தில் பாதியை விழுங்கிவிடும். உறங்குவதும் விழிப்பதும் அவன் கையில். அதனால்தான் மேலைத் தேசத்தவர் உறங்கச்செல்லும் முன் Good Night என்று வாழ்த்தி அனுப்புகின்றார்கள்.




மலரும் மங்கையும் ஒரு ஜாதி என்று ஒரு பழைய பாடல் காற்றலைகளில் தவழ்ந்துவந்து அது வானவெளியில் அண்டவெளி ஆய்வுகூடத்தின் மூலம் மொழிபெயர்ப்புச் செய்யப்பெற்று நெதர்லாந்து மொழியில் ஒலித்திருக்கிறது. அப்பாடலைக் கேட்டுவியந்து நின்றவேளை பூந்தோட்டத்தில் மஞ்சள் பூவொன்று புன்னகைத்து மலர்ந்தது.

புன்னகையை உற்று நோக்கியவர்களுக்கு உலக அதிசயமாகப்பட்டது அந்தப் புன்னகை அழகு.

ஆனால்,

அந்தப் புன்னகையில் புதிர் இருக்கவில்லை.

இருந்திருந்தால் அவள் மோனோலிசாவாக அல்லவா தெரிந்திருப்பாள்.

இந்தப் புன்னகை ஜில் எனக் குளிர்ந்தது. அவர்களுக்குப்புரிந்தது உலக அழகிதான் என்று. உலக அழகிகள் ஆண்டு தோறும் வந்து போனாலும் நிரந்தரமாக ஒரு அழகியே தங்கிவிட்டாள் அவர்தான் ஐஸ்வர்ய ராய்.

உடன் அப்பெயரையே அந்தப் புதுமலருக்கு வைத்துவிட்டனர். தற்போது நெதர்லாந்தில் மலர்த் தோட்டத்தில் உல்லாசப் பயணிகளைக் கவரு கிறாள் அந்த ஐஸ்வர்ய மலர். பிழைக்கத் தெரிந்தவர்கள்.

உள்ளூர் மலருக்கு உலக அழகியின் பெயரை வைத்து சுற்றுலாப் பயணிகளை சுற்றி எடுத்து விடுகிறார்கள்.


பிழைக்கத்தெரிந்த நெதர்லாந்து அரசு.

நாம் என்ன குறைவா முடிதிருத்தும் நிலையத் திற்குக்கூட "கெனடி சலூன்" என்று பெயர்வைத்து பிழைக்கவில்லையா?

சுற்றிப்பார்த்தால் வானம் மட்டுமல்ல உலகமும் ஒரே நிறம்தான்.

**செய்தி:** நெதர்லாந்தில் உள்ள பூந்தோட்டம் ஒன்றில் பூத்த ஒரு புது மலருக்கு உலகழகி ஐஸ்வர்யாராயின் பெயரைச் சூட்டியுள்ளார்கள், உல்லாசப் பயணிகளைக் கவருவதற்காக.





## யேர்மனியின் அற்புத வேகம்!!!

## கொழும்பு - யாழ்ப்பாணம் ஒரு மணித்தியாலம்!

குழந்தைக்கு இனிப்புக் காட்டுவதுபோல் உங்களுக்கும் இனிப்புக் காட்டினால்தான் வாசிப்பே தொடரும். அதுதான் கொழும்பு யாழ்ப்பாணம் என்று இனிப்புக் காட்டப்பட்டது. இனிச் செய்திக்கு வாருங்கள். மின்னல் வேகத்தில் பாய்ந்து செல்லக்கூடிய காந்த ரெயில் வண்டி யேர்மனியின் கைவண்ணத்தில் உருவாகியுள்ளது. இதன் அதிகூடிய வேகம் மணிக்கு 439.கிலோ.மீட்டர்கள். கிட்டத்தட்ட ஒரு பெரிய விமானம் தரையைவிட்டுக் கிளம்புவதற்கு ஓடும் வேகத்திலும் 100 கூட. இதுவே உலகத்தில் தரையில் ஓடும் ரெயில்களில் அதிவேகமானது ஆகும். சராசரி வேகம் மணிக்கு 350 கிலோ மீட்டர். வேகமாகச் செல்வதால் தடம் புரண்டுவிடும் என்று எண்ண வேண்டாம். இது தண்டவாளத்தில் ஓடவில்லை. இது நிலத்தில் ஒரு பிரத்தியேகமான தளத்தில் காந்த அதிர்வில் பறக்கிறது. இதற்கு வழமையான வண்டிக்குத் தேவைப்படும் எரிபொருளிலும் பார்க்க 50 வீதம் குறைவாகவே தேவைப்படுகின்றது.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் ஒரு மணித்தியலத்தில் வந்து விடும். பொல்காவலை-மதவாச்சி-வவுனியா-யாழ்ப்பாணம் இந்த மூன்று இடத்திலும் 7 நிமிடம் தரித்துச் செல்லலாம். ஆனால் முந்தினதுபோல் வாசலில் தொங்கும் விளையாட்டுகள் சரிப்பட்டுவராது. வெளியில் நின்று காப்பி!காப்பி!! காப்பி!!!அல்லது ரம்புட்டான் ரம்புட்டானோ! இல்லை! வடை! வடை வடையோ விற்பனை செய்யமுடியாது.

அந்தளவிற்கு வேகம் அதிகம். காலத்தின் வேகத்திற்கு நாமும் எமது பழக்க வழக்கங்களை மாற்றிக்கொண்டு ஓடினால் இந்த வண்டி கொழும்பில் இருந்து ஒரு மணித்தியாலத்தில் யாழ்ப்பாணம் போய்ச்சேரும். இதற்கு முன் ஒரு வண்டி சரியாக வந்து முதலில் சேரவேண்டும். அதுதான் சமாதானம் என்கின்ற வண்டி.

## நம்பமுடியவில்லை ஆனால், உண்மை! உண்மை!!உண்மை!!!

நோர்வேயிலுள்ள இலங்கை மாணவர்கள் அந்நாட்டு மாணவர்களைவிட உயர்கல்வியில் பிரகாசிக்கின்றார்கள் என்று நோர்வே புள்ளி விவரப் பணியகம் தெரிவித்திருக்கிறது.

நோர்வேயில் 19 வயதுக்கும் 24 வயதுக்கும் இடைப்பட்ட நோர்வேக்காரர்கள் தொகையில் 26சதவீதமானவர்கள் உயர்கல்விக்குத் தகுதி பெறுகிறார்கள்.

ஆனால், அதே வயதுக்குட்பட்ட இலங்கை மாணவர்கள் 48.7 சதவீத மானவர்கள் உயர்கல்விக்குத் தகுதிபெறுகிறார்கள்.

ஜேர்மன் மாணவர்கள் 37.8 சத வீதமும், வியட்னாமியர்கள் 37.1 சதவீதமும், இந்தியர்கள் 33சதவீதமும் உயர்கல்விக்குத் தகுதி பெறுகிறார்கள் என்று மேற்படி புள்ளி விவரப் பணியகம் அறிவித்துள்ளது.

May 2003

# அந்நியமண்ணிலும் ஆனந்தம் கொடுத்தது கலையே!





பழைய மரத்தில் புதுமைக்கனிகள்

கண்ணா 2004



யேர்மனியில் *B.M.W* புதியகார் களின் மின்சார உபகரணங்களைக் கொண்டு உருவாக்கப்பெற்ற நவீன சிற்பம் இது.

இச்சிற்பம் கடந்த 24.02.04 அன்று ***Kostal*** தொழிலகத்தில் அதன் தயாரிப்பு முகாமையாளர் ஓய்வு பெற்றுச் சென்றவேளை தொழி லாளர்கள் சார்பில் வழங்கிக் கௌரவிக் கப்பட்டது.

இச்சிலையினை மேற்படி நிறு வனத்தில் தொழில் புரியும் மு.க.சு. சிவகுமாரன் (கண்ணா) வடிவமைத் துள்ளார்.

முகாமையாளர் சிற்பத்தைப்பற்றிக் கூறுகையில் 20 வருடங்களுக்கு மேலாக நாட்டைப்பிரிந்து இங்கு வாழ்வதற்கு எங்கள் தொழிலகம் பணத்தை வழங்கியிருக்கலாம். ஆனால் மனதுக்கு மகிழ்வை உங்களிடம் உள்ள கலையே வழங்கியிருக்கும் என்று பாராட் டினார்.

மேலும் அச்சிற்பம்...

"பழையமரத்தில் புதியகனிகள்" என்னும் கருத்தைச் சுமந்து நிற்கிறது.

அதாவது மிகப்பழமைவாய்ந்த தொழிலகம், ஆனால் தயாரிப்பது நவீன மோட்டார் மின்சார உப கரணங்களையே!








# மெதுவாக உன்னைத் தொட்டு

இன்று தமிழகத்துக்குப்பின் அதிக தமிழ் படங்களை தயாரிக்கும் ஒரு நாடாக கனடா விளங்குகின்றது.

அங்கு தொடர்ச்சியாக 12 படங்களுக்கு மேல் தாயரித்துள்ளனர். இன்னும் பல வெளிவரக்காத் திருக்கின்றது.

தமிழ்நாட்டுடன் கூட்டாகவும் முயற்சிகள் நடைபெறுகின்றன. தற்போது மெதுவாக உன்னைத் தொட்டு என்னும் திரைப் படம் அண்மையில் வெளியிடப்பட்டது.

திரு.ரவி.அச்சுதனின் கைவண்ணத்தில் உருவாகியுள்ளது. இப்படத்தினை திரு பரா அவர்கள் தயாரித்துள்ளார்.

படப்பிடிப்பு படத்தொகுப்பு காட்சி அமைப்புக்கள் யாவும் அற்புதம். வியாபரத்தில் தோல்வி காணாதபடி ஒவ்வொரு அடியும் திட்டமிடப்பட்டு எடுக்கப்பட்டது புரிகிறது.

இது நிச்சயமாக ஒரு கலைப் படைப்பு என்ற ஒரு வட்டத்துக்குள் தன்னைத் திணிக்கவில்லை. தமிழ்நாட்டுக்கு நிகராக எடுக்கமுயலும் ஒரு முயற்சியாகத் தோன்றுகிறது. வரவேற்கின்றோம் ஆனால் எங்கள் அடையாளங்களைத் தொலைத்து விடாது வெற்றிகாண வாழ்த்துகின்றோம்.




# ஆரணியின் கலை ஆர்வம்



சிறுமி ஆரணி செல்வேந்திரகுமார் சென்ற வருடம் (2005) யாழ் மாவட்டங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட தமிழ்த்தின நடனப் போட்டியில் மற்றும் வடக்கு, கிழக்கு மாகாண மட்டப் போட்டிகளில் முதலிடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தைத் தனதாக்கி அகில இலங்கை ரீதியிலும் முதன் நிலை பெற்றார்



யாழ் உடுவில் மகளிர் கல்லூரி மாணவியான செல்வி ஆரணி செல்வேந்திரகுமார், உரும்பிராய் "கலைக்கோயில்" நாட்டியப்பள்ளி அதிபரும் யாழ் கல்வி வலய நடன ஆசிரிய ஆலோசகருமான திருமதி பத்மினி செல்வேந்திரகுமார் அவர்களின் புதல்வியுமாவார். சின்னஞ் சிறுவயதில் பரதத்தில் இத்தனை சித்திரங்களா! ஆரணிக்கு வெற்றிமணியின் வாழ்த்துக்கள்

## வேலி





கனடாவில் அதிகமான தமிழ்படங்கள் தயாராகிவருகின்றது. ஈழத்தமிழர் திரைப்படம் என்ற தனித்துவத்தையும் பேணிக்கொண்டு ஒரு திரையுலகம் அங்கு மலர்கிறது. பல திரைப்படங்கள் குறும்படங்களாக மட்டுமல்ல நெடும் படங்களாகத் தயாராகின்றன. இந்த வகையில் வேலி திரைப்படத்தின் சிலகாட்சிகளை இங்கே காணலாம். இப்படத்தில் அன்ரன் பீலிக்ஸ், சித்ரா பீலிக்ஸ் மதிவாசன் தர்ஷினி இந்திரசித் சைலா சிறிமுருகன் கதிர்.துரைசிங்கம் இன்னும்பலர் நடிக்கின்றனர். "எங்கோ தொலைவில்" படத்தயாரிப்பாளரும் கலகலப்பு படத்தின் இயக்குனருமான மதிவாசன் சீனிவாசகம் தாயாரித்து இயக்குகின்றார். கதை வசனம் குரு அரவிந்தன். இசை பவதாரணி. ஒளிப்பதிவு இந்திரசித். இத்திரைப் படம் வேகமாக வளருகின்றது.

# ஆக்கமும் அழிவும்



## வானத்தை தொடும் வீரனின் சிற்பம்

சாகாவரம் பெற்றவை கலைகள். இன்று இந்தியாவில் ஏன் இலங்கை யில்கூட மனித இனத்தைவிட நீண்ட ஆயுளுடன் வாழ்பவை எது என்று கேட்டால் அங்குள்ள சிற்பங்களும், ஓவியங்களும் என்று சொல்லிவிடலாம்.
அந்தச்சிற்பங்கள் எல்லாம் அன்றைய மனிதர்களின் நீண்டநாள் உழைப்பின் வெளிப்பாடேயாகும். எத்தனை வருடங்கள் எடுத்திருக்கும் அந்தச் சிற்பங்கள் உயிர்பெற என்பதை விளக்குவதாக அமைந்துள்ளது இங்கே நீங்கள் காணும் இந்த சிவப்பிந்திய வீரனின் சிற்பம்.
அமெரிக்க சிவப்பு இந்தியர்களின் மனதை விட்டகலாத மாவீரன்தான் கிரேசிஹர்ஸ். அவன் வீரம் எப்படிப் பிரமாண்டமானதோ அதேபோல் அவன் உருவத்தையும் பிரமாண்டமாகப் படைக்கமுனைந்தனர் சிவப்பிந்தியர்கள். அதற்கு பெரும் கரும்மலைத்தொடர் ஒன்றையும் தேர்ந்தெடுத்தனர்.
அச்சிலையின் உயரம் 564 அடி,அகலம் 641 அடி. இதனைச் செய்வதற்கு 1948 ம் ஆண்டு ஆரம்பித்தனர். இன்று 53 வருடங்களுக்குப்பின்னர் அந்த வீரனின் தலைமட்டுமே முடிக்கப்படுள்ளது. தலையின் உயரம் மட்டும் 87 அடியாகும்.
கருங்கல் பாறை என்பதனால் வெடிவைத்துத் தகர்த்தே இந்த உருவம் அவதானமாகப் படைக்கப்படுகிறது. குதிரையில் வேகமாகச் செல்வது போன்ற உருவமே அங்கு அமைத்து கொண்டு இருக்கும் உருவமாகும். இதனை முடிப்பதற்கு இன்னும் எத்தனை ஆண்டுகள் செல்லும் என்பது சொல்ல முடியாது.
ஆக்க நூறுநாள் அழிக்க ஒரு நிமிடம் என்ற கதையாகிவிட்ட அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள உலக வர்த்தகமையக் கட்டி டத்திற்கு நேர்ந்தகதியை எண்ணிப்பாருங்கள்.
இந்தக்கடின உழைப்பில் உருவாகும் சிலையை நாளை காப்பதுயார்?
செப்ரம்பர் 11. அக்கொடிய நிகழ்ச்சியில் 20 ஆயிரத்துக்குமேல் உயிர் பலிகொண்டது.
ஏன் நம் தாயகத்தில் தினம் தினம்.... மனிதம் சிலையாகி விட்ட நிலையில் உலகம் சுற்றுகிறது..



செல்வி சாரா மிக்கொளாய்

# "ஆடற் கலையரசி" 2005
# சாரா மிக்கொளாய்



புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் தாம் வாழும் இடம் எங்கும் தம் மொழி கலாச்சாரம் என் பவற்றை பின்பற்றி வாழவே விரும்பு கின்றனர். இந்த விருப்பம் ஒவ் வொருவர் மனதிலும் பூத்துக் குலுங்குவதை அங்கு நடைபெறும் கலைநிகழ்வுகள் மூலம் காணக் கூடியதாக உள்ளது.

ஒரு தமிழ் மகளின் பேச்சில் அசைவில் பரதம் பூப்பது தாயகத்தில் வீட்டு முற்றத்தில் பூத்துக் குலுங்கும் மல்லிகைக்கு ஒப்பாகும். ஆனால் இருமொழிக் கலாச்சாரத்தில் பிறந்து வளர்ந்து புலம்பெயர்நாட்டில் நிறம் மணம் குணம் மாறது மல்லிகையாக மணம்பரப்புவது என்பது சாதாரணம் அல்ல. இந்த வகையில் செல்வி சாரா மிக்கொளாய் அவர்கள் பரதத்தின் மீது காட்டும் ஆர்வமும் அதன் மூலம் பெறும் வெற்றிகளும் தமிழுக்கும் பரதத்திற்கும் பெருமை சேர்க்கின்றது.

யேர்மனியில் 2005 இல் ஆடற் கலையரசியாக சாரா மிக்கொளாய் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தமிழர் கலைபண்பாட்டுக் கழகம் -யேர்மன்கிளை நடத்திய மாபெரும் நடனப் போட்டியில் "தித் தித் தெய் 2005" நிகழ்வில், நூற்று முப்பது நடன மாணவர்கள் கலந்து சிறப்பித்த, நடன நிகழ்ச்சி 05,06 கார்த்திகை மாதம் சனி,ஞாயிற்றுக்கிழமைகளில் வூப்பெற்றால், வூப்பர் மண்டபத்தில் பெருந் திரளான மக்கள் மத்தியில் நடைபெற்றது.

தனிநடனம், குழுநடனம், எழுச்சி நாட்டியநடனம், அபிநயநடனம், புஷ்பாஞ்சலி, கீர்த்தனம், தில்லானா, பதம்,வர்ணம் ஆகிய நடனங்கள் ஆடற்கலையரசி விருதுப் போட்டிகளுக்கான நடனங்களாக அரங்கேறின.

பலத்த போட்டிகளின் மத்தியில் "ஆடற்கலையரசி"யாக செல்வி.சாரா மிக்கொளாய் தேர்ந்தெடுக்கப்பட்டார்.


இவர் பேர்லின் அவைக்காற்று அபிநயதர்ப்பனாப் பள்ளிமாணவியும் பள்ளி அதிபர் திருமதி டயானா மிக்கொளாய் அவர்களின் மாணவியும், அவரது மகளுமாவார், இருமொழிக் கலாசாரத்தில் வளரும் இந்த நடனச் செல்வி அண்மையில் 19.06.05 இல் முறைப்படி நடனக் கலை பயின்று அரங்கேற்றம் கண்டவர்.மேற்படி அரங்கேற்றத்தில் பிரதம விருந்தினராக கவிதா ஞானவாரிதி கோசல்யா சொர்ணலிங்கம் அவர்களும் சிறப்பு விருந்தினராக அருட்தந்தை றெக்னோ அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

மொழிகளை கடந்து நிற்கிறது நம்கலைகள்.

# ஈழக் கலைஞர்களின் தயாரிப்பில் சுகம் சுகமே



டெனிமிசன்-மெட்டி ஒலி புகழ் புவனா




டெனிமிசன்-இயக்குனர், ரவிஅர்ச்சுதன்-புவனா

ஈழத் தமிழ்க் கலைஞர்களின் கை வண்ணத்தில் உருவாகி தமிழ்ப் புத்தாண்டில் வெளிவந்தது. சுகம் சுகேமே.

இத்திரைப்படத்தினை கனடா நாட்டில் திரு. ஸ்ரீமுருகன் தாயாரித்து அத்துடன் முக்கிய பாத்திரத்திலும் நடித்துள்ளார். இதன் திரைக்கதை வசனத்தை பிரபல எழுத்தாளர் குரு.அரவிந்தன் எழுத படத்தினை இயக்கி ஒளிப்பதிவு செய்துள்ளார் ரவி அர்ச்சுதன். படத்திற்கு இசை கபிலேஸ்வர். படத்தின் பெரும்பகுதி தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் படமாக்கப்பட்டுள்ளது.

படத்தின் முக்கிய பாத்திரத்தில் மெட்டி ஒலி புகழ் புவனா (காவிரி) நடிக்கின்றார். இவருக்கு ஜோடியாக நம்நாட்டு இளம் கலைஞர் டெனிமிசன் நடிக்கின்றார். மற்றும் தமிழகக் கலைஞர்களான மாரி முத்து பாண்டு ஆகியோரும் நமது கலைஞர்கள் கதிர்.துரைசிங்கம், கரு.கந்தையா உட்பட பல முன்னணி ஈழக் கலைஞர்களும் சிறு சிறு பாத்திரங்களில் வந்து கலக்குகிறார்கள்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் திரைப் படத்துறையில் பலம் பெற சுகம் சுகமே சுகமாக உதவும் என எதிர்பார்க்கின்றோம்.



பாண்டு - ஸ்ரீமுருகன்

## அந்த நாள் ஞாபகம்




தாயகத்தில் கட்டிடக்கலைஞர் திரு வி.எஸ். துரைராஜா அவர்களால் 1972ம் ஆண்டு தயாரித்து வெளியிடப்பட்ட படம் குத்துவிளக்கு.

இப்படத்தின் நாயகன் ராஜாமணி. நாயகி நாட்டியமயில் லீலா நாராயணன். (திருமதி லீலா ஆறுமுகையா) "ஈழத்திரு நாடே என்னருமைத் தாயகமே இரு கரகூப்புகின்றேன் வணக்கமையா" என அமரர் குலசீலநாதனின் பாடல் இன்றும் ஒலிக்கின்றது.

# உடற் சிற்பங்கள்



ஒரு சிற்பி தன்மனதில் வடித்த உருவத்திற்கு உயிர்கொடுக்க ஒரு ஊடகம் தேவை. அது கல்லாக இருக்கலாம் இல்லை மரமாகவும் இருக்கலாம். ஏன் மணலாகவும் இருக்கலாம். எதுவாக இருந்தாலும் அவன் தன் எண்ணத்தை பதிவுசெய்து பார்ப்பவர்களுக்கு தன் உணர்வை வெளிப்படுத்துவதில் வெற்றியும் கொள்கிறான்.



ஓவியமும் சிற்பமும் நம்முன்னோர்களது வாழ்வை பதிவு செய்து வைத்திருக்கும் உன்னதமான ஒரு கணனி என்றுகூடச் சொல்லலாம்.

மனிதன் தன் உணர்வுகளை வேறு ஊடகத்தின் மூலம் வெளிப்படுத்துவது ஒருவகை. மற்றயது தன் உணர்வை தன் உடல் மூலம் வெளிப்படுத்துவது இன்னுமொரு வகை. நவரசங்களையும் வெளிப் படுத்தும் வகையில் பரதமும் நாடகங்களும் முதல் இடம் வகிக்கின்றன.



பரதத்தில் மயில் போல் அபிநயம்பிடித்து அசைவுகள் கொடுத்து மயிலை மனக்கண்முன் கொண்டுவருகின்றார்கள். இப்போ ஓவியத்திலும் சிற்பத்திலும் மனிதன் தன் எண்ணக்கருத்து களுக்கும், தேடல்களுக்கும் தன் உடலை ஊடகமாக்கி தனது சிற்பத்தை, ஓவியத்தை படைக்கின்றான்.

உதாரணமாக ஒரு நாய் என்று வைத்துக்கொண்டால் அதன் உருவத்தை தனது கைகளில் வடித்து அவற்றிற்கு வர்ணம் தீட்டி அப்படியே அதனை ஒரு சிற்பமாக வெளிக்கொணர்கின்றான்.

கைளைப்பொத்தி விரல்களை மடக்கி வரும் உருவத்துக்குள் அவன் தேடல் ஒரு யானையைக் காண்கின்றது.

படுத்திருக்கும் ஒரு பெண்ணின் இடைவளைவு ஒரு வாத்தியமாகிறது. குந்தி இருக்கும் பெண்ணின் உடலில் ஒரு சிங்கம் கர்ச்சிக்கிறது.

இப்படியாக உடலில் ஒவ்வொரு அவையகத்திலும் காணக்கூடிய சில உருவங்களின் குறிப்பறிந்து அவற்றைக் கலையுடன் கருக்கட்டிக் கொள் கின்றான். பின் அவற்றிற்கு வர்ணம் தீட்டுகின்றான். அங்கே அந்த உருவங்கள் உடலில் இன்னும் ஒரு உயிருக்கான உடலமைப்பைப் பெற்று சிற்பமாகின்றது. இப்படியாக கலைஞன் உடலை வளைத்து வடித்த சில சிற்பங்களை இங்கே காணலாம்.

ஓவியமும் சிற்பமும் உடம்பினை ஊடகமாக்கி உணர்வுக்கு புது உயிர்கொடுக்கும் வல்லமையைப்பாருங்கள்.








# நம்மவர் இசையில் கலாபக்காதலன்

தாயகத்தில் இருந்து தமிழ்நாட்டில் திரையுலகில் கொடிகட்டிப்பறந்தவர்கள் அன்று இயக்குநர் சி.குகநாதனின் சுடரும் சூறாவளியம், அன்னையும் பிதாவும், கன்னிப்பெண்,நடிகர்திலகத்தின் ராஜபாட் ரங்கதுரை மக்கள் திலகத்தின் குமரிக்கோட்டம் என்பன பெயர் சொல்லவைத்தன. பின்னர் மட்டுநகர் பாலுமகேந்திரா மூன்றாம்பிறை மூடுபனி அழியாத கோலங்கள், மறுபடியும், உன்கண்ணில் நீர்வழிந்தால், நீங்கள் கேட்டவை, சதிலீலாவதி இரைட்டைவால் குருவி, வீடு என ஒரு கலக்கு கலக்கினார்.கலக்குகிறார்.
திரு.அருமநாயகம் எம்.ஜி.ஆர் நடித்த நாம்,அரசகட்டளை,நாகேஷ் நடித்த யாருக்காக அழுதான் படத்திலும் படத்தொகுப்பில் சிறப்பாகப் பணியாற்றினார். தாவடி ஜெய் ஆகாஷ் நடிகனாக இன்று திகழ்கின்றார்.

தற்போது இசையமைப்பாளராக தாயகத்தின் பெயர் சொல்ல நிரு அவர்கள் "கலாபக் காதலன்" படத்திற்கு இசையமைக்கின்றார். அத்தனை பாடல்களும் கேட்கும்படியாக அமைந்துள்ளது. அத்துடன் இன்னும் பல படங்கள் அவரை நாடிவந்துள்ளன.
முதலில் இவர் இசையமைத்தது கவிஞர் அறிவுமதியின் சுனாமி அனர்த்தங்களை பதிவு செய்யும் பாடல்களான "நீலம்" எனும் ஒலிப் பேழையே.








இதன்மூலம் இவரைத்தேடி திரைப்படங்கள் வந்தன. திரு நிரு. அவர்களது பாடல்கள் ரி.ரி.என் தொலைக் காட்சியில் அடிக்கடி ஒலிபரப்பானது என்பதனை நேயர்கள் அறிந்திருப்பார்கள்.
கடின உழைப்பிற்கு கிடைத்த வெற்றியே இது.

**அரசகட்டளை**

# வர்ணச் சமநிலை வடிவச் சமநிலை

**ஓவியப் பார்வை**

**மேனி உடையானது உடை மேனியானது!**



மேகம் கப்பலானது
கப்பல் மேகமானது
பாலம் தூதுபோனது

ஓவியம் என்றால் தூரிகையை வர்ணத்தில் குழைத்து திரையில் தன் மனதைப்பதிப்பது மட்டுமல்ல.

தூரிகை ஒரு காரிகையாகவும் இருக்கலாம்.

வர்ணம் அவள் உடலை மறைத்திருக்கும் திரையாகவும் அமையலாம்.

ஆனால் அங்கு எல்லாம் ஒருவித வர்ணச் சமநிலை உருவச் சமநிலை இருந்தாக வேண்டும். இது நவீன ஓவியத்திற்கும் பொருந்தும். (உண்மையில் நவீன ஓவியம் என்ற சொற்பதமே சர்ச்சைக் குரியது. நவீன ஓவியம் என்பது ஓவியத்தில் புராணச்சித்திரங்கள், இயற்கை ஓவியங்கள், கற்பனைச் சித்திரங்கள் போல் இதுவும் ஒரு பிரிவாகக் கொள்ளலாம் என்றே சொல்ல முடியும்.)

இங்கே வர்ணச் சமநிலை வர்ண வடிவச் சமநிலை என்பவற்றைக் கொண்டு ஒரு ஓவியமாக ஒரு பெண் நிற்கின்றாள்.

அது நடிகை மும்தாஜ் என்பது புறநிலைப் பார்வை.

அகப்பார்வையில் அவள் ஒரு ஓவியம்.


கீழே பல குதிரைகள் நிற்கின்றது. அதன்கீழே மலையும் சிறுமடுக்களும் நிழல்களுடன் தெரிகின்றன.

அதில் பார்த்தால் குதிரையின் சிலவரி வடிவங்கள் அதாவது வடிவங்கள் நிலத்தில் உள்ள மலை வடிவங்களுடன் ஒத்து வடிவச் சமநிலையில் ஒரு ஓவியத்தைத் தருகின்றது.

அங்கே மும்தாஜ் தொலைந்து ஓவியமானது போல், இங்கே குதிரை தொலைந்து ஓவியமாகிறது. மேலே பெண் ஓவியமாகக்காரணம்.

அவள் உடையில் உள்ள முத்துக்கள் அப்படியே பரவி, அவள் முகத்தையும் உடையாக்கிறது. அதேபோல் அவள் தளிர்மேனியில் உள்ள முத்துக்கள் பரவி அவள் உடையையும் மேனியாக்கிறது. இதனால் உடலும் உடையும் ஒரு சமநிலையில் ஒன்றை ஒன்று ஓவியமாக்குகின்றது.

இதேபோல் வருங்காலத்தில் உடையலங்காரத்தில் பல மாற்றங் களைக் கொண்டுவரலாம். அதாவது சேலைகட்டும் ஒரு பெண் அந்தச் சேலையில் உள்ள மகர ஓவியத்தையோ,அல்லது மயில் ஓவியத் தையோ தன் உடலிலும் வரைந்து கொண்டு ஒரு சமநிலையைக் கொண்டு வரலாம், அல்லது சேலையுடனேயே அதே சேலையின் ஒரு பகுதிக்கரையை Sticker ஆக சேர்த்துக்கொடுத்தால் அதனை தனது உடலில் ஒட்டிக்கொள்ளலாம். இது சேலைக்கு மட்டுமல்ல பஞ்சாபி போன்ற உடைகளுக்கும் பொருந்தும். ஏன் ஆண்களுக்கு இப்படி வராதா என்றால் அழகு என்றவார்த்தைப் பிரயோகமே பெண்களுக்கு உரியது. அது இயற்கை மனமுவந்து வழங்கிய ஒரு செல்வம் அவர்களுக்கு. ஒரு ஆணைப்பார்த்து அழகன் என்று சொன்னால் அதில் அவன் கம்பீரமே அழகைக்குறிக்கும். அப்பாவின் கம்பீரமும் அம்மாவின் அழகும்தானே என்றும் பேரழகு. சாதாரண பார்வை வேறு, ஓவியப் பார்வை பேராறு. அது ஓடிக்கொண்டே இருக்கும்.



## மண்ணுக்குள் மருந்து

## சேறு பூசும் திருவிழா

உலகில் பூத்துக்குலுங்கும் செடிகள் மரங்கள் அனைத்துக்கும் தேவையான கனி உப்புக்களை இந்த மண்ணே வழங்குகின்றது.

மரங்களுக்கு மட்டுமா? மனிதருக்கும் இந்த மண்ணின் கனி உப்புக்கள் தேவைதான். இதனைப் பெறுவதற்கு முன்னைய காலத்தில் சேற்றுத் திருவிழா என்று ஒரு விழாவினை பிலிப்பைன்ஸ் நாட்டில் கொண்டாடி வருகின்றனர்..

முன்னர் மதச் சார்பாக ஆண்டவன் வாழக்கொடுத்த மண்ணை உடல் எங்கும் பூசி ஆண்டவனை ஆராதிப்பதாக இச்சடங்கு அமைந்தது.

இப்பொழுது அங்கு பல மாகாணங்களில் இத்திருவிழா ஒரு கலாச்சார விழாவாகக் கொண்டாடப் பட்டு வருகின்றது.

குறிப்பாக இச்சடங்கில் அதிகமான பெண்கள் இன்றும் அந்நாட்டில் கலந்து கொள்கிறார்கள். நமது நாட்டிலும் குளத்துக் களிமண்ணை கால் நோவிற்குப் பூசும் பழக்கம் உண்டு. அதுமட்டுமன்றி கடலோரத்தில் மணலுக்குள் கால்களைப் புதைத்து வாதநோய்க்கு மருந்து தேடுபவர்களும் ஏராளம். குறிப்பாக இவ்விழாவைப் பெண்கள் விரும்பிக் கொண்டாடுவதற்கு காரணம் உண்டு. பெண்கள் தங்கள் அழகை என்றும் இளமையாக வைத்துக் கொள்ள விரும்புவார்கள். மனிதனின் முதுமையின் முகவரி சருமம்தான். அந்தச்சருமத்தின் காய்ந்த உலர்ந்த தன்மையை இச்சேற்றுத் திருவிழா பெரிதாகக் குறைக்கின்றது. சருமத்திற்குப் பளபள என ஈரலிப்புடன்கூடிய மெருகைக் கொடுக்கின்றது. மண்தரும் மருந்தை பண்டைக் காலத்தில் ஒரு கலாச்சார விழாவாக்கி மக்கள் பலன் பெறவைத்த நிகழ்வைப் பாருங்கள். உங்கள் முளங்காலைத் தடவிப்பாருங்கள் அன்று அப்புண்களுக்கு மருந்தானதும் அந்த மண்ணல்லவா!கலைகளும் பண்பாடுகளும் மக்களின் ஆரோக்கிய வாழ்விற்கும் வழி சமைப்பன வாகவே என்றும் உள்ளன.

# "ஆடற் கலையரசி" 2006
## செல்வி ஒலிவியா தனபாலசிங்கம்




**யேர்மனி தித் தித் தெய் 2006** தமிழர் கலை பண்பாட்டுக் கழகம் நடத்திய மாபெரும் நடனப் போட்டி "தித் தித் தெய் 2006" கார்த்திகை மாதம் 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடை பெற்றது. இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கான நடனக்கலை மாணவர்கள் கலந்து சிறப்பித் தார்கள். "ஆடற்கலையரசி" தேர்வுப் போட்டி யில் செல்வி ஒலிவியா தனபாலசிங்கம் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
இவர் திருமதி ரெஜினி சத்தியகுமார் அவர் களின் மாணவியாவார்.

2006 ஆண்டு ஆடற்கலையரசி விருதினை தமிழ்க் கல்விக்கழக பொதுப் பரீட்சை பொறுப்பாளர் திருமதி.ஆயிலியம் நாகலிங்கம் அவர்கள் வழங்கிக் கௌரவித்தார். செல்வி ஒலிவியா சிறுவயதிலேயே இசைமீதும் நாட்டி யத்தின் மீதும் அளவற்ற ஆர்வங்கொண்டவராகத்திகழ்ந்தார். இவர் தனது பத்தாவது வயதில் 1997 இல் தமிழர்புனர்வாழ்வுக்கழகம் நடத்திய கானம்பாடியில் கீழ்ப்பிரிவில் முதலிடம் பெற்றார். தற்போது IBC வானொலி நடத்திய இன்னிசைக் குரல் 2006 என்னும் போட்டியிலும் சிறந்த பெண் பாடகியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவரது கலையார்வம் நடனம் சங்கீதம் மெல்லிசை வீணை நாடகம் என விரிந்து செல்கின்றது.

# கலைஞரைச் செதுக்கிய கலைஞன் கலாகேசரி

என் வாழ்வில் என் தூரிகையைத் தொடாது கலை யுணர்வை என்னுள் நகர்த்திச்சென்றவர் கலாகேசரி ஆ.தம்பித்துரை அவர்கள். எனது குருவும் அவரே.
தாயகத்தில் மகாஜனாக் கல்லூரியில் எனக்கு ஓவியம் கற்பித்தவர். பின்னர் வட மாகாண சித்திரவித்தியாதரிசியாக இருந்து அரும்பணியாற்றி யவர். அத்தோடுமட்டுமன்றி தாயகத்தில் பல தேர்களை சித்திர சிற்ப அலங்காரங்களுடன் பவனிவர வடித்த பெருமைக்குரியவர்..


கலாகேசரி ஆ.தம்பித்துரை

அவரிடம் நான் பெற்ற சில அனுபவ வர்ணங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.
மகாஜனாக் கல்லூரியின் முன் வீதியில் ஐஸ்பழத் தடிக்குப் பஞ்சமில்லை அந்தத் தடியினை தூரிகையாக்கி ஒரு ஓவியத்தை வரைந்தேன். என்னைப் பார்க்கிறார்... நான் சற்றுப்பதட்டத்துடனேயே எடுத்துக் காட்டினேன். அவர் என்ன போட்டோ எடுக்கும்போது ஒன்றுக்குமேல் ஒன்று எடுத்த மாதிரி இருக்கிறது,என்ன பிழைத்து விட்டதா? என்றார்.என்மனம் பதற ஆரம்பித்தது.

அவர் என்ன போட்டோ எடுக்கும்போது ஒன்றுக்குமேல் ஒன்று எடுத்த மாதிரி இருக்கிறது, என்ன பிழைத்து விட்டதா? என்றார். என்மனம் பதற ஆரம்பித்து விட்டது. இல்லை நீங்கள் சொல்லுவது போல்தான் கீறினேன் என் மனதிற்கு பட்டதை அப்படியே வரைந்திருக்கிறேன். நீங்கள் அடிக்கடி சொல்லும் புதுமையைச் செய்து பார்த்திருக்கிறேன். உங்களுக்குப் புதுமை உண்மையில் பிடிக்காதா? என்று கேட்டுமுடித்தேன்.

கலாகேசரியின் முகம் கடுகடுப்பாகிவிட்டது. புதுமையைப் படைக்கிறவன் அதனைப்புதுமை என்று சொல்லக்கூடாது.

அதனைப் பார்ப்பவர்களைப் புதுமை என்று சொல்ல வைக்கவேண்டும். என்றார். இனி வரைதலில் என் மனதை ஈடுபடுத்து வதில்லை என்று முடிவெடுத்துக் கொண்டேன். பாடசாலை சென்று வீடு திரும்பியதும் நான் எடுத்த முடிவு பின்னோக்கிச் செல்லத் தொடங்கியது. அந்தப் படத்தை வீட்டுச் சுவரில் மாட்டிவிட்டு பார்த்துக் கொண்டிருக்கிறேன் எனக்கு அப்படத்தில் ஏதோ ஒன்று இருப்பதாகவே தோன்றியது.

குரும்பசிட்டியில் என் வீட்டு வாசலில் சயிக்கிள் மணி கேட்கிறது எட்டிப் பார்க்கிறேன் கலாகேசரியேதான் என்னைக் கண்டதும் இறங்கி வீட்டினுள் வந்துவிட்டார். சுவரில் இருந்த அந்தப் படத்தைப் பார்க்கிறார் நீ நினைத் ததும் சரி. முயன்றதும்சரி. ஆனால்! புதுமைக்கும் ஒரு ஒழுங்கு முறை உண்டு. அதைத்தான் லயம் என்று சொல்லுவது வா என் வீட்டிற்கு உனக்கு அதைக்காட்டுகிறேன் என்றார்.

என்னைத் தேடிவந்த கலை நதிக்குப்பின்னால் கடலை அடையும் வரை அவர்பின் சென்றேன். அவர் வீட்டு முற்றத்தில் மரக்குற்றிகள் பிரசவத்தை நோக்கிக் காத்துக் கிடந்தன. ஓர் இடபவாகனம் என்னைப்பார்த்துச் சிரித்தது. உள்ளே சென்றேன் சுவரில் ஓவியர் மார்க் வரைந்த புதுமை ஓவியம் (காவடியாட்டம்) வரவேற்கிறது.

கலாகேசரியின் இல்லத்தில் புதுமை ஓவியமா? ஒருகலைஞன் இன்னொரு கலைஞனின் ஓவியத்தை தன் வரவேற்பறையில் பெருமையாக மாட்டிக் கொண்டதை அன்று தான் கண்டேன். புதுமையை வரவேற்று அவர் வார்த்தைகள் பொழியவில்லை செயலில் அதனைக் காட்டினார்.


அவர் புதுமை ஓவியங்கள் பற்றி அன்று எடுத்துக் கூறிய விடயங்கள் என்னை மலைக்க வைத்தது. அவர் உலகளாவிய ஓவியர்களின் வரலாற்றை நன்கு அறிந்து வைத்திருந்தார்.

அவர் என்னுள்ளத்தில் போட்டுவைத்தகோடுகளே இன்று என் கோலங்களாக மலர்கின்றன.

அன்று 35 வருடங்களுக்கு முன் நான் வரைந்த (ஐஸ்பழத்தடி) ஓவியப்பாணியில் இன்று வரைந்த ஓவியத்தை இங்கே காண்கிறீர்கள். இதனை அவர் காணமுடியாமல் அமரத்துவம் அடைந்து விட்டார்.

ஆனால்,

இந்த ஓவியத்தினுள் அவர் சொன்ன இலயத்தைக் கண்டு இரசித்த யேர்மனியரின் முகத்திலும் நான் கலாகேசரியின் புன்னகை யையேக்கண்டேன்.



கண்ணா






Jaegers

உயிரோடு கலப்பது காதல்
உடலோடு கலப்பது காமம்

*நெதர்லாந்தில் நடந்த உண்மைச் சம்பவம்*

உயிரோடு வாழ்பவரைத் தத்தெடுப்பது வழக்கம். இங்கே யாரென்று அறியாமலே மரணித்த ஒரு இளைஞனை தத்தெடுத்தாள் ஒரு இளம்மாது. வயது 16. பாடசாலையில் படிக்கும் காலத்தில் பத்திரிகையில் படித்த செய்தி ஒன்றே அவளை இந்த எண்ணத்துக்கு வரத்தூண்டியது. இரண்டா வது உலகமாயுத்தம் ஓய்ந்து இருந்த நேரம். அப்போதுதான் கணக்கெடுப்பு நடந்து கொண்டிருந்தது. வாழ்பவரதும், வாழ்வை முடித்தவர்களதும் கணக்கு அது. இந்தநேரத்தில் அமெரிக்காப் படைவீரர்கள் தாம் போர்புரிந்த நாடுகளிலேயே பலர் மாண்டனர். அப்படியாக உயிர் நீத்தவர்களை ஓர் இடத்தில் அடக்கம் செய்து அவர்களுக்கென ஒரு தனியான நினைவு மாயானத்தையும் உருவாக்கினர். இப்படி ஒரு நினைவு இல்லம் நெதர்லாந்தில் (Netherlands American Cemetery-6269 NA Margraten) 1944ம் ஆண்டு கார்த்திகைமாதம் 10ம் திகதி நிறுவப்பட்டு ஆங்காங்கே புதைக்கப்பட சடலங்களை ஒழுங்குபடுத்தி பெயரிட்டுப் பாதுகாத்தது.

அவர்களுக்கு எந்த உறவுக்காரரும் இல்லை. இந்த நிலையில் அவர்களது புதைகுழிகளை பூக்களால் மலரவைக்க பூமனம் கொண்டவர்கள் தத் தெடுக்கலாம் என்ற அறிவிப்பே செய்தித்தாள்களை அந்த நேரத்தில் நிரப்பின.

இதனைப்பார்த்த நெதர்லாந்தது நாட்டு இளம் பெண் Jaegers என்பவள் போரில் மாண்ட 24வயது இளைஞன் ஒருவரது சடலத்தை தத்தெடுத்து க்கொண்டாள்.

அன்றில் இருந்து இன்று வரை அந்த இளைஞனுக்கு அவன் மரணித்த திகதியில் மாதம்தோறும் பூவைத்து பூஜித்து வந்தாள்.

அன்று அவளுக்கு 15வயது. ஆனால் அவள் பூஜிக்கும் அந்த வீரனுக்கு இன்றும் 24தான். அன்று பாடசாலையில் படிக்கும் காலத்தில் சகமாணவிகள் என்ன உனக்கு 16 அவனுக்கு 24 எங்கே பொருத்தம் என்று கிண்டல் செய்தால். உடன் அவருக்கு எனறும் 24தான். ஆனால் எனக்கு உனக்கு எல்லாம் அப்படியல்ல. பொறுத்திரு! காலம் பதில் சொல்லும் என்பாள்.

அதுபோல் இன்று அவனைவிட அவள் முதியவளாகிவிட்டாள்.

வழமைபோல் ஒருநாள் பூக்களை எடுத்துகொண்டு அவன் துயிலும் இடத்துக்குச்சென்றாள் அவள். அங்கே என்ன அதிசயம்.அவளுக்கு முன்பாகவே பூக்கள் அங்கு வைக்கப்பட்டு இருந்தன.

59 வருடங்களாக எவரும் வந்து பூவைக்காத அந்த இடத்தில் எப்படிப் பூ! என ஆத்திரமும் அதிசயமும் அவள் மனதை கிளறியது. உடன் மயானப் பாதுகாப்பு அதிகாரியிடம் விசாரித்தாள். அவர்களோ "யார் பூவைத்தது என்ற விபரம் எமக்குத் தரமுடியாது." விரும்பினால் உங்கள் விலாசத்தை அவர்களுக்கு அதாவது இப்போ புதிதாகப் பூவைப்பவர்களுக்கு கொடுக்கின்றோம். அவர்கள் விரும்பினால் உங்களுடன் தொடர்பு கொள்வார்கள்" எனப் பதில் வந்தது.

அவளும் (Jaegers) தனது முகவரியை எழுதிக்கொடுத்துவிட்டு நடந்தாள்.

சரியாக ஒருமாதத்தின் பின் அமெரிக்காவில் இருந்து ஒரு கடிதமும் படமும் வந்தது. படத்தில் ஒரு இளைஞனும் ஒரு பெண்ணும் இருந்தனர். கடிதத்தை வாசித்தபோது அதிர்ச்சியாக இருந்தது. தான் இவ்வளவு வருடங்களாக யார் என்று தெரியாமல் உருவம் காணாமல் நேசித்து பூவைத்த அந்த இளைஞனின் உருவப்படத்தை இப்போதுதான் முதல் தடவையாக காண்கின்றாள். அவள் மனதில் ஆவேசம். படத்தில் அவனுக்குப் பக்கத்தில் நிற்கும் பெண்ணை வெறுப்புடன் அடிக்கடி பார்த்தபடியே கடிதத்தை வாசித்து முடித்தாள்.




இப்போ யார் தனது தத்து எடுத்த இளைஞனுக்கு புதிதாகப் பூவைப்பது என்பது புரிந்து விட்டது. அமெரிக்காவில் இருந்து அந்த இளைஞனின் முன்னாள் காதலியே அந்தப் பூக்களை வைப்பிக் கின்றாள். இவ்வளவு காலமும் தேடாத தன் காதலனை இப்போ தேட என்ன காரணம்?

காரணம் இன்று ஏற்பட்டுள்ள கணனி இணையத்தளம்தான். அதில் 2வது உலக மாகாயுத்தத்தில் மாண்டவர்களது பெயர், அவர்கள் புதைக்கப்பட்ட நாடு இடம் என்பன தெளிவாக விரிவாகப் பதியப்பட்டுள்ளது. இதன் பிரகாரமே அந்தக் காதலி தன்காதலனை 49 வருடங்களுக்குப்பின் கண்டுபிடித்தாள். இப்போது அந்தக் காதலிக்கு வயது 80 ஆகும்.

இவ்வளவுகாலமும் பூவைத்த நெதர்லாந்துப் பெண்மணி தனக் குள்ளேயே கலங்கிக்கொண்டாள். அவளால் இந்தச் செயலை ஆதரிக்கமுடியவில்லை. தான் இதுவரை நேசித்த அந்த ஒருவருக்கு புதிதாக ஒருத்தி உரிமை கொண்டாடுவது தாங்கமுடியாத ஒரு சோகத்தைக் கொடுத்தது.

அப்படியானால் அவளுக்கு இறந்த உருவமே தெரியாத அந்த இளைஞன் மீது காதலா. ஆம் இருக்கலாம். காதலுக்கு தமிழில் பல அர்த்தங்கள் உண்டு. காதலுக்கு உருவம் கிடையாது. காமத்துக்குத்தான் உருவம் தேவை. கடிதத்தொடர்பு அந்த இளைஞனின் காதலிக்கும் நெதர்லாந்துப் பெண்மணிக்கும் (Jaegers) தொடர்ந்தது. பின் தொலைபேசியில் கதைகள் வளர்ந்து, தற்போது அந்த அமெரிக்கப் பெண்மணி நெதர்லந்துக்கே வந்து விட்டாள்.

வந்ததும் இளங்காதலர் போல் அவர்கள் காதல் கதைகளையே கதைத்துக்கொள்கிறார்கள்.


இவளுக்கு அவன் இளம் பருவம் தெரியாது. எனவே அவற்றை எல்லாம் அமெரிக்கப் பெண்மணியிடம் கறந்துகொண்டு இன்பப் பால் பருகுகின்றாள்.

ஒன்றையே தினம் சிந்தித்து ஒருமனமானால் காதல்மணம் வீசும்.

நல்லவற்றின் மீதானகாதல் ......

உலகையும் உயிரையும் உய்யவைக்கும்.

# காதலின் வலியும் வலிமையும்




காதலுக்கு வலியும் உண்டு, வலிமையும் உண்டு. அதன் வலிமை புரிந்தவர்கள் காதலில் எதிர்புக்களை முறியடித்து வெற்றி பெறுகிறார்கள், மற்றவர்கள் கோட்டைவிடுகிறார்கள். இன்று காதலுக்கு வீடுகளில் எல்லாம் பச்சைக்கொடிதான்.அன்று அப்படி அல்ல. அன்று எந்த வீடுகளிலும் இருகொடிகளும் இருக்கும். அதாவது பச்சையும், சிவப்பும். எப்போதுமே சிவப்பே தலைகாட்டும். பெற்றோர்களால் தடுக்க முடியாத கட்டத்தில் பச்சைக்கொடி மெல்ல மெல்ல வெளிவரும்...இது தமிழருக்கு மட்டுமல்ல, உலகம் எங்குமே அன்று காதலுக்கு இருந்த நிலைதான்.

பிரஞ்சு நாட்டில் ஏதல் என்ற ஒரு பெண்மணியின் வாழ்வில் பச்சைக்கொடி தலை காட்டவே இல்லை.அவள் தன் காதலுக்காக 65 வருடங்கள் வாயிருந்தும், ஊமையாக வாழ்ந்து மடிந்தாள். அப்பெண் 20 வயதுடைய அல்பர் டுபின் சென் என்ற இளைஞனை சிறுவயதில் இருந்து நேசித்தாள். இதனை அறிந்த தந்தை அவளைக் கண்டித்து அவனுடன் பேசவேகூடாது எனக் கட்டளையிட்டார். அதனால் ஏதல் தன் காதலனுடன் பேசமுடியாத தன் வாயால் இனி எவருடனும் வாழ்வில் பேசுவதில்லை எனச் சபதம் எடுத்தாள். அவள் தன் சபதத்தை 65வருடங்கள் கடைப்பிடித்து 1915ம் ஆண்டு மாண்டாள். அவள் சாகும் வரை பேசவே இல்லை. அவளுடைய தந்தை வேறுயாரும் அல்ல. பிரஞ்நாட்டின் பிரபல எழுத்தாளர் வியூகோ வின் மகளேதான் இந்த ஏதல். அவளுடைய தந்தை அவர் 1885 இல் மரணமான போதுகூட கண்ணீர்விட்டாளே அன்றி வாய்திறந்து அழவில்லை. உலகில் பேச்சிருந்தும் ஊமையாக 65 வருடங்கள் வாழ்ந்த பெண்மணி ஏதல் ஒருத்தி மட்டுமே!

# காதலிக்கப் பிறப்பத்தாட்சிப்பத்திரம் இனித் தேவைப்படலாம்!!!



நான் மன்மதன் விடும் அம்பு காதலர்களை இணைத்துவைக்கும் மந்திரம். காதல் கட்டுக்குள் சிக்காத பெண்களை எல்லாம் கணநேரத்துக்குள் இணைத்து எங்கோ கூட்டிச் சென்றுவிடுவேன்.
பாக்கியராஜின் பாணியில் சொல்வதாக இருந்தால்-கசமுசாவாக்கிவிடுவேன்- சினிமா வில் நான்தான் கதாநாயகனையும் கதாநாயகி யையும் கச்சிதமாக இறுகக் கட்டியணைக் கவைப்பவன். கதாநாயகி தன்னை மறந்து கட்டியணைக்க இடியும் மின்னலும் பழைய சமாச்சாரம் என ஒதுக்கிவிட்டு என்னை நாடும் இயக்குநர்களே இன்று சினிமாவில் அதிகம்.
-சின்ன வீடு- திரைப்படத்தின் வெற்றிக்கு நானும் காரணம் நான் யார் தெரியுமா?

நான் மனித இனம் பூமியில் தோன்றுவதற்கு முன்னரே தோன்றியவன் ஏன் உலகின் மூத்த குடிமகன் நான்தான். 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் கொடிய வால் வெள்ளி பூமியைத்தாக்கிய போது எனக்குப்பின் தோன்றிய டினோசவரியா இனம் முற்றாக அழிந்து போனது அந்த நேரத்தில் நான் வால்வெள்ளியைப் பார்த்துச் சிரித்தேன். என்னை அழிக்கமுடியாத வால்வெள்ளி 13 மில்லியன் ஆண்டுகளாக இன்னும் பூமியின் பக்கம் திரும்பவில்லை... உலகில் நீண்டகாலம் வாழும் ஒரே இனம் என்பது மட்டுமல்ல நான் 6 மாதத்தில் 6 சந்ததியைக் கண்டுகொள்ளும் வித்தகன். எனக்கு எவரும் பெண் கொடுக்கத் தேவையில்லை. சாந்தி முகூர்த்தம் எனக்கு இல்லை. ஆணும் நானே! பெண்ணும் நானே! எனக்குக் கண் கிடையாது. மனிதனைவிடக் காது பத்துமடங்கு அதிகமாகக் கேட்கும். எந்த மூலைமுடுக்கிலும் எந்த இருட்டிலும் நடமாட முடிந்த என்னை எந்த வால் வெள்ளியாலும் ஏன் யப்பானில் அமெரிக்கா போட்ட அணுகுண்டாலும் சரி அழிக்க முடியாதுபோன என்னை இனி அழிக்க முடியாது என்ற முடிவுடன் யப்பான் நாடு ஒரு முடிவுக்கு வந்துவிட்டதை அறிகிறேன்.



என்னிடம் இருக்கும் திறமைகளை பயன்படுத்திட யப்பான் விஞ்ஞானிகள் முன் வந்துள்ளனர். இதுவரை எச்சரிக்கையுடன் என் எண்ணம்போல் வலம் வந்த என்னை அவர்கள் பிடித்து என் முதுகில் ஒரு மெல்லிய மென்தகட்டைப் பொருத்தி உலாவவிட்டுள்ளனர். என் சந்ததிக்கு இன்னும் ஆபத்து இல்லை. ஆனால் எமது சுதந்திரம் பறிபோய்விட்டது.

என்முதுகில் இருப்பது சாதாரண தகடுஅல்ல அது அவர்கள் சொல்லும் கட்டளைப்படி என்னை நகர்த்தும் சக்திமிக்க மென்தகடாகும். அவர்களது றிமோட் கொன்றோலுக்கு நான் இப்போது அடிமை.

செல்ல முடியாத நுண்ணிய துவாரங்களுக்கூடாக என்னை அனுப்பி படம் எடுக்கும் பணியினைச் செய்விக்கின்றனர். அதுமட்டுமல்ல என்பிரமிக்கும் படியான செவிப்புலனின் சக்தியை அவர்கள் பயன்படுத்தி ஒலிகளையும் ஒலிப்பதிவு செய்கின்றனர். எந்தச் சூழலிலும் எனக்கு ஆபத்துக் குறைவானது என்பதைத் தெரிந்து கொண்ட யப்பானியர் என்னைச் சந்திரமண்டலத்திற்கும் செவ்வாய்க்கும் அனுப்பப் பயிற்சியளித்து வருகின்றனர். சினிமாவில் கிளுகிளுப்புக் காட்சியை உண்டாக்கப் பயன்படுத்தப்பட்ட நான் இன்று விஞ்ஞானிகளின் கையில் இருப்பதை யிட்டுப் பெருமையடைகிறேன்.

உங்களுக்கு மட்டும் சொல்கிறேன் என்னை சந்திரனுக்கு அனுப்புவது வெற்றியளித்தால் உலகில் மட்டுமல்ல சந்திரனிலும் மூத்த குடிமகனாக நான்தான் இருப்பேன் 6 மாதத்தில் அங்கும் 6 சந்ததியை உருவாக்கி விடுவேன்.

இன்னும் என்னைத் தெரியவில்லையா?

ஒரு தபால் முத்திரையில் இருக்கும் பசையே எனக்கு 6 மாதத்திற்கு உணவாகும்.

இன்னும் புரியவில்லையா?

நான்தான் உலகில் மிகப் பழமைவாய்ந்த உயிரினம்.


திருவாளர் **கரப்பான் பூச்சி.**

வாழ்க்கையில் வசதியும் ஒரு பிடிப்பும் வருகின்றவேளை முதுமை அவனைச்சுருக்கிட்டுக் கொள்கிறது. முதுமை மனிதனின் தோலில் பளபளப்பை நீக்கி சுருக்கங்களை உண்டு பண்ணுகின்றது. இந்தச் சுருக்கங்களை நீக்க முடியுமானால் ஒருவனது வயதில் பாதி வயதிற்குரிய தோற்றத்தைப் பெற்றுவிடுவான்.


இளமையை முதுமையில் புகுத்த யப்பானிய ஆராட்சியாளர்கள் இந்தக் கரப்பான் பூச்சியில் இருக்கும் ஒருவகை ஒமோனைப் பயன்படுத்தலாம் எனக் கண்டுபிடித்துள்ளனர்.

இது மட்டும் சாத்தியப்படுமானால்.....

காதலிக்க பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் தேவைப்படலாம்.



# திருமணம் மனங்களை மட்டுமா ஒரு முகமாக்குகிறது!



நீங்கள்
உருவொத்த
தம்பதிகளா?



நீங்கள் காதலித்து திருமணம் செய்தீர்களா? இல்லை திருமணத்தின்பின் காதலித்தீர்களா? அது முக்கியமல்ல. வாழும் காலம் மனமொத்த தம்பதிகளாக ஒருவருக்குள் ஒருவரை உருக்கிவாத்து ஒரு நிமிடமேனும் உண்மையாக வாழ்திருக்கிறீர்களா? அப்படியானால் உங்களை பொது வைபவங்களில் நீங்கள் கணவன் மனைவி என்று தெரியாமல் சகோதரர்களா? இருவரும் அப்படியே ஒரேமாதிரி முகம் இருக்கின்றது என்று சொன்னார்களா? அப்படிச்சொன்னால் அதுபோதும் உங்கள் தாம்பத்தியவாழ்வின் தரத்தைக் கணிப்பதற்கு.

இப்படிச்சொல்பவர்கள் எடுத்தாற்போல் சொல்லவில்லை. ST.Andrews University தன் ஆய்வுகளை மேற்கோள்காட்டி நம்பிக்கையுடன் தெரிவிக்கின்றது. மற்றும் Prof.David Perret தன் ஆராய்வின்படி இப்படியான உரு ஒத்ததம்பதிகள் வாழும் காலத்தில் மிகவும் ஒற்றுமையாகவும் ஒருவரை ஒருவர் ஈர்த்தவண்ணமும் வாழ்வார்கள். இது வாழ்வின் இறுதிக்காலத்தை இனிமையாக்கும் ஒருவகை இன்ப ஈர்ப்பு என்கிறார்.

பொதுவாக திருமணத்தின் பின் கணவனின் செயல்கள் மனைவியிலும் மனைவியின் குணாதிசயங்கள் கணவனிலும் உடனடியாகப் பற்றிக் கொள்வதை நீங்கள் காணலாம்.

ஆனால் முகம் திருமணத்தின்பின் ஏற்படும் உடலியல் உளவியல் மாற்றங் களால் ஒருவரைப்போல் ஒருவரது முகம்மாறுவதை அவதானிக்கமுடியும். இந்த மாற்றம் நாய்க்கும் பூனைக்கும் கூட ஏற்படலாம். அவர்களது காதல் வாழ்க்கை யைப்பொறுத்து என்பதே இந்த ஆய்வுகளின் முடிவு.

இங்கு உதாரணத்திற்கு Tennis வீரர் அக்காசியும் ஸ்ரெபி கிறாபும் ஒருவரை ஒருவர் காதலித்து திருமணம் செய்து குழந்தையும் பெற்றனர். இப்போ மனக்கசப்பு. அது வேறு. ஆனால் அவர்களின் நேசிப்பு ஆழமானது என்பதை அவர்களது முகங்களை கணனிமூலம் தலைமுடியைமாற்றி அமைத்துக் கணித்ததில் தெரிகிறது. இப்படியாக பல தம்பதிகளின் முகங்களை முடியைமட்டும் மாற்றிப்பார்த்ததில் அவர்கள் முகங்கள் ஒத்திருந்ததை ஆய்வுக்குழு கண்டுவியந்துள்ளது. மேலே உள்ள படத்தில் திரு திருமதியினுடைய முகத்துடனும் திருமதி திருவினுடைய முகத்துடனும் முடிமட்டும் மாற்றிவிட வந்து நிற்பதைக் காணலாம். சரி இனி உங்கள் படங்களை நீங்களும் கணனியின் உதவியுடன் மாற்றிப்பாருங்கள். உங்கள் வாழ்வு இனிக்கிறதா என்றுபாருங்கள். இனிக்கவில்லை என்றால் வாழ்வை இனிப்பாக்கிவிட்டுப் பின்னர் சோதித்துப்பாருங்கள். வாழ்க்கை இனி இனிக்கட்டும்!







## சமையலும் மையலும்

**உப்பமைந் தற்றாற் புலவி அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல்-** குறள் 1302

ஓரளவு உப்பிருந்தால் உணவு சுவையாக இருக்கும் உப்பளவு அதிகரித்தால் எப்பொருளும் கெட்டுவிடும் ஊடலும் அதுபோல்தான்! உடன் படுவாய் என் நெஞ்சே

**சமைத்தல்** என்றால் படைத்தல் என்று பொருள். **சமைதல்** என்றால் இணங்குதல் இசைதல், ஆயத்தமாதல், பொருந்துதல் என்று பொருள்.
**மையல்** என்றால் காதல், பித்து காமமயக்கம், யானைமதம் செருக்கு என்று பொருள். இந்த மையல்களுக்குள்ளே ஊடுருவி விளையாடும் இன்னுமொரு சொல் ஊடல்.
**ஊடல்** என்றால் இல்லாத ஒன்றை இருப்பதாகவும், இல்லாததை இருப்பதாகவும்கூறி, அதன் மூலம் தன் காதலை வெளிப்படுத்த எடுக்கும் ஒரு முயற்சி. இந்த ஊடல் கட்டிலில்மட்டுமல்ல சமையற்கட்டிலும் இடம் பெறும். திரைப்படங்களில் அன்றும் இன்றும் இந்த ஊடல் காட்சிகள் உண்டு.
மனைவி ஊம்!! என்று முகத்தைவைத்துக் கொண்டி ருந்தால் கணவன் சமயம் பார்த்து சமையல் கட்டை நெருங்குவார். வெட்டிவைத்த வெங்காயத்தை திரும்ப உரிப்பார். அவள் தோசைக்கு ஆட்டுக்கல்லில் மாவை ஆட்டினால், ஆட்டி முடியும் நேரம்பார்த்து குளவியில் கைவைப்பார். சம்பல் இடிக்கும் போது, சம்பல் இறக்கும் நேரம்பார்த்து உலக்கைக்கு ஒரு கைகொடுப்பார்.
இதெல்லாம் அவளுக்கு தெரியாமல் இல்லை. தெரியாதவள் போல் முகத்தை வைத்திருந்தாலும் தெரிந்தவள் என்ற உயிர்ப்புடன் இருப்பாள். தன் மீதுமட்டும்தான் தன் காதலனோ இல்லை கணவனோ அன்பு பொழியவேண்டும் என்பதற்காக தன் நேரத்தையே தியாகம் செய்வாள். ஆண் தன் ஆசையை சந்தர்ப்பம் பார்த்து! மன்னிக்கவும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி என்றாலும் தன் ஆசையை கொட்டித்தீர்த்துக்கொள்வான்.
ஆனால் பெண் ஆணைவிட பத்துமடங்கு ஆசை வைத்திருந்தாலும், வரும் சந்தர்ப்பத்தையும் நழுவவிட்டு “ஓடுமீன் ஓட உறுமீன் வரும் வரைக்கும்” காத்திருப்பாள் கொக்காக.
அவள் தன் ஆசையை அடக்குகிறாள் என்பதை காதலன் தன் காதலியின் மூடிய விழிகளுக்குள் ஊடுருவிப் புரிந்து கொள்வான்.
சமையல் கட்டில் மையல் துளிர்க்கின்றது. மதம்கொண்ட யானைபோல் தன்காதலை வெளிப்படுத்தத் துடிக்கின்றான் காதலன். இந்த இடத்தில் பெண்ணுக்கு இயல்பாகவே ஒரு செருக்கு தன்னுள் தோன்றுகிறது.

வேண்டும்! வேண்டும் என்று பித்தாக அலையும் காதலனிடம் யாவற்றையும் வேண்டாம் என்று பிற்போடுகிறாள்.
காரணம்! அணைக்கட்டுப்போட்ட நீர்த்தேக்கத்தினை ஒரு முறைதிறந்து விட்டால் வரும் வேகம்!தினம் ஓடிவரும் ஆற்றுக்குக்கூட இருப்பதில்லை என்ற ஆசை மந்திரத் தைத் தெரிந்துகொண்டவள் அவள்.
என்னதான் ஊடல் நெருப்பில் வேகினாலும் ஓர் எல்லை உடலுக்கு உண்டு என்கிறார் திருவள்ளுவர்.
உணவிற்கு உப்புக் குறைந்தால் உண்ணமுடியாது. அதே உப்பு அதிகரித்தால் வாயில் வைக்கமுடியாது. எனவே சமையலும் மையலும் அளவோடு இருக்கவேண்டும் என்பது வள்ளுவன் கணிப்பு. இதற்கு கோவலனும் மாதவியும் ஊடல்கொண்டு பிரிந்த காட்சி நல்ல உதாரணம்.
ஊடல் என்ற போர்வையில் இன்று தினம் னை!னை! என்று நச்சரித்துக் கொண்டிருக்கும் காதலனையும், காதலியையும் விவாகரத்தே சிலசமயம் முத்தமிடுகின்றது.
வாயில் வைக்கமுடியாத அளவு அதிக உப்பை ஊடல் என்ற போர்வையில் அள்ளிக்கொட்டுவதால் ஏற்பட்ட விளைவே இது. திருக்குறள் எக்காலத் திற்கும் உகந்தது. அதனால் இக்காலத்திற்கும் உதவும் காதல் வேதம் அதில் நிறைவாகவே உள்ளது.
மேலே ஜெயசங்கர் வாயாடி படத்தில் ஊடல் புரியும் கே.ஆர்.விஜயாவை சமயம்பார்த்து சமையல் கட்டில் வசப்படுத்துவதும்.
சண்டியர் படத்தில் ஊடலில் நனைந்த அபிராமியை சமயோசிதமாக சமையல் கட்டிற்கு அழைத்துவந்து உரலோடு உறைய வைப்பதையும் படத்தில்காண்க.

## காதலர் தினம் Feb14



உன் விழிக்குள்
வாசிக்கின்றேன்
நான் சுவாசிக்கும்
தேசத்தை.
உன் விழி மடல்
உயர்த்தி ஊதுகின்றேன்
என்தேசத்தின் தூசி
விலகவென்று.

-நிலாமகள்

# ஈழத் தமிழ் மாணவிக்கு யேர்மன் அரசுத்தலைவர் விருது!

## விஞ்ஞானத்தில் புதிய கண்டுபிடிப்பு!




புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் அன்று நட்ட மரங்கள் இன்று பூத்துக் காய்த்துகனிய ஆரம்பித்துள்ளன. யேர்மனியில் இரசாயன தொழில் நுட்ப வியல்துறையில் புதிய கண்டுபிடிப்பு ஒன்றைச்செய்த ஈழத் தமிழ் மாணவியான 19 வயதுடைய லோகநாதன் சிவராதை யேர்மன் அரசுத் தலைவர் விருதான தங்கப்பதக்கத்தையும் 2500 யூரோ பரிசுத் தொகையையும் பெற்றுக் கொண்டுள்ளார்.

அவர் இனி மேற்படிப்பை மேற்கொள்வதற்கான செலவையும் யேர்மனி அரசாங்கமே பொறுப்பேற்றுக் கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை தும்பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.திருமதி லோகநாதன் தம்பதியின் புதல்வியான சிவராதையை ஜெர்மன் அரசுத் தலைவர் அங்கலா மேர்கல் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கிக்கொடுத்துள்ளார்.

ஒஸ்லோவில் நடைபெறும் நோபல் பரிசளிப்பு விழாவில் பங்குபற்றுவதற்கும் சிவராதைக்கு சிறப்பு அழைப்பு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

எமது இனத்தின் முத்திரையை கூடி நின்று கூறுவதை விட, படித்து அறிவால் அடித்துக் கூறினால் உரமாக இந்நாட்டவர் உள்ளத்தில் பதியும். நாம் ஒரு நாகரிகமான, அறிவான, ஆற்றல் வாய்ந்த, இனம் என்பதனை நம் இளம் சந்ததிகள் புரியவைப்பதன் மூலம் எம் தாயகத்தின் மீது ஒரு நம்பிக்கையும் மதிப்பும் அவர்களுக்கு ஏற்படும். இன்று தாயகத்தில் எமக்கு உள்ள நிலைமையில் கல்வியால் தாயகத்தின் முகவரியை யேர்மனியில் பொறித்த செல்வி சிவராதை லோகநாதன் திறமை தமிழர்க்கு கிடைத்த பெருமதிப்பாகும். வெற்றிமணி பல அறிவியல் வெற்றிகள் வாழ்வில் பெற்றிட அவரை வாழ்த்துகின்றது.

# யேர்மனியில் உலக சாதனை படைக்கும் தமிழ் இளைஞன்!




உலகை வாசிக்க முற்பட்ட எவரும், இந்த உலகில் ஒரு பதிவினை இடாமல் செல்வது அரிது. இதோ ஒரு பதிவுக்குத்தயார் ஒரு தமிழ் மாணவன்.

யேர்மனி இராட்டிங்கன் நகர் செல்வன் துஷ்யந்தன் சத்தியமூர்த்தி மிக நீண்டநேரம் சுரத்தட்டு (key Board) வாசிப்பில் உலகசாதனையை நிலை நாட்டியுள்ளார். இவரது பெற்றோர் யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள்.

2003ம் ஆண்டு ஆவணி மாதம் 4ந் திகதியிலிருந்து 6ம் திகதி வரை றண்டி றம்பலோ (Randy rumbelow) 53 மணித்தியாலங்கள் தொடர்ந்து பியானோ வாசித்து உலகசாதனையைப் பெற்றிருந்தார்.

செல்வன் துஷ்யந்தன் சத்தியமூர்த்தி 2005 வைகாசி மாதம் வியாழக்கிழமை 12ம் திகதி பகல் 12 மணிக்கு ஆரம்பித்து. ஞாயிற்றுக் கிழமை விடியற்காலை 4மணி 2 நிமிடம் வரை சுரத்தட்டை வாசித்தார்.

மொத்தமாக 62 மணிநேரம் 15நிமிடம் வாசித்து ஏற்கனவே பதிவிலிருந்த சாதனையைவிட 9 மணித்தியாலம் 15 நிமிடம் அதிகமாக வாசித்து உலகசாதனையில் தனக்கென ஓரிடத்தை தக்கவைத்துள்ளார்.

தன்னுடைய சாதனையை இன்னுமொருவர் முறியடிக்கவே முடியாதவாறு இந்த சாதனையை வென்றெடுத்துள்ளார். இடையிடையே பாடிக்கொண்டே சுரத்தட்டை வாசித்ததும் மேலும் இன்னுமொரு சிறப்பைப் பெற்றுள்ளார் இவருடைய சாதனை ஈழத் தமிழருக்கும் பெருமையளிக்கிறது.

செல்வன் துஷ்யந்தன் சத்தியமூர்த்தி 21 வயது நிரம்பியவர். ஆற்றல் நிறைந்த மாணவன்.

இந்தப் புதிய சாதனை 750 வருஷங்களின் பின்னர் இராட்டிங்கன் நகரில் பதியப்படுவதாக இராட்டிங்கன் நகர் மக்கள் பெருமையடைந்தார்கள்.



செல்வன் துஷ்யந்தன் சாதனையைக் கௌரவிக்கு முகமாக நகரமுதல்வர் திருமதி Anne Korzonnek அவர்கள் நேரில் வந்து வாழ்த்தி மகிழ்ந்தார்.




# ஈழத்துத் தமிழ்ச் சிறுமிக்கு பிரித்தானிய பிரதமர் இல்லத்தில் தேனீர் விருந்து










தனது ஐந்தாவது வயதில் யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையிலிருந்து பிரித்தானியாவுக்குத் தன் பெற்றோருடன் புலம்பெயர்ந்து வந்தவள் மௌலியா. மறுவருடமே இங்கிலாந்தின் பெட்போர்ட்ஷெயார் மாநிலத்திலுள்ள லூட்டன் நகரின் ஆரம்பப்பள்ளியொன்றில் தனது முதலாவது ஆண்டில் காலடி வைக்கிறாள்.

ஆங்கில அடிப்படை அறிவேயற்ற அவளிடமிருந்த தீவிர ஆர்வம் ஆரம்பப் பள்ளி அசிரியர்களை, குறிப்பாக ஆங்கிலமொழி கற்பிக்கும் ஆசிரியையை வெகுவாகக் கவர்கின்றது.


நான்கு வருடங்களில் அவளது ஆங்கில மொழித்தேர்ச்சி அவளது பாடசாலை ஆசிரியர்களை மாத்திரமல்லாது கல்வித் திணைக்களத்தினரையும் வியப்பில் ஆழ்த்தியது. பாடசாலையின் நான்காம் ஆண்டுத் தேவையொன்றிற்காக எட்டுப் பக்கங்களில் அவள் எழுதிய கதையை மெச்சிய அவளது ஆசிரியை அதை விரிவாக்கும்படி பணிக்க, மௌலியாவின் திறமைக்கு அது சவாலாக அமைந்துவிடுகின்றது. ஈற்றில் அந்நிய தேசத்தில் அந்தத் தமிழ்ப் பிஞ்சின் முதலாவது நாவலாக அது உருவெடுத்து, அவள் கற்ற பாடசாலையின் ஆதரவுடன் அதுவே நூலுருவிலும் கொண்டுவரப்பட்டது.

ஆசிய தேசத்திலிருந்து வந்து நான்கே ஆண்டுகளில் ஆங்கிலப் புலமை பெற்று, பிரித்தானிய தரத்தையும் விஞ்சி, இங்கிலாந்தின் பாடசாலை மட்டத்தில் உருவாக்கப்பட்ட (A dangerous new world) டேஞ்சரஸ் நியு வேர்ல்ட் என்ற முதலாவது சிறுவர் நாவலின் வரவு பற்றிய செய்தி கல்வித்திணைக்களத்தின் மூலம், இங்கிலாந்தின் பிரதமர் காரியாலயம் வரை சென்றுவிட்டது. விளைவு, பிரதமரின் வாசஸ்தலமான இல.10 டௌனிங் தெருவுக்கு 08.12.1998 அன்று மௌலியா வரவழைக்கப்பட்டு பிரதமரின் மனைவியால், பிரதமர் டோனி பிளையாருக்கு தேனீர் விருந்தொன்றில் வைத்து அறிமுகம் செய்துவைக்கப்பட்டாள். ஒன்றரை மணிநேரம் அவர்களுடன் உரையாடியதுடன், இல.10 டொனிங் தெரு இல்லத்தையும், பிரித்தானிய பாராளுமன்றத்தையும் அதிதி அந்தஸ்துடன் சுற்றிப்பார்க்கும் அரிய வாய்ப்பும், அன்று மாலை லண்டனில்

உள்ள பிளெனட் ஹொலிவுட் (Planet Holywood) என்ற பிரபல ஹோட்டலிலும் அவளுக்கு சிறப்பு விருந்தும் வழங்கி டொனிபிளையார் குடும்பம் கௌரவித்தது. இச்செய்தி B.B.C உள்ளிட்ட பல பிரித்தானிய ஊடகங்களின் பிரதான செய்தியாகியதுடன் மௌலியா கல்விகற்ற ஆரம்பப் பாடசாலைக்கும் பல சிறப்பு நிதிஉதவிகளையும் பெற்றுக்கொடுத்தது.
அன்று தன் படைப்பிலக்கிய ஆர்வத்தை பகிரங்கப்படுத்திய வேளையில் மௌலியாவின் வயது பத்து. அந்த இளம் வயதில் ஆங்கில மொழியின் ஆளுமையை மாத்திரம் அவள் வளர்த்திருக்கவில்லை. தமிழ்மொழியிலும் சரளமாக உரையாடும் பயிற்சியையும் அவள் பெற்றிருந்தாள். அதன்பின்னர் தனது 13ஆவது வயதில் மௌலியாவின் இரண்டாவது நாவல் நூலுருவில் Secret of the Mansion சீக்ரட் ஒப் த மான்ஷன் என்ற பெயரில் வெளிவந்தது.
இன்று பல்கலைக்கழக வாழ்வில் நுழையக் காத்திருக்கும் மௌலியாவின் படைப்புக்கள் லண்டனிலும், இலங்கையிலும், பல்வேறு இணையத் தளங்களிலும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. மௌலியா நூலக வியலாளர் என் செல்வராஜா தம்பதியினரின் புதல்வியாவர்.
இங்கிலாந்தின் லூட்டன் நகரில் வாழ்ந்துவரும் மௌலியாவுக்கு இரண்டு மூத்த சகோதரர்கள் உள்ளனர்.

# மின்னியலில் மின்னும் தமிழ் மொழி!

இது நான் எப்பவோ சிந்தித் தனான். நேரப்பிரச்சினை களால் செய்யவில்லை. நான் இது செய்திருப்பேன் ஆனால் என்ன பயன் என்று விட்டுவிட்டேன்.
நான் ஒன்றைச் செய்வ தென்றால் அது செய்தமாதிரி இருக்கவேண்டும் அதனால் செய்யவில்லை.





திரு க.கனீந்திரன்

***தமிழ் பாவனை மொழியாகிறது***

இப்படி நானோடு பல நான்கள் முரண்டு பிடிப்பதனால்தான். எல்லோராலும் சாதிக்க முடியாததை ஒரு சிலரால் சாதிக்க முடிகிறது.
குளிக்கும்போது மனதோடு பாடும்பாட்டு பொன். சுந்தரலிங்கத்தின் குரலையும் மிஞ்சிவிடும். சுரம் உயரும் போதுதான் அதன் அபசுரங்கள் தெரியும்.
இதுபோல்தான் சாதனை வேட்கைகள் பல மனதோடு நிற்கும்போது ஐஸ்சாக் நீயூட்டனையும் மிஞ்சிநிற்கும். செயற்படுத்தும் போதுதான் பல ஐயங்களே எழும்.
எனவே செயல் வீரர்கள் யாராக இருந்தாலும் அவர்களது முயற்சிகளை வளர்க்க வேண்டியது மனிதகுலத்தின் கடமையாகும்.
கனீன் எலற்றோனிக் நிறுவனத்தின் அதிபர் திரு க.கனீந்திரன் அவர்கள் நீண்டகால முயற்சியின் பயனாக தற்போது சற்றலைட் Receiver ஐத் தமிழ் மூலம் ஒழுங்குபடுத்தி அதனைச் செயற்படுத்தக் கூடிய வகையில் அமைத்துள்ளார்.
எதிர்காலத்தில் எந்த நாட்டில் வாழ்பவராக இருந்தாலும் தமிழ்மூலம் ஒழுங்கு படுத்தக்கூடிய நிலையை அடைய அவர் முயன்றுள்ளார். தற்போது ஐரோப்பாவில் எப்பகுதியிலும் opentel Receiver வாங்கினால் தமிழில் செயற்படுத்தக்கூடிய வகையில் தமிழ் பாவனை மொழியாக்கப்பட்டுள்ளது. இதற்கு உபயோகிக்கப்பட்ட தமிழ்மொழி வடிவம் பிரத்தியேகமாக இதற்கென உருவாக்கம் பெற்றது.

# உயரத்தை உரமாக்கி உயர்ந்த தமிழ் மாணவி!

## இலங்கை வலைப் பந்தாட்ட அணியின் முதுகெலும்பு இவர்!



செல்வி தர்சினி சிவலிங்கம்

தாயகத்தில் இயற்கைகொடுத்த வரத்தை வானுயர வைத்த தமிழ் மாணவி செல்வி தர்சினி சிவலிங்கம்.

சிங்கப்பூரில் நடைபெற்ற 6வது ஆசிய வலைப் பந்தாட்டப் போட்டியில் 3வது இடத்தை இலங்கை அணிபெற்றுள்ளது. இந்த வெற்றிக்கு காரணமானவர் செல்வி தர்சினி சிவலிங்கம். குறிப்பாக இலங்கை தாய்லாந்து அணிகளிடையே நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் இலங்கை அணி 60-38 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஆனால் இலங்கை மலேசியா அணிகளுக்கிடையில் போட்டிகள் நடைபெறும் போது இலங்கை வீராங்கனைகள் பதட்டத்தை மலேசிய வீராங்கனைகள் தகுந்த முறையில் பயன்படுத்தி இலங்கை அணியை வெற்றி கொண்டனர். மலேசியா அணி இலங்கை அணியை 63-56 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதி ஆட்டத்திற்குத் தெரிவானது. இந்த அரையிறுதியாட்டத்தில் இலங்கை அணியின் தோல்வியைத் தவிர்ப்பதற்காக 4 கட்ட ஆட்டத்திலும் பங்கு பற்றி விளையாடிய போதிலும் தோல்வியைத் தவிர்க்க முடியவில்லை. ஆனாலும் இலங்கை அணிபெற்ற 56 புள்ளிகளையும் செல்வி தர்சினி சிவலிங்கமே பெற்றுக் கொடுத்து பாராட்டுப் பெற்றார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

செல்வி தர்சினி சிவலிங்கம் தன் இளம் வயதில் யாழ் வசாவிளான் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றவர். அப்பொழுது சக மாணவிகளை விட இவர் உயரத்தில் கூடியவர். (2.08 மீற்றர்)) இதனை அவதானித்த அன்றைய கல்லூரி அதிபர் திரு. சி. நடராஜா அவர்கள் இந்த மாணவியைவைத்து வலைப்பந்தாட்டக் குழுவினை அமைத்தால் நிச்சயம் பிரகாசிக்க முடியும் என்னும் யோசனையை கூறினார். அதன்படி செல்வி தர்சினி சிவலிங்கம் அங்கு தான் ஆரம்ப வலைப்பந்தாட்டம் பற்றிய அறிவினையும் சிறு பயிற்சியினையும் பெற்றுக்கொண்டார்.

இருப்பினும் அவரது உயரம் அவருக்கு ஒரு வித நாணத்தை அன்று ஏற்படுத்தியிருந்தது.

இன்று மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தில் கலைத் துறை பட்டதாரியாக இறுதியாண்டில் கல்வி கற்று வருகின்றார். இடம்பெயர்ந்த காரணம் அவரிடமிருந்த வெட்கமும் இடம்பெயர்ந்து மறைந்து விட பல்கலைக் கழகத்தில் இவருக்கு வலைப்பந்தாட்டத்தில் ஊக்கம் அதிகரித்தது. இவர் விளையாட்டில் மட்டுமன்றி கல்வியிலும் சிறப்புற்று விளங்கினார்.

இவரைப்பற்றி இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவி தமரா தர்மகீர்த்தி ஹேரத் கருத்து தெரிவிக்கையில்...

செல்வி தா்சினி சிவலிங்கம் எமது இலங்கை அணிக்கு கிடைத்த ஒரு பொக்கிஷம். இவரை கடந்த 9 மாதத்திற்கு முன்னா் தான் வவுனியாவில் நடைபெற்ற ஒரு வலைப்பந்தாட்டப் போட்டியில் சந்தித்தோம். இவரின் உயரமான தோற்றத்தை பயன்படுத்தி இவரை ஒரு சிறந்த வீராங்கனையாக உருவாக்க முடியும் எனத் திடமாக நம்பினோம். பின்னா் இலங்கை வலைப்பந்தாட்ட அணியின் பயிற்சி முகாமில் 7 மாதங்கள் மட்டுமே இவா்கள் பயிற்சியினைப் பெற்று இன்று எமது தேசிய வலைப்பந்தாட்டக் குழுவின் முதுகெலும்பாகத் திகழ்கின்றாா். இவரது திறமையை அறிந்த சிங்கப்பூா் ஜனாதிபதி S.P. நாதன் அவா்கள் சிங்கப்பூரில் விளையாடிய நேரத்தில் செல்வி தா்சினி சிவலிங்கம் அவா்களை நேரில் சந்தித்து தன் பாராட்டுதலை தெரிவித்துக் கொண்டாா். சிங்கப்பூா் ஜனாதிபதி S.P. நாதன் அவா்களது மூதாதையா் நமது தாயகத்தில் ஊரெழுவைச் சோ்ந்தவா்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஜனாதிபதி தா்சினி பற்றி குறிப்பிடும் பொழுது என் வாழ்நாளில் பல பிரமுகா்களை நேருக்கு நோ் பாா்த்திருக் கின்றேன். ஆனால் உங்களது உயரத்தினால் நான் இன்று அண்ணாந்து பாா்க்கவேண்டியுள்ளது என்று நகைச் சுவை ஒன்றை அள்ளி வீசினாா்.

அரசியலில் வெற்றியீட்டி உயா்ந்த ஒரு மனிதனும், வலை பந்தாட்டத்தில் உயா்ந்த ஒரு வீராங்கனையும் கைகுலுக்கிக் கொண்டு தமிழனின் முகவரியை உலகில் பதித்தனா்.

உயரமானவா்கள் எல்லோரும் உயா்ந்து விடுவதுமில்லை.

குள்ளமானவா்கள் எல்லோரும் தாழ்ந்துவிடுவதுமில்லை. எல்லாமே முயற்சியின் படியே அமையும் என்பதற்கு செல்வி தா்சினி சிவலிங்கம் உதாரணமாகின்றாா். இவா் யாழ்ப்பாணத்தில் - ஈவினையை பிறப்பிடமாகக் கொண்டவா் என்பது குறிப்பிடத்தக்கது.



## 150 நாட்டுக் கொடிகளை 145 செக்கனில் இனங்காட்டிய நாலு வயதுச் சிறுவன்!

## தமிழனின் ஆற்றல் கொடி உயரப்பறக்கிறது!



தமிழ்ச்சிறுவன் ஒருவனின் சாதனை உலகத்தை வியக்கவைத்துள்ளது.சிறுவன் திருவரன் அலெக்ஸ் சபாரத்தினம் அவா்கள் கனடாவில் உள்ள பிரிட்டிஸ் கொலம்பிய மாகாணத்தில் வாழ்ந்து வருகின்றாா்.

இவருக்கு வயது நான்கே நான்கு தான். இவா் செய்த சாதனையோ நான்கு பக்கமும் வியக்கும் வண்ணம் உள்ளது 143 செக்கனில் 150 நாடுகளின் கொடிகளை இனம் கண்டு தமிழினத்தின் பெருமையையும் மகிமையையும் உயா்த்தியுள்ளாா்.

இவருடைய ஞாபகசக்தியைக் கண்டு நடுவா்களே அதிா்ந்து போனாா்கள். தமிழா் தகவல்-கனடா இவ்வாண்டு (2002) அவா் மதிநுட்பத்தைப் பாராட்டி கனடாவில் கௌரவித்துள்ளது.

# சர்வதேச போட்டியில் பங்குபற்றிய தேசிய வீராங்கனை மைதிலி.







அவுஸ்திரேலியாவில் அண்மையில் இடம்பெற்ற வலைப் பந்தாட்டப் போட்டியில் இலங்கையில் 'ஏ' அணியில் இடம்பெற்ற ஒரே தமிழ் வீராங்கனை செல்வி இ.மைதிலி. இவர் யாழ்ப்பாணம் சுன்னாகம் கிழக்கைச் சொந்த இடமாகக் கொண்ட திரு. இராசரத்தினம், திருமதி ரஜனி தம்பதிகளின் புதல்வி ஆவார். செல்வி மைதிலி தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் க.பொ.த. உயர் தரம் கலைப்பிரிவு (2007)ல் கல்வி கற்கின்றார். இவர் பாடசாலையின் பத்தொன்பது வயதுக்குட்பட்டோருக்கான வலைப்பந்தாட்ட அணியில் விளையாடி வருகின்றார். இவர் தனது அவுஸ்திரேலிய பயண அனுபவம் பற்றி வெற்றிமணிக்குக் கூறுகின்றார்.

அவுஸ்திரேலியாவில்.........

அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற போட்டியில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 42 அணிகள் கலந்து கொண்டன. முதல் சுற்றில் அவுஸ்திரேலியா அணிகளுடன் 3 ஆட்டங்களிலும், மலேசியா அணி ஒன்றுடன் ஓர் ஆட்டத்திலும் மோதி வென்றோம். இரண்டாம் சுற்றில் அவுஸ்திரேலியா மற்றும் சிங்கப்பூர் அணிகளுடன் மோதி வெற்றி பெற்றோம். மூன்றாம் சுற்றில் நாம் ஒரே நாளில் 6 ஆட்டங்களில் கலந்து கொண்டோம். இதில் அவுஸ்திரேலியா, மலேசியா அணிகளுடன் மோதி வென்றோம். நியூசிலாந்து அணிகளுடன் இடம்பெற்ற 2 ஆட்டங்களில் தோற்றோம். கால் இறுதி ஆட்டத்தில் தாய்லாந்தின் 'டி' அணியை வெற்றி கொண்டு அரை இறுதிக்கு முன்னேறிய நாம் அவுஸ்திரேலியா அணியுடன் மோதி தோல்வியைச் சந்தித்தோம். இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து அணிகள் மோதிக் கொண்டதில் நயூசிலாந்து அணி வெற்றி பெற்றது. மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் எங்களுடன் மலேசியா அணி மோதியது. முதல் பாதி ஆட்டத்தில் 18:18 என்ற நிலையில் இருந்த நாம் ஆட்ட முடிவில் 32:28 என்ற புள்ளிகள் கணக்கில் தோல்வியடைய நேரிட்டது. எதிரணியினரை விட அவுஸ்திரேலியாவின் குளிரை எதிர்கொள்வதே முதலில் பெரும் சவாலாக இருந்தது என்றார்..

# சங்கத்தமிழ் விரிவுரையாளராக ஒரு யேர்மனியர் அசத்துகிறார்!!!

## திரு ஷசாவின் தமிழ்பற்று.



தாய்மொழி தாய்ப்பால் போன்றது. எந்தமொழி பேசுபவர்களாக இருந்தாலும் அவர்களுடைய தாய்மொழி அவர்கள் உள்ளத்துக்கு மகிழ்ச்சியையும், ஆரோக்கியத்தையும் கொடுக்கவல்லது. எனவே உங்கள் பிள்ளைகளுக்கு தமிழ் சொல்லிக் கொடுங்கள். இதனை நான் யேர்மன் மொழியில் சொல்லவில்லை.
உங்கள் இனிய தமிழ் மொழியினிலேயே சொல் கின்றேன்.
இவ்வாறு ஒரு யேர்மனியரும், தமிழை நன்கு கற்று Köln கோர்லின் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக இருந்து வருபவருமான திரு.ஷசா தெரிவித்தார். மேலும் அவர் பேசுகையில் நான் கடந்த பத்துவருடங்களாக அபூர்வசகோதரர்கள் விளையாட்டுக்கழகத்துடனும் சோஸ்ற் வாழ் தமிழ் மக்களுடனும் நெருங்கிய தொடர்பு உடையவன். ஆரம்பகாலத்தில் இவர்களுடன் ஏற்பட்ட நட்பும்,அவர்களது மொழியின் இனிமையும் என்னைத் தமிழ் மொழி கற்கத் தூண்டின,அதனால் அதனைக்கற்று இன்று கோர்ளின் பல்கலைக் கழகத்தில் புறநானூறுபற்றியும் சங்கத்தமிழ் நூல்கள் பற்றியும், விரிவுரைகளைச் செய்கின்றேன். பாரதியார் பாடல்கள் அற்புதமானவை. அதில் ஒரு பாடலை இங்கு சொல்லவிரும்புகிறேன். தமிழ் எந்தன் ஆவி என்று ஒருபாடலில் குறிப்பிட்டுள்ளார் பாரதி. அவரது எண்ணத்திற்கும், எனக்கு தமிழ்மீது உள்ள பற்றுதலுக்கும் அதிகவித்தியாசம் இல்லை என்று தன் தமிழ்பற்றை எடுத்துரைத்தார். இந்த அரிய தமிழ் சொற்பொழிவு (மார்கழி2002) யேர்மனியில் சோஸற் நகரில் அபூர்வசகோதரர்கள் விளையாட்டுக்கழகத்தின் பத்தாவது ஆண்டு விழாவில் இடம்பெற்றது.

## யேர்மனியில் நான்கு வயது தமிழ்ச் சிறுவனின் சாதனை!

யேர்மனியில் கெவல்ஸ்பேர்க் (Gevelsberg) நகரில் வசிக்கும் செல்வன் காபிறியேல் குமணன் தனது நான்கு வயதில் சிற்றூந்து ஓட்டப் போட்டியில் (26.08.2006) பங்கு பற்றி அப்பந்தயத்தில் காடு, மேடு, பள்ளம், குன்று, சமதரை, மற்றும் வீதியால் ஓடும் வாகனங்களையும் தாண்டி 25 k.m தூரத்தை ஓடிமுடித்த இச் சிறுவனை Ski Club வாழ்த்தி வெற்றிக் கேடயத்தையும் சான்றிதழையும் வழங்கியுள்ளது. இவர் கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட குமணன் - வாமினி தம்பதிகளின் புதல்வர் ஆவர்.



காபிறியேல்

# விசித்திரத் திருமணங்கள்






[illegible]
தோல்வியும்
[illegible]




திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன.

ஆனால் எப்படி எங்கு நடக்கின்றன என்பதில் நாட்டுக்கு நாடு, மொழிக்கு மொழி, மதத்திற்கு மதம், ஏன் மனிதர்க்கு, மனிதர் வேறுபடுகின்றனர்.

யப்பானில் ஒரு இனத்தவர் எந்த இடத்தில் ஒருவரை, ஒருவர் முதல் சந்தித்தார்களோ!

அந்த இடத்தில் திருமணம் செய்யும் வழக்கமுடைய வர்களாக இருக்கிறார்கள். ஒரு தம்பதியினர் முதல் முதல் தெருவைக் கடக்கும் போது ஒருவரை ஒருவர் கண்டனராம்.

எனவே அந்த தெருக்கடக்கப் போடப்பட்டுள்ள மஞ்சள் கோட்டில் வைத்து மோதிரம் மங்கலகரமாக மாற்றிக் கொண்டனராம்.

இங்கே உள்ள படங்கள் எந்தப் பாரம்பரிய, பழக்கவழக்கங்களிற்கும் சொந்தம் அல்ல. தனிப்பட விசித்திரமான ஆசைகளின் அடிப்படையில் நடைபெற்ற திருமணங்களே!

முதலாவது நீருக்கு அடியில் மணமகனும் மணமகளும் மோதிரம் மாற்றிக் கொண்டனர். இது தாய்லாந்தில் நடந்தது.

நீரைப் போன்று தூய்மையாக இருக்கவேண்டும் காதலும் என்றா?

அடுத்து கால்பந்தாட்டத் திடலில் ஒரு திருமணம். இலண்டனில் நடைபெற்றது. வெற்றி தோல்வியை சமனாக எடுக்கும் தம்பதிகளோ?

கீழே உள்ள திருமணம் நாம் பிறக்கும் போதே ஒருவர்க்கு, ஒருவர் என்று சொர்க்கத்தில் உறுதி எடுத்துக்கொண்டே வந்தோம். வரும்போது எப்படி ஆடைகள் இன்றி வந்தோமோ! அதே கோலத்தில் அவர்கள் மோதிரம் மாற்றி இணைந்து கொண்டனர்.

அவர்கள் மனமும் மூடுமந்திரம் அற்றவையோ?




விமானப் பயணம் அன்று வண்டிச்சாவாரிகள் போல், இன்று சர்வ சாதாரண மாகிவிட்டது. வண்டில் அச்சாணி கழன்றுதான் விபத்துக்கள் வரும். அதுவும் நிலத்தில்தான். ஆனால் இன்று பல ஆயிரம் மைல்களுக்கு மேல் பறந்துகொண்டிருக்கும் விமானங்கள் விபத்தாகி உயிர்களை விண்ணுக்கும், உடல்களை இந்த மண்ணுக்கும் தரம்பிரித்து அனுப்பி விடுகின்றது. ஒரு விமானம் புறப்படும்போது எத்தனை பாதுகாப்பு விடயங்களை எச்சரிப்புடன் விளங்கப்படுத்துவார்கள். ஆனால் பயணிகள் அது நமக்கு இல்லை! அப்படி நமக்கே ஏற்பட்டாலும் இவை யாவும் செய்து முடிப்பதற்குள் உயிரே!! போய்விடும் என்ற மனோ நிலையில் அசட்டையாகவே இருந்து விடுவார்கள். இருக்கும் இருகையுடன் பயணிகள் தம்மை ஒரு பட்டியலால் பாதுகாப்பாக இணைத்துக் கட்டவேண்டும். இது எல்லா விமானங்களுக்கும் பொதுவான அறிவிப்பாக இருக்கும். ஆனால்!

அண்மையில் Juni 2003 ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான காங்கோ ஜனநாயக குடியரசில், அதன் தலைநகர் கின்ஷாசா என்ற இடத்தில் இருந்து ஒரு விமானம் பாஷி என்ற நகருக்கு புறப்பட்டுச்சென்றது. அதில் 200 பேர் பயணம் செய்தனர்.7அயிரம் அடி உயரத்தில் பறந்த விமானத்தின் கதவுகள் திடீர் என்று திறந்து 160 பயணிகள் இருக்கையோடு வெளியே வீசி எறியப்பட்டுப் பலியானார்கள். இருக்கையுடன் பட்டியுடன் இணைக்கப் பட்டிருந்த பயணிகள் விமானப் பயணச்சட்ட திட்டங்களுக்கு உட்பட் டிருந்தும் உயிரை விட்டனர்.

விமானத்தில் உள்ள சரக்கு அறையின் கதவு,காற்றின் அழுத்தம் காரணமாகத் திடீர் என்று திறந்தது. இதனால் பயணிகள் இருக்கையுடன் அண்டவெளியில் பறந்தனர். காற்று அசுரவேகத்தில் உட்புகுந்து இந்த விபரீதத்தை நிகழ்த்தியது. காற்றின் அமுக்கம் விமானத்தின் பின் பகுதியின் ஒருபகுதியைத் துண்டாடியது. முன்பகுதி விமானியின் கட்டுப்பாட்டால் தரையிறங்கியது. விமானிகள் உட்பட 40 பேர் அதிர்ஷ்ட வசமாக உயிர் தப்பினர்.

விபத்துக்குள்ளான விமானம் ரஷியாவிற்குச் சொந்தமானது. இது - இல்லி சைன் 16 ரக- விமானமாகும். சரக்கு விமானமான இதில் பயணிகளும் பணம்செய்ய முடியும். 4 இயந்திரங்களைக் கொண்ட இந்த விமானம் தரையில் இருந்து கிளம்பி 45 நிமிடத்தின்பின் இந்த விபரீதம் நடந்தது.

மேலே இடது பக்கத்தில் ரஷியாவில் நடைபெற்ற ஒரு பொன்விழாவில் விமானிகள் சாதனையாக 50 வடிவில் பறப்பதைக் காணலாம்.

சாதனைகள் சோதனை நேரத்தில் சில நேரங்களில் கைவிட்டு விடுகின்றனவே!

## யேர்மனியில் முன்னாள் மந்திரி



# விமானத்தில் இருந்து குதித்துத் தற்கொலை!!!



உலகில் தற்கொலைகள் காதலுக்காக, சுய கௌரவத்திற்காக, விடுதலைக்காக, எனப் பல காரணங்களுக்காக இடம் பெறுகின்றன.

இலங்கையில் ஒரு காலகட்டத்தில் பொலிடோல் குடித்து (கிருமிநாசினி) தற்கொலை செய்து கொண்டவர்கள் அதிகம்.

அறிவு அற்றவர்கள், தன்னம்பிக்கை இல்லா தவர்கள், என்று பல காரணங்கள் அன்று தற்கொலைக்குச் சொன்னாலும், தற்கொலைகள் நன்கு கற்றவர்களும் தன்னம்பிக்கையின் சிகரங்களைத் தொட்டவர்களும், செய்வது வியப்பைத்தருகின்றது.

வானத்தில் இருந்து குதிக்கும் அளவிற்கு தன்னம் பிக்கையுடைய ஒரு விளையாட்டு வீரன் ஒருவன் அந்த வழியையே தனது தற்கொலைக்கு தேர்ந் தெடுத்த சம்பவம் ஒன்று அண்மையில் யேர்மனியில் இடம் பெற்றது.

அவர் சாதாரண குடிமகன் அல்ல.

ஒரு நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டி வளர்க்கும் தொழில் அமைச்சராக இருந்த திரு முல்லமன் அவரே இந்த தற்கொலையைச் செய்துள்ளார்.

ஒரு விமானம் விபத்துக்குள்ளானால் உடன் என் செய்யவேண்டும் என்பது விமானப்பயணத்தின் ஆரம்பத்தில் யாவருக்கும் விளக்கம் கொடுக் கப்படும். இந்த விளக்கத்தை நூற்றுக்கு எண்பது வீதம் பயணிகள் கவனிப்பதில்லை. காரணம் விபத்து தமக்கு நிகழாது என்ற நம்பிக்கை. அல்லது அந்த அறிவித்தல்களை கற்று அந்த விபத்து நடக்கும் கணநேரத்தில் எதனைச் செய்து விடமுடியும் என்ற நம்பிக்கையின்மை. இவை இரண்டும் காரணமாகலாம். எது எப்படியோ அவர்கள் தங்கள் கடமைக்காக அந்த அறிவித் தலை ஏதோ செய்து காட்டி முடிப்பார்கள்.

இந்த அறிவிப்பு சாதாரணமாக பயம் இன்றி விமானத்தில் பயணம் செய்வோருக்கும் ஒரு நிமிட மரணப் பயத்தினைக் கொடுக்கத்தவறாது.

விமானத்தில் இருந்து குதிப்பது என்பது அவ்வளவு பயம் நமக்கு. ஆனால் அதுவே பலருக்கு விளையாட்டு.







கிட்டத்தட்ட விபத்தின்போது பரசூட்டில் குதிப்பதற்கு ஒப்பான ஒரு விளையாட்டு மேல்நாடுகளில் உண்டு. இதனை பெரும் பணக்காரர்கள் தங்கள் பொழுது போக்காக விளையாடுவார்கள். இந்த விளையாட்டு வீரர்களது குடையும் சிலசமயம் விரியாது கை விரித்து விடும். இப்படி பலர் இந்த விளையாட்டில் மரணம் அடைந்துள்ளனர்.

அண்மையில் இந்த விளையாட்டில் 40 வருட அனுபவம் உள்ள யேர்மனியின் முன்னாள் தொழில் அமைச்சர் Jürgen Möllemann அவர்கள் தனியாக விமானத்தில் சென்று வானத்தில் இருந்து குதித் துள்ளார். இது விளையாட்டுக் குதியல் அல்ல.

உயிருக்கு வினைவைக்கும் குதியல். அதுவும் அவர் தெரிந்தே இதனைச் செய்துள்ளார்.

தனது குடை விரியமுடியாதபடி தடுப்புக்களை ஏற்படுத்தி விட்டு 4200 மீற்றர் உயரத்தில் இருந்து குதித்துள்ளார். குடை விரியாதமையால் மணிக்கு 200கி.மீ வேகத்தில் தரையைநோக்கி வீழ்ந்து உயிரை மாய்த்துள்ளார்.

இந்தத் தற்கொலை விளையாட்டுக்குக் காரணம் அவரது அரசியல் வாழ்வில் ஏற்பட்ட பல ஊழல் அம்பலமே! இவர் F.D.P. கட்சியைச் சேர்ந்தவர்.

1994ஆண்டுக்கு முன்னர் மந்திரியாக இருந்த காலத்தில் செய்த ஊழல்களே தற்கொலைக்குக் காரணமாகச் சொல்லப்படுகிறது.

கடந்த 2003 ஆனிமாதம் 11 ம் திகதி 12.38 மணிக்கு முன்ஸ்ரர் நகரில் அமைந்துள்ள அந்த சிறிய விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டு இந்த மரணப்பாய்ச்சலைச் செய்துள்ளார்.

வழமைக்கு மாறாக இவர் தனியவே இம்முறை ஒரு விமானியுடன் பறந்து உள்ளார். குதிப்பதற்கு முன்னராக தனது இறுதிவாசகமாக அவர் கூறியது இதுதான்.

"இன்று நான் வழமைக்குமாறாக தன்னம் தனி நட்சத்திரமாகக் குதிக்கின்றேன்' என்றார்.

வழமையாக எட்டுபேர் நட்சத்திர வடிவில் குதிப்பார்கள். ஒரு நட்சத்திரம் காற்றோடு இன்று கலந்துவிட்டது.

ஒரு நல் வாழ்வுக்கு ஆண்டுக்கணக்காகத் திட்டம் தீட்ட வேண்டும். ஆனால் ஒரு தற்கொலைக்கு ஒரு செக்கன் துணிவு இருந்தால் போதும் என்பார்கள்.

எத்தனையோ மில்லியன் சொத்துள்ள ஒரு முன்னாள் மந்திரியும் தற்கொலை செய்கின்றான்.

அன்றாடம் உணவுக்கு வழியில்லாதவனும் தற் கொலை செய்கின்றான்.

வாழ்க்கை நம் கையில்.......... அதனை நன்கு வாழ்ந்துதான் முடிப்போமே!



விமானத்தில் ஏறிய இடமும் குதித்த இடமும்





"இன்று நான் வழமைக்குமாறாக தன்னம் தனி நட்சத்திரமாகக் குதிக்கின்றேன்'



# அன்று அப்பு ஆச்சி சொன்னது இன்று அப்பட்டமாகவே




அன்று ஆச்சியப்பு சுருட்டுக் குடிக்கும் போது ஏன்? குடிக்கிறீங்கள் எனச் சின்னதுகள் கேட்டால் சொல்லும் பதில் இதுதான்.

"அது குடிக்காவிட்டால் எனக்கு மலம் சலம் சரியாகப்போகாது என்பதுதான்.

காரணம் புகையிலை மணம் அங்கு புகையுடன் வரும்போது மலசல கூடத்தின் நாற்றம் மறைந்துவிடலாம் என்பதாக இருக்கலாம், அல்லது அன்று அவர்கள் குடிக்க களவாகப்பழகிய இடம் மறைவாக மலசல கூடமாகவும் இருந்திருக்கலாம் அல்லவா?

என்ன ஏதுவோ?

இன்று மேற்கு நாட்டவர்க்கும் அதுக்குப் போகும் போது குடிக்கவேண்டும் என்பது போல் இங்கும் குடிக்கிறார்கள். இன்று அன்று பட்டும் படாமல் சொன்னதை அப்பட்டமாகப் படத்துடன் போட்டு விளம்பரமும் செய்து இருக்கிறார்கள் West என்னும் சிகரட் நிறுவனம்.

ஒரு பெண் தெருவில் அது கழிப்பதுபோன்ற படம்.

இதுவே யேர்மனியில் அதியுச்ச விளம்பரச் சுதந்திரம் என்று பத்திரிகைகளால் வர்ணிக்கப்படுகிறது.

ஒரு முறை துர்காதேவியின் படத்தினைப்போட்டு பலகரங்களிலும் இருக்கும் ஆயுதங்களுக்குப் பதிலாக பலவகை பியர்களைக் கிண்ணத்தில் ஏந்துவது போல் ஒரு விளம்பரமும் 1998 இல் வந்திருந்தது. அண்மையில் ஜெனிவாவில் ஒரு பேருந்தில் நான்கு கைகளுடன் லட்சுமியின் படத்தினைப் போட்டு நீங்கள் ஒரு கரம் கொடுத்தால் நாம் நான்கு கரங்களாலும் உங்களுக்கு உதவுவோம் என்று நான்கு வகையான உதவிகளை ஒரு காப்புறுதி நிறுவனம் விளம்பரப்படுத்தி இருந்தது. இப்படியாக பல விநோதமான விளம்பரங்கள் இருப்பினும் இந்த சிகரட் விளம்பரம் பல பெண்கள் அமைப்பையே புகைய வைத்துவிட்டது!

## யேர்மனியில் பூசணிப் பிரமிட்



தாயகத்தில் விவசாயி சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் தைப்பொங்கல் திருநாள்போல் யேர்மனியிலும் கமக்காரர் பூமிக்கு நன்றி தெரிவித்து மண்ணில் உற்பத்தியான பயிர்களை, பழங்களை வைத்துக் கொண்டாடுவது வழக்கம்.

இத்திருநாளை ஒக்ரோபர் பெஸ்ற் என்பார்கள். இப்படியான இந்தத் திருவிழாவில் இடம்பெற்ற 15 மீற்றர் உயரமுடைய பூசணிக்காய்ப் பிரமிட்டை இங்கே காண்கிறீர்கள்.

இது யேர்மனியில் லுட்விக்ஸ்போ்க் என்னும் நகரில் இடம் பெற்றதாகும்.



# முற்றும் தெரிந்தவன் மேலே இருக்கின்றான்!

## உங்கள் வீடு உங்கள் முற்றம் என்று அசகு பிசகாத் திரியாதீர்கள்!






நாம் உயர உயர, பூமியே கைகளுக்குள் வந்துவிடும்.

வான வெளியில் பூமியில் இருந்து 680 கி.மி தூரத்தில் அமெரிக்கத் தயாரிப்பான சற்றலைட் கமறா ஒன்று கிடு கிடுவென்று படம் எடுத்துத் தள்ளுகிறது.
இதனை பூமியில் இருந்தே இயக்கலாம். பார்க்கலாம்.
பூமியில் எந்த நாட்டில் உள்ளவற்றையும் குறிப்பாக நிலத்தில் இருந்து ஒரு மீற்றர் உயரமான, அனைத்தையும் மிகத் தெளிவாக எடுக்கலாம்.
ஆதனாலேதான் கூறுகின் றோம் உங்கள் வீடு, உங்கள் முற்றம் என்று அசகு பிசகாத் திரியாதீர்கள் என்று.
காரணம் மனிதன் ஒரு மீற்றருக்கும் உயர்ந்தவன் அல்லவா! நீங்கள் முற்றத்தில் நின்றால் கூட உங்களை அடையாளம் காணும் தெளிவு உருவில் உங்களைப் படம் எடுக்கும் நுண்ணிய ஆற்றல் அந்தக் கமராவிற்கு உண்டு.
மேலிருந்து கொண்டே முற்றும் தெரிந்தவனாக அந்தக் கமரா இயங்குகிறது. அதன் கண்களுக்குள் மாட்டுப்பட்ட சிங்கப்பூர் தேசியவிளையாட்டு அரங்கம், லண்டன் மிலோனியம் டோம்,ஆகிய படங்களை இங்கே காணலாம்.
ஒரு வாகனம் திருட்டுப்போனால் அதனை உடனடியாக அந்த கமறா மூலம் தேடலாம். அதற்குரிய வாய்ப்புகளும் அதிகமாவே உள்ளன. வாகனத்திற்கு முன்னும் பின்னும். இலக்கங்கள் இருப்பதுபோல் இனி வாகனத்தின் கூரையிலும் இலக்கம் எழுதும்படி சட்டம் வரலாம்.

அந்தக் கமராவின் பெயர் Lkonos. அது எடுக்கும் படத்தினைப் பார்ப்பதற்கு ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு நிலையம் திறக்கப்பட உள்ளது.
யேர்மனியில் அண்மையில் இதற்கான நிலையம் திறக்கப்பட்டது.
அண்டவெளியில் அமைந்துள்ள வான் வெளி ஆராய்ச்சி நிலையத்தின் உதவியுடன் இந்த படங்கள் பூமிக்குத் தெளிவாக அனுப்பும் வசதிகள் செய்யப் பட்டுள்ளன.
அருகே எகிப்திய நாட்டின் பிரமிட்களை வானில் இருந்து Lkonos எடுத்த படம்.






**உண்மைச் சம்பவம்**

நாங்கள் செய்வது எப்போதுமே சரி. இதில் ஒரு அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவன் மனிதன். இதில் நாட்டுக்கு நாடு கூட வேறுபாடு கிடையாது.
இதனால் மற்றவர்களது செயல்களை எப்போதுமே பிழையாக கணக்கிடும் எண்ணம் மேலோங்கி நிற்பது வியப்பில்லை.
நெதர்லாந்தில் ஒரு சம்பவம்.
அறுவது வயது மதிக்கக்கூடிய ஒரு துடுக்கான பெண்மணி, தனது வாகனத்தில் தெருவில் நிதானமாக ஓடுகின்றாள். எதிரே பளிச்சென்றது.


பார்த்தால் அவளைக் கமறா உள் வாங்கிக்கொண்டது.

தனது வேகத்தை பார்கிறாள். 45கி.மீ வேகத்தில் சென்றேன் என உணர்கிறாள். அங்கே தெருவில் கட்டுப்படுத்தப்பட்ட வேகத்தைப் பாக்கின்றாள் அதில் 50 எனப்போடப் பட்டுள்ளது.
இது என்ன கண்டறியாத கமறா? என்றபடி திருப்பினாள் வாகனத்தை மீண்டும் அதே தெருவில், படம் எடுத்த பக்கமே. வந்தாள் அதே 45.கி.மீ வேகத்தில். மீண்டும் கமறா பளீச்சென்றது! கோபம் மாதுக்கு ஒரு மாதிரிவந்தது. மடக்கிவெட்டி வாகனத்தை மீண்டும் அதே தெருவால் 30.கி.மீ வேகத்தில் வந்தாள் பளிச்!பளிச்! கேட்கவா வேண்டும்? பல முறை மீண்டும் மீண்டும் வேகத்தைக் குறைத்து ஓடிப்பார்த்தாள். படம் எடுக்காமல் அவளை ஒரு முறையும் விடவில்லை அந்தக் கமரா. அத்தனை காதலா அவள் மீது?
சரி வரட்டும் தண்டப்பணம்! பார்த்துக்கொள்வோம் எனக் காத்திருந்தாள். இப்படியான ஓட்டைக் கமறாக்களைப் பொருத்தி றோட்டை நாசமாக்க வேண்டாம் என்று எச்சரிக்கும் துணிவு! அவள் காத்திருக்கும் மனதில் இருந்தது.
அவள் காத்திருந்ததுபோல். படமும், குற்றப்பணம் ஒரு தடவைக்கு 30 யூரோ என, 6 தடவைக்கும் 180 யூரோ அபராதம் கட்டும்படி கணக்கு வந்தது. அவசரமாக தொலைபேசியை எடுத்துக்கொண்டு மடியில் கடிதத்தையும் வைத்துக்கொண்டு தன் நியாயத்தை இடித்துரைக்க தொலை பேசியின் இலக்கங்களைச் சுற்றிக்கொண்டு கடிதத்தையும் ஓரக் கண்ணால் பார்த்தாள்.ஒரு ஓரத்தில் பாதுகாப்பு பட்டி அணியாதமைக்கே இந்தத் தண்டம் எனக்குறிப்பிட்டிருந்தது. சுழட்டிய தொலைபேசி இலக் கத்தை நிறுத்தி விட்டு கடிதத்தை நிதானமாக வாசித்தாள் அவள் தலை சுழன்றது. எந்தநேரமும் நாம் சரியாகவா நடக்கின்றோம்! என்றது அவள் மனம் முதற்தடவையாக.


(வேகத்தைக் கட்டுப்படுத்துவது போல், பாதுகாப்புப் பட்டி போடா விட்டாலும் படமெடுக்கும் கமறா, நடைமுறைக்கு வந்துள்ளது நெதர்லாந்தில்.)


# கண நேரத்தில் கலக்கல் முடிவெடுத்த கனடிய இளைஞன்!!!





கண நேரத்தில் நிகழ்வது தான் விபத்து.
அந்தக் கணத்தில் எந்த வீரனுக்கும் அடி சறுக்கவே செய்யும்.
மூளைக்கும் செயலுக்கும் இடைப்பட்ட நேரத்தில் நடப்பது இந்த விபத்து.
உலகிலேயே ஒரு விபத்தில் இப்படி அதிசயமாக உயிர் பிழைத்தவர் ஒருவராகவே இருக்கமுடியும்
அந்த ஒருவர் கனடா நாட்டைச் சேர்ந்த ஜோய் தொம்சன் என்பவரே.
இவர் கடந்த Feb 2003 சாலையில் இடம்பெற்ற ஒரு விபத்தில் தனது ஜீப்வண்டியில் இருந்து மேலே தூக்கி எறியப்பட்டார்.
எறியப்பட்ட அக்கணத்தில் மேலே தெரிந்த மின்சாரக்கம்பிக்கு கீழே செல்லும் மின்சாரம் பாயாத அந்தக் கம்பியில் வசமாகப் பிடித்துக் கொண்டார்.
பிடித்தவர் தன்பிடியை தளர்த்தாமல் மேலும் வலுப்படுத்தி தன் கால்களையும் அந்தக்கம்பிமீது போட்டுக்கொண்டு தன்பாதுகாப்பைத் திடப் படுத்திக் கொண்டார். பின்னர் அவசர உதவிக்கு வந்த தொழிலாளர்கள் தங்கள் மின்படி தூக்கிமூலம் அவரை இறக்கினர்.
அதுவரை கம்பியிலேயே தன் உயிரைப்பிடித்து வைத்திருந்தார் அந்த இளைஞன். விபத்தில் எந்தச் சிறுகாயமும் இன்றி தப்பித்துக்கொண்டார். மாறி மின்சாரக்கம்பியில் பிடித் திருந்தால் உடல் கருகியிருக்கும். உண்மையிலேயே கணநேரத்தில் இவர் எடுத்த கலக்கல் முடிவு எம்நெஞ்சை உலுக்குதல்லவா! படத்தில் தொங்கும் தொம்சனையும் அவரை மீட்கவந்து நிற்கும் மின் படி உயர்த்தியையும் நீங்கள் காணலாம்.





# இது ஒரு மயிர் பிரச்சனை


சந்திரனில் நடந்த முதல் மனிதன் நீல் ஆர்ம்ஸ்ரோங்.. இவர் சின்சினாட்டி பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இன்று உள்ளார். இவர் மாதம் ஒரு முறை தலைமயிர் வெட்டிக் கொள்ள ஒரு சிகையலங்கார நிலையத்திற்குச் செல்வார். சிகை அலங்கார நிலைய உரிமையாளர் மார்க்ஸ் சிஸ்மோர் வெட்டி எறியப்படும் நீல் ஆம்ஸ்ரோகின் மயிரை பணமாக்கிக் கொண்டார். உலகில் வல்ல வனுக்கு கழிவு என்று என்னதான் உண்டு. ஆம் வெட்டி எறிந்த தலைமயிரை 2000 டொலருக்கு விற்றுவிட்டார்.

மயிருக்கு இந்த விலையா? மயிர் இருந்த இடம் சாதாரண இடம் அல்ல. நிலவுக்குச் சென்று திரும்பியவரது தலையில் வாழ்ந்த மயிரல்லவா? சரி மயிரை விடுங்கள் அந்த மயிரை ஒருவர் ஏன் வாங்கினார்.ஏதும் செய்வினை செய்யவா? செய்வினை என்றதும் நம் நாட்டவர்களுக்குத்தான் இந்த பழக்கமும் நம்பிக்கையும் என்று எண்ணிவிடாதீர்கள். புதுமைகள் பல படைத்த ஓவியமேதை பிக்காசோ அவர்கள் கூட தலைமயிர் வெட்டினால் ஒரு வெள்ளைத் துணிபரப்பி அதன் மேல் இருந்தே வெட்டிக் கொள்வார். பின்னர் தானே அந்த மயிர்களை எடுத்துச்சென்று அழித்தும் விடுவார்.

அவருக்கு தன் மயிரையாராவது எடுத்து ஏதும் கெட்டதேவதைகளை அந்த மயிர் மூலம் ஏவிவிடலாம் என்ற ஒரு மூடநம்பிக்கை இருந்தது. (தற்போது மயிரை வைத்தே ஒருவரது குணாதிசயங்கள் ஏன் ஒருவரை அடையாளமும் காணும் அளவுக்கு விஞ்ஞானம் முன்னேறிவிட்டது.)


ஆனால் இங்கே நீல் ஆம்ஸ்ரோங்கின் மயிரை வாங்கியவரது நோக்கம் வேறு. அவர் பிரபலங்களின் மயிரைச் சேகரிப்பதில் பெரும் ஆர்வம் கொண்டவர்.அவர் பெயர் ஜான் ரெஸ்னி. இவர் ஆபிரஹாம்லிங்கன், நெப் போலியன், நடிகை மார்லின் மன்றோ, ஆல் பேர்ட் ஜன்ஸ்டின், ஆகியோரது தலைமயிரை எல்லாம் சேகரித்து வைத்திருக்கின்றார். இவற்றை 10 கோடி ரூபாய்க்கு காப்புறுதி செய்திருக்கின்றார்.

தலைமயிர்தானே போனால் போகிறது என்று நீல் ஆம்ஸ்ரோங் விட்டுவைக்கவில்லை. அவர் முடி திருத்தும் நிலைய அதிபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளார். வழக்கில் ஆம்ஸ்ரோங் வென்றால் வாங்கிய மயிரைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற தீர்ப்பு வரும். அந்த மயிர் அவருடையதுதானா என்ற சோதனைகள் வேறு தொடரும்.



Picasso

# நள்ளிரவில் ஆண்கள் நடமாடத் தடைவிதித்த பெண்கள் !!!



## ஆண்டவன் என்ன வில்லனா கவர்ச்சிகாட்டி மயக்க!

நேபாள நாடடில் கடும் வரட்சி நிலவுகின்றது. இதனால் அவர்களது கமத்தொழில் மிகவும் பாதிப்படைந்துள்ளது. இந்த நிலையில் மழை வரவேண்டி 200 பெண்கள் நள்ளிரவில் வயலுக்குச்சென்று உழுதனர்.
நள்ளிரவு வயலுக்குப் பெண்கள் சென்றபோது ஆண்களை வீட்டில்வைத்துப் பூட்டிவிட்டேசென்றனர். யன்னல்கள்யாவும் வீட்டில் நன்றாகப் பூட்டப்பட்டிருந்தன. அன்று இரவு ஆண்களுக்கு ஊரடங்குச்சட்டம் பிறப்பித்ததுபோல் ஆண்கள் வெளியில்வரப் பெண்கள் தடைவிதித் திருந்தனர்.
வயல் உழுவதற்கு ஏன் ஆண்கள் வெளிவரத்தடை என்று நீங்கள் எண்ணலாம். காரணம் உண்டு. வர்ணபகவானை மகிழ்ச்சிப்படுத்த அந்த 200 பெண்களும் நிர்வணமாகச்சென்றே வயலில் உழுதார்களாம்.
இதனை ஆண்கள் பார்த்துவிடக்கூடாது என்பதற்காகவே பெண்கள் அவர்களை வீட்டில் அடைத்துவிட்டு இச்செயலைப் புரிந்தனராம்
இறைவனை உண்மையாகத் தொழுதால்தான் பயன் உண்டு என்கிறோம். ஆனால் இப்போ படங்களில் வரும் வில்லன்களைப்போல் அல்லவா இறைவனை மடக்க இந்தக் கவர்ச்சியைப் பயன்படுத்தியுள்ளார்கள்.
இந்தப் பெண்களையும் முழுதாகக் குறை கூறமுடியாது மோகினிகள் தேவர்களை மயக்கவும் ஆடியுள்ளாள்தானே. பங்கே மாவட்டம் இந்திரபூர் கிராமத்தில் நடந்தது இந்தக் குஷிநடனம். இதனைத்தொடர்ந்து அதே மாவட்டத்தில் இன்னு மொரு கிராமமான உதயாபூர் கிராமத்திலும் இவ்வாறு பெண்கள் நள்ளிரவில் நிர்வாணமாக வயலில் உழுது வர்ணபகவானை மகிழ்வித்தனர் கடந்த 2002 ஆகாஸ்ட் மாதம் 12ம்திகதி இது நடந்ததாகச் செய்தி.

# ஹிட்லரை மன்னிப்பு கேட்கச் செய்த தமிழன்



செண்பகராமன்



"பெரிய எம்டன்"

**துணிவு, வீரதீரம் ஆகியவற்றைக் குறிக்க ஒரு புதிய சொல் புழக்கத்திற்கு வந்தது. பலே, எம்டன்!, பெரிய எம்டனப்பா இவன்! ஏன்றெல்லாம் வழக்குகள் தோன்றி இன்றும் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த 'எம்டன் தோன்ற இதுவே காரணம்!**

82ஆண்டுகளுக்கு முன்னால் 1914 ஆம் ஆண்டு செப்டம்பர் 22ஆம் நாள் அமைதிக்குப் பெயர் போன சென்னை மாநகரத்தை அதிர்ச்சி அலைகள் ஆட்கொண்ட நாள்.

முதலாம் உலகப் போரின்போது, ஜெர்மானியப் போர்க்கப்பலான எம்டன் சென்னை நகரை நெருங்கிக் குண்டு வீசியநாள்தான் இந்த செப்டம்பர் 22! உலகப்போர்த் தாக்குதல்கள் தென்னிந்தியா வரை ஊடுருவ இயலாது என்று இருந்த எண்ணல்களைத் தகர்த்து ஆங்கிலேய ஆதிக்கச்சின்னமாக விளங்கிய செயின்ட் ஜார்ஜ் கோட்டையை நோக்கி குண்டுகளை வீசியது "எம்டன்".

எம்டனின் இத்தாக்குதல் சென்னை மக்களை அதிர்ச்சியுடன் கூடிய வியப்பிலாழ்த்தினாலும் அப்போது முதல் துணிவு, வீரதீரம் ஆகியவற்றைக் குறிக்க ஒரு புதிய சொல் புழக்கத்திற்கு வந்தது. பலே, எம்டன்!, பெரிய எம்டனப்பா இவன்! ஏன்றெல்லாம் வழக்குகள் தோன்றி இன்றும் வழங்கப்பட்டு வருகின்றன.

எம்டன் என்கிற அப்போர்க் கப்பலுக்குத் தலைமையேற்று வந்ததும் ஒரு தமிழர்தான்! ஜெய்ஹிந்த் செண்பகராமன் பிள்ளை!

நாஞ்சில் நாட்டில் பிறந்த செண்பகராமன், இளம் வயதிலேயே, ஐரோப்பிய நண்பர் ஒருவரின் உதவியால் ஜெர்மனி சென்றார். வெளிநாட்டில் இருந்து பணியாற்றி, ஜெர்மானிய உதவியுடன், ஆங்கில ஆதிக்கத்திலிருந்து இந்தியாவை விடுவித்திட வேண்டும் என்று உறுதிபூண்டார்.

ஜெர்மானியக் கடற்படையில் பணியாற்றிய காலத்தில்தான், முதல் உலகப் போரில், ஆங்கில ஆதிக்கத்திற்குட்பட்டிருந்து துறைமுக நகரங்களைத் தாக்கித் தன் எதிர்ப்பைக் காட்ட முடிவு கொண்ட செண்பகராமனுக்குச் சென்னையில் செயின்ட் ஜார்ஜ் கோட்டையையும் தாக்கும் எண்ணம் ஏற்பட்டது. அவரின் இலக்கு இந்திய மக்களல்ல, ஏகாதிபத்தியம் நடத்திக் கொண்டிருந்த பிரிட்டிஷார் மட்டுமே!

அன்னிய மண்ணிலிருந்து கொண்டு அன்னை நாட்டிற்காகப் போராடிய செண்பகராமனின் வாழ்வு, இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்னமேயே முடிந்து போனது. இருப்பினும் அவரின் வாழ்வு நமக்குக் கற்றுத் தரும் துணிகரச் செய்திகள் பற்பல. ஜெய்ஹிந்த் என்கிற வீரமுழக்கத்தை முதன் முதலில் 1907 ஆம் ஆண்டிலேயே கொடுத்தவர் செண்பகராமன்.

பின்னால், பல ஆண்டுகளுக்குப் பிறகு, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸை சந்தித்த போது, செண்பகராமன் இதனை அவரிடம் கூற, ஜெய்ஹிந்த் என்பதை விடுதலைப் போராட்டப் பெருமுழக்கமாகப் பரவவிட்டார் நேதாஜி. ஜெர்மானிய உதவியோடு இந்திய நாட்டிற்கு விடுதலை பெற்றுவிட வேண்டுமென்று அயராது உழைத்தார் செண்பகராமன். தேசவிடுதலை பெற அவரவர் தத்தமக்குப் பொருத்தமாகத் தோன்றிய வழிகளிலெல்லாம் போராடிக்கொண்டிருந்த காலம் அடக்கமான, ஆரவாரமற்ற முறைகளில் சிலரும் அஹிம்சா வழிகளில் சிலரும், போராட்ட நிலைகளில் சிலரும், இன்னும் பற்பல வகைகளில் சுதந்திரம் பெறத்துடித்த காலம்! ஜெர்மன் நாட்டிலே பலகாலம் தங்கி, அங்கேயே கல்வி பயின்று, அந்நாட்டுப் படையின் உதவி பெற்றபோதும், தாயகம் தவறாகப் பேசப்பட்டால் பொறுத்துக்கொள்வதென்பது செண்பகராமனின் அகராதியில் இல்லை.

இந்தியாவிற்கு விடுதலை பெறும் அருகதை இல்லை, என்கிற ரீதியில் ஹிட்லர் ஒருமுறை பேசிவிட, அதைக் கேட்டுக் கொந்தளித்துவிட்டார் செண்பகராமன். தான் சொன்ன சொல் தவறு என்று ஆனானப்பட்ட ஹிட்லரே மன்னிப்புக் கேட்கும் வரை விடவில்லை. விளைவு? யாருக்கும, எதற்கும் அஞ்சியிராத ஹிட்லர், பகிரங்கமாகப் பொது மன்னிப்புக் கேட்ட ஒரு நிகழ்ச்சி செண்பகராமனால் வரலாற்றில் இடம்பெற்றது.

(ஆதாரம்:- தினமணி, தமிழ்நாடு)



**எம்டன் மகன்**

இப்பெயருடன் ஒரு திரைப்படம் தற்போது வந்துள்ளது.
அந்த "எம்டன்" என்பதன் அர்த்தம்
இரசிகர்களுக்கும் தெரிய வேண்டும் அல்லவா!




# ஈழத்தமிழனிடம் கல்விகற்ற இந்தியாவின் ஜனாதிபதி

## அப்துல்கலாம்

அணுகுண்டு தயாரித்து இந்தியாவை வல்லரசாக மாற்றிய ராமேசுவரம் விஞ்ஞானி அப்துல்கலாம் இந்தியாவின் ஜனாதி பதியானார், இந்த நேரத்தில் அந்தத் தமிழ்மகன் பற்றி ஒரு பெருமையான செய்தி தெரியுமா உங்களுக்கு?

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கனகசுந்தரம் சுவாமிகள் இராமேஸ்வரத்தில் ஆங்கிலத்தை அறிமுகப்படுத்தினார் என்பதே அச்சேதி.

இவர் திட்டக்குடித்தெருவில் இருந்த சங்கநிதி என்றகட்டிடத்தில் குருகுலக் கல்வியைபோன்று ஆங்கிலக் கல்வியையும் அப்துல்கலாமிற்கு போதித்தார். இவர்பெற்ற ஆங்கிலக்கல்வி அறிவு அன்று, பின்னரும் பல விஞ்ஞான நூல் களைக் கற்றுத்தெளியவாய்ப்பளித்தது. தன் இளமைக்காலத்தில் பத்திரி கைகள் விநியோகித்து அந்தவருமானத்தில் கல்வியைத் தொடர்ந்து இந்தியாவின் முதுகெலும்பாக இன்று உரம்கொடுப்பவர் விஞ்ஞானி ஜனாதி பதி அப்துல்கலாம்..



# யேர்மனியில் இன்றும் வெடிக்கும் நிலக் கண்ணிகள்!

உலக மகாயுத்தத்தின்போது யேர்மனியில் புதைக்கப்பட்ட கண்ணி வெடிகளும் விமானக்குண்டுவீச்சில் நிலத்திற்குள் புதைந்து வெடிக்காமல் இருக்கும் பல குண்டுகளும் இன்னும் யேர்மனியில் புதைந்து கிடக்கின்றன. கிற்லர் புதைத்துவைத்த குண்டுகள் சில, தெருக்கள் தோண்டி வேலை செய்யும் போது வெடித்ததில் பேர்லினில் 1994 இல் நால்வர் பலியானார்கள். இன்று அங்கொன்றும் இங்கொன்றுமாக பல கண்டுபிடிக்கப்படுகின்றன. இன்று சிறுவர்கள் விளையாடும் பகுதிகளிலும் அந்தப்பயங் கரக்குண்டுகள் புதைந்து விழித்துக் காத்துக்கிடக்கின்றன வெடிப்பதற்கு. மொத்தம் யேர்மனியில் வடமாநிலத்தில் மட்டும் 71,000 குண்டுகள் இருப்பதாக ஒரு அறிக்கை தெரிவிக்கின்றது. இவ்வளவு விஞ்ஞானம் முன்னேறி யுத்தம் முடிந்து பல ஆண்டுகள் கழிந்தபின்னரும் குண்டுகளைச் செயல் இழக்கப்பண்ண யேர்மனியில் முடியவில்லை என்றால், நமது நாட்டில் கடன்பட்டு விதைக்கும் குண்டுகள் எத்தனை ஆண்டுகளுக்கு பின்னர் வெடிக்கும்.கடன்பட்டு நெல்லை விதைக்கலாம் குண்டை?



# கைகாட்டி மரத்திற்கு இங்கு என்ன வேலை!

யாழ்ப்பாணத்தில் ஒரு காட்சி. கடலுக்கும் வெளிச்ச வீட்டிற்கும் சம்மந்தம் உண்டு. தெருவிற்கும் சமிக்கைவிளக்கிற்கும் சம்மந்தம் உண்டு.
ஆனால் குடிமனைக்கும் புகையிரதக் கைகாட்டி மரத்திற்கும் என்ன சம்மந்தம்.
ஒரு 20 வருடங்களைப் பின்னோக்கிப்பார்த்தேன். யாழ்தேவி ஓடும் பாதை அதில் இருந்தது.
இப்போ அங்கே அந்தக்கை காட்டி மட்டும் தனியாக வேலையற்று ஓய்வு பெற்று நின்றது. தண்டவாளத்தையும் காணோம் யாழ்தேவியையும் காணோம்.
பார்த்த நான் படத்தை எடுத்தேனாம் வந்தேனாம் என்று இல்லாமல், ஒரு சைக்கிளில் வந்த தம்பியை மறித்து இது என்னவென்று தெரியுமோ? என்றேன்.
'அவன் சட்டென்று உதாலை முன்பு இரயில் போனதாம்' என்றான். தம்பிக்கு வயசு எத்தனை என்றேன்? 15 என்றான். சொல்லிப்போட்டுச் சென்றவன் அப்படியே நான் அந்த வயதில் பிரேக்கடித்த மாதிரி காலால் ஒரு பிரேக் சீச்சுக்கொண்டு அடித்துவிட்டுத் திரும்பிப் பார்த்துக் கேட்டான்.
ஐயா!
புகையிரதத்தைவிடுங்கோ!
உங்களுக்கு புக்காராவைத் தெரியுமோ? என்றான்.
எனக்கு பக்கென்றது.
ஆனால்
இதயம் நிற்கவில்லை.
அந்தச்சிறுவனின்
பக்குவமான பதிலைக் கண்டதினால்.

# ஆமை இன்றும் இளமை

## 175 வது பிறந்த நாளைக் கொண்டாடிய ஆமை!

The oldest living animal. Weight, 1700 pounds, measuring seven feet across the shell.
Picture shows the box in which he was brought over from Hamburg, Germany.
This enormous beast broke the box trying to get out, as also shown in picture.



உயிரினங்களிலே அதிக நாட்கள் வாழக்கூடியது ஆமை. அதற்கு உடல் எங்கும் உயிர் என்பார்கள். ஆமையைவெட்டி துண்டுதுண்டாக சமைப்பதற்குப் போட்டாலும் சட்டியில் ஒவ்வொரு துண்டங்களும் சிறிது அசையுமாம். கடந்த வருடம் அவுஸ்ரேலியா நாட்டில் உள்ள மிருகக்காடசிச் சாலையில் ஒரு ஆமை தனது 175வது பிறந்த நாளைக் கொண்டாடியுள்ளது. உலகின் மூத்த மிருகமாக அந்த ஆமையை கின்னஸ் புத்தகம் ஏற்றுக் கொண்டுள்ளது.175வது பிறந்த தினத்தை கோண்டாடிய ஹரி என்னும் ஆமை 1835 ஆண்டு 5 வயதாக இருக்கும் போது இங்கிலாந்து நாட்டு விஞ்ஞானி சார்லஸ் டார்வின் எடுத்து வளர்த்தார். தற்போது மிருகக் காட்சிச் சாலையில் பாதுகாப்பாக வளர்க்கப்பட்டு வருகிறது. என்ன வளர்க் கப்பட்டு என்பதும் சிரிப்பாக உள்ளதா? இனியும் வளர்ச்சியுண்டா? ஆம் ஆமை 300 வருடங்கள் வாழக்கூடியவை. யேர்மனியில் கம்பேர் நகரில் வாழ்ந்த 300 வயதுடைய ஒரு ஆமையையும் படத்தில் காணலாம்.எனவே இப்போதுதான் பாதிவயதைத் தாண்டியிருக்கிறது அந்த ஆமை. அப்போ ஆமை இன்றும் இளமைதானே!




TITANIC குழந்தை




TITANIC 1912 April மாதம் 14ம் திகதி இரவு 11.40 மணிக்கு பனிமலையுடன் மோதி இரண்டாகப் பிழந்தது. (iceberg at 11:40 PM (ship's time) on Sunday evening April 14, 1912, broke into two pieces....)
ரைட்டானிக் கப்பல் 1523 பேருடன் கடலில் மூழ்கியது பலருக்கும் தெரியும். ரைட்டானிக் படம் வந்தபின்பே இந்த துயரச்சேதி உலகெங்கும் பரவலாக அறிய வாய்ப்புக்கிட்டியது. அந்தக் கப்பலில் இருந்து உயிர்தப்பிய ஒரு பெண் மணியையே இங்கு காண்கிறீர்கள்.இவர் பயணம் செய்தது மூன்றாம் தரவகுப்பில். இவர் தன் பெற்றோருடனும் அண்ணனுடனும் சென்றார்.
உயிர் தப்பியது இவரது தாயும் அண்ணனும் இவரும் மட்டுமே.அப்போது இங்குகாணப்படும் பெண்மணிக்கு எத்தனை வயது தெரியுமா? எட்டே எட்டுவாரம்தான். அண்ணன் 18 மாதக் குழந்தை. இவரது தந்தையார் நீரில் மூழ்கி மரணமானார்.


# யப்பான் நாகசாகி மீது சின்னப் பெடியை ('Little Boy") வீசிய விமானி மரணம்!




இரண்டாவது உலகப்போரின் போது சின்னப் பெடியனை வானில் இருந்து போட்ட விமானி தனது 84 வது வயதில் கடந்த 18.07.2004 இல் காலமானர்.

இந்தக் கொடியவனுக்கு! ஒரு கய வனுக்கு!! அட கடவுளே! இவ்வளவு கொடியவனுக்கு இத்தனை நீண்ட ஆயுளா? எப்படி இவ்வளவு காலம் அவனை உயிருடன் வாழ விட்டாய் என்று கடவுளைக் கேட்பது எமக்கு விளங்குகிறது.

ஆனால்! அவன் தூக்கி எறிந்த "சின்னப் பெடியன்" பற்றி அறிந்தால் இன்னும் ஆத்திரம் பொங்கும். ஆம் சின்னப்பெடி என்பது Little Boy என்ற பெயர் பொறிக்கப்பட்ட அணு குண் டைத்தான். இந்த அணுகுண்டை யப்பானில் ஹிரோஷிமா நகரம் மீது வீசிய அமெரிக்க விமானியே காலமானார்.





06.08.1945

இவர் பெயர் டபிள்யூ ஸ்வீனோ. இவர் பாஸ்டன் நகரில் உள்ள வைத்திய சாலையில் அனுமதி கப்பட்டிருந்தார். அங்கு அவர் இறந்தார்.

டபிள்யூ ஸ்வீனோ அமெரிக்க விமானப்படையில் மேஜராகப் பணியாற்றிய விமானி. 2வது உலகப் போர் உச்சக்கட்டத்தை அடைந்த வேளை யப்பான் மீது தாக்குதல் நடத்திய விமானப் படையில் இவரும் இருந்தார். 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6ம் திகதி யப்பான் நாட்டில் உள்ள ஹிரோஷிமா நகரத்தின் மீது முதல் அணுகுண்டை அமெரிக்கா வீசியது அந்த விமானத்தில் சென்ற வீரர்களில் டபிள்யூ ஸ்வீனேயும் ஒருவர்.

முதல் அணுகுண்டு வீசப்பட்டு 3வது நாள் (1945 ஆகஸ்ட் 9ம் திகதி) யப்பான் நாட்டில் உள்ள நாகசாகி நகரம் மீது அணுகுண்டு வீச பி.29 என்ற அமெரிக்க விமானம் அனுப் பப்பட்டது. அந்த விமானத்துக்கு டபிள்யூ ஸ்வீனோ தலைமைதாங்கி விமாகத்தை ஓட்டிச் சென்று நாகசாகி நகரம் மீது குண்டு போட்டார். இந்தக் குண்டு வீச்சு உலகப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தது. டபிள்யூ ஸ்வீனோ 1995 இல் பாஸ்டன் குளோப் என்ற பத்திரிகைக்கு பேட்டி அளித்தபோது தான் அணுகுண்டு வீச அனுப்பப்பட்டதை நினைவு கூர்ந்து இருந்தார்.



Little boy

"அமெரிக்காவிடம் இதுபோல் நிறைய அணு குண்டுகள் இருக்கு என்பதை யப்பான் நம்ப வேண்டும் என்பதற் காகவே 9ம் திகதி இரண்டாவது அணு குண்டையும் வீசப் போகின்றோம் அதற்கு நீதான் தலைமை தாங்க வேண்டும் என்று தளபதி பால் டிப்பெட் எனக்கு உத்தரவிட்டார்" என்று டபிள்யூ ஸ்வீனோ அந்தப் பேட்டியில் குறிப்பிட்டிருந்தார். தன்னுடைய போர் அனுபவங்களை 1997 ஆம் ஆண்டு புத்தகமாக அவர் எழுதினார். "போரின் முடிவுகள்", அமெரிக்காவின் கடைசி அணுகுண்டு வீச்சை நேரில் பார்த்த சாட்சி என்ற அந்தப் புத்தகத்தில் யப்பான் மீது அமெரிக்கா அணுகுண்டு தாக் குதல் நடத்திய சம்பவத்தை நியாயப் படுத்தியும் இருந்தார். அணுக்குண்டு வீச்சே போரைத்துரித முடிவுக்குக் கொண்டுவந்தது. அதனால் பல்லாயிரக் கணக்கான உயிர்களைக் காப்பாற்ற முடிந்தது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.தன் நாட்டவர்களின் உயிரைக் காப்பற்ற முடிந்தது உண்மைதான் ஆனால் யப்பானில் பலிகொண்ட உயிர்கள் எத்தனை எத்தனை!அது மட்டுமன்றி இன்றும் அணுகுண்டின் கதிர் விச்சு தன் சக்தியை இழக்கவில்லை. இன்னும் எத்தனை சந்ததியினரை அங்கு தாக்குமோ தெரியாது.



"போர் விமானங்களே
போய்விடுங்கள்
எங்கள் வானம்
வெள்ளைப் புறாக்களின் வீதி "

-கவிப்பேரரசு வைரமுத்து

# Jaffna Plane என்ற பெயருடன் இங்கிலாந்தின் போர் விமானம்!




உலகப்போர் 1914இல் தொடங்கிய காலம் யேர்மனியர்களது சிறு விமானங்கள் பல இங்கிலாந்தின் மேல் அத்துமீறிப் பறக்கவிடப்பட்டன. இங்கிலாந்தில் தரைப்படை, கடற்படை இரண்டும் பலம் பொருந்தி இருந்த அளவிற்கு வான் படை இருக்கவில்லை. இதனால் யேர்மனிய விமானங்களின் அத்துமீறிய செயல் ஒரு பயத்தினை இங்கிலாந்திற்கு ஏற்படுத்தியது. இதனால் உடனடியாக வான்படையினை வலுவுள்ள படையாக கட்டமைக்கவேண்டும். அதற்குப் போதிய நிதி வேண்டும் என்று வான்படையினர் இங்கிலாந்து அரசிடம் முறையிட்டனர். அத்துடன் அன்று இங்கிலாந்தின் கீழ் இருந்த தென் ஆபிரிக்கா, மலேசியா போன்ற நாடுகளில் இதற்காகப் பணம் சேகரிக்கும்படியும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அந்தக் காலத்தில் யாழ் குடாநாட்டு மக்கள், இங்கிலாந்தின் மிசனரிகளாலும், அமெரிக்க மிசனரிகளாலும் ஆங்கிலத்திலும் விஞ்ஞானத்திலும் பெரும் அறிவு பெற்றிருந்தார்கள்.

இதனால் யாழ் குடாநாட்டில் இருந்து பெரும் திரளான மக்கள் மலேசியாவிற்கு புலம்பெயர்ந்து அங்கு நல்தொழில் வாய்ப்புக்கள் பெற்று செல்வந்தர்களாகத் திகழ்ந்தனர்.

யேர்மனியிடம் இருந்து இங்கிலாந்தினைக்காக்க வான்படை அவசியமாகிறது. அதற்கு நீங்கள் பணவுதவி செய்யவேண்டும் என்று மலேசியாவில் வாழ்ந்த மக்களை இங்கிலாந்து கேட்டுக்கொண்டது.

அவர்கள் மூலம் பெற்ற சிறப்புக் கல்வியினால் இன்று வளமுடன் வாழ்கின்றோம் என்ற நன்றியுணர்வின் நிமித்தம் மலேசியாவில் வாழ்ந்த யாழ்குடாநாட்டு மக்கள் பெரும் தொகை பணத்தினைச் சேர்த்து இங்கிலாந்திடம். கொடுத்தனர். அப்படிக் கொடுக்கும்போது ஒரு சிறு நிபந்தனையையும் விதித்தனர். அது இதுதான். "எமது பணத்தில் நீங்கள் பெறும் விமானத்திற்கு Jaffna Plane என்று பெயர் பொறிக்க வேண்டும்" என்பதேயாகும்.

அதன்படி இங்கிலாந்து வான் படையினரும் அந்தப்பணத்தில் பெற்ற தமது விமானத்திற்கு Jaffna Plane என்று பெயர் சூட்டி யேர்மனிக்கு மேல் பறக்கவிட்டனர். இந்தச் செய்தி புகைப்படத்துடன் அன்றையகால கட்டத்தில் பிரசுரமாகி இருந்தது.

இந்த அரியதகவலை Scotland Archives இல் என்னால் பெறமுடிந்தது.

"அன்று புலம்பெயர்ந்து மலேசியாவில் வாழ்ந்த ஈழத் தமிழர்களால் ஒரு விமானத்தை வாங்கும் அளவிற்குப் பணம் சேகரித்து,அதுவும் ஒரு அந்நியநாட்டிற்கு கொடுக்க முடியுமானால். எப்படி தமிழன் அன்று வாழ்ந்தான் என எண்ணிப்பாருங்கள்"

இவ்வாறு கலாநிதி முருகர் குணசிங்கம் அவர்கள் 15.08.04 அன்று யேர்மனியில் முல்கைமில் நடைபெற்ற அவரது "இலங்கைத் தமிழ் தேசியவாதம் அதன் ஆரம்பதோற்றம் பற்றியதோர் ஆய்வு என்ற நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றும் போது குறிப்பிட்டார். மேற்படி விழாவினை சர்வதேச புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் (யேர்மனி) ஒழுங்கு செய்திருந்தது.

# ஒலிம்பிக்கும் பெண்களும் அதிர்ச்சிதரும் சில தகவல்கள்!




கி.மு.776 ஒலிம்பிக்ஸ் ஆரம்பிக்கப்பட்டது. கிட்டத்தட்ட 1,170 வருடங்கள் பெண்களை பார்வையாளர்களாகக்கூட அனுமதிக்கவில்லை.
போட்டிகளைப் பார்க்கும் ஆர்வத்தில் பலர் ஆண்கள் வேடமிட்டு உள்ளே நுழைந்தனர். இப்படிப்பட்ட வேடதாரிகள் மாட்டிக்கொண்டால் அவர்களை மலை உச்சிக்கு இழுத்துச்சென்று அங்கிருந்து கீழே தள்ளிச் சாகடிப்பார்களாம்.

1900ம் ஆண்டில் டெனிஸ்,கோல்வ்,வில்வித்தை ஆகிய மூன்று போட்டிகளில் மட்டும் பெண்களுக்குத் தனிப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டன.


.1932ம் ஆண்டு ஒலிம்பிக் 100 மீற்றர் ஓட்டத்தில் தங்கம் வென்றவர் அமெரிக்கவீராங்கனை ஸ்டெல்லா வால்ஷ். 48 வருடங்களுக்குப் பிறகு 1980ம் ஆண்டு ஒரு தகராறில் சுடப்பட்டு இறந்தார் ஸ்டெல்லா. வைத்தியர்கள் பிரேத பரிசோதனை நடத்தியபோதுதான் ஒரு உண்மை தெரிந்தது....அவர் பெண் இல்லை ஆண்! என்று.

1928 ம் ஆண்டுதான் பெண்களுக்கான ஓட்டப்போட்டிகள் முதலில் நடந்தன. 100 மீட்டர் 400 மீட்டர்,800 மீட்டர் போட்டிகளில் ஓடிய பல வீராங்கனைகள் போட்டித் தூரத்தை எட்டமுடியாது மயங்கி விழுந்துவிட அதற்குப்பின் அந்தப் போட்டிகள் தடை செய்யப்பட்டது. திரும்பவும் 1960ம் ஆண்டுதான் மீண்டும் இந்தப் போட்டிகள் சேர்க்கப்பட்டன.



1896 Athens-2004Athens(108 years Back) -2008 London(after 100 years back)

# நானே ஒரு .....




மாவீரன் நெப்போலியன் வீரம் இன்றும் அணையாது பிரான்ஸ் நாட்டில் அணையாத தீபமாகச் மக்கள்மனதில் சுடர்விட்டவண்ணம் இருக்கிறது.

அந்த வீரனைச் சிறைப்பிடித்த வேளை அவனது வீரத்தைக் கொச்சைப் படுத்த எண்ணிய எதிரிகள், ஒரு திட்டம் தீட்டினர்.

அதாவது அவரை ஒரு பயந்தாங்கொள்ளியாக எள்ளிநகையாட ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தினர்.

அவருக்கு ஒருவர் தேனீரை ஒரு கோப்பையில் அவரின் கையில் கொடுக்கும் போது, அவர் அருகில் மறைத்துவைத்த ஒரு பீரங்கியை வெடிக்கவைக்க வேண்டும் என்பதே அத்திட்டம்.

அப்படி அப்பீரங்கியானது திடீர் எனவெடிக்கும் போது உண்டாகும் பயங்கரச் சத்தத்தில் தேனிரை நெப்போலியன் நடுக்கத்தில் போடுவார், அப்போது எல்லோரும் அவரைக் கேலிசெய்வோம், எனத் திட்டம் தீட்டிச் செயல்பட்டனர். ஒருவர் தேனீருடன் வந்து நெப்போலியனுக்கு அதனைக் கொடுக்கும் நேரம் பிரங்கி சொல்லிவைத்தாற்போல் வெடித்தது. ஆனால் கேலிசெய்யத்தான் எவரும் நிற்கவில்லை. வெடிக்கப் போகின்றது என்று முன்கூட்டியே தெரிந்த மற்றவர்கள் எல்லாம் நடுங்கி நிலத்தில் சரிய, நெப்போலியன் மட்டும் நிமிர்ந்தே நின்றார்.

அப்போது அவர்கள் ஆச்சரியத்துடன் எப்படி இந்த திடீர் சத்தத்தை அதாவது பிரங்கியின் வெடிச்சத்தத்தை உங்களால் தாங்க முடிந்தது என்று வினாவினர். அவர் இறுமாப்புடன் பதிலளித்தார்.

இப்போ வெடித்ததே நான் என்றார். நானே ஒரு பிரங்கி எனக்கு நடுக்கமா? என்று கேலிபண்ணக் காத்திருந்தவர்களை கேலியாகப்பார்த்துச் சிரித்துக் கொண்டார். அந்த மாவீரனுக்கு நஞ்சு ஊட்டப்பட்டு பின்னர் கொலை செய்யப்பட்டதாக கருதப்படுகிறது.



# சிலப்பதிகாரத்தில் சுனாமி

தமிழகத்தை சுனாமி தாக்கியது இது முதல் முறையல்ல. 4000 ஆண்டுகளுக்கு முன்பே இவ்வாறு தாக்கியிருக்கிறது. அதன் பிறகும் 3000 ஆண்டுகளுக்கு முன்பும் தாக்கியிருக்கிறது. பின்னர் கி.பி 2ம் நூற்றாண்டிலும் பூம்புகார் என்னும் காவிரிப்பூம் பட்டினத்தையும் கடல் கொள்ளை கொண்டு போயிருக்கிறது.

இன்று (26.12.04) சுனாமியால் ஏற்பட்டதுபோன்ற அழிவை அன்று தமிழ் இலக்கியம் கடல்கோள் என்று குறிப்பிட்டது. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தின் தென்பகுதி பெரிய நிலப்பரப்பாக இருந்தது.

இப்போதைய இலங்கை, மாலைதீவு, தென்னாபிரிக்கா, அவுஸ்ரேலியா ஆகியவை எல்லாம் ஒன்றாக இணைந்து இருந்த அந்த நிலப்பரப்பை வெளி நாட்டவர் "லெமூரியா" என்று குறிப்பிடுகின்றனர்.

தமிழகத்தில் பண்டை இலக்கியம் அந்த நிலப்பரப்பை குமரிக்கண்டம் என்று குறிப்பிடுகின்றது. இப்போது இந்தியாவின் வட எல்லையில் உள்ள இமயமலையைப் போல் உயர்ந்த மலை அங்கு இருந்தது.

குமரிக்கோடு (கோடு என்றால் மலை என்பது பொருள்) என அந்த மலை அழைக் கப்பட்டது. அதைப்போல் குமரியாறு ப.்றுளியாறு ஆகியவை கங்கை,யமுனை நதிகளைப்போல் பரந்து விரிந்து நீண்டதூரம் ஓடின. அந்த நிலப்பகுதியில் இருந்த தென்மதுரை நகரில்தான் முதல் சங்கம் செயல்பட்டு வந்தது. அந்த நிலப்பகுதி முழுவதையும் கடல் கொள்ளைகொண்டு விழுங்கிவிட்டது.

அதன்பிறகு மிஞ்சிய தமிழ்நாட்டின் தலைநகரான கபாடபுரம் இருந்தது. அதுவும் சில நூறு ஆண்டுகளில் கடலால் விழுங்கப் பட்டது. அதையடுத்து, இப் போதைய மதுரையைத் தலைநகராகக்கொண்ட பாண்டியர்கள் ஆட்சிபுரிந்தனர்.

அங்கே மூன்றாம் தமிழ்ச்சங்கம் நடைபெற்று வந்தது. தென்தமிழ் பகுதி கடலால் ஆட்கொள்ளப்பட்ட தகவல்களை இளங்கோவடிகளின் சிலப் பதிகாரம் கூறுகின்றது.

ப.்றுளியாறும் மிக நீண்ட குமரிமலையும் கொடுமையான கடலால் ஆட்கொள்ளப்பட்டதை அடுத்து வடதிசையில் கங்கையும் இமயமும் உருவான பின் தென்திசையை ஆண்ட மன்னன். என்று பாண்டிய மன்னனைப் பாடுகிறது சிலப்பதிகாரம்.




# Little Boy அணு குண்டைவிட 40 ஆயிரம்மடங்கு அதிகசக்தி!

சுனாமி கடற்பேரலையின் தோற்றத்திற்கு காரணமாயிருந்த ஆழ்கடல் நிலநடுக்கத்தின் போது பிறப்பிக்கப்பட்ட சக்தி இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போது ஜப்பான் மீது அமெரிக்காவீசிய லிட்டில் போய் அணுகுண்டைப்போல் 40 ஆயிரம் மடங்கு அதிகமான சக்தி, 1998 ஆம் அண்டு நோர்வேயினால் உற்பத்திசெய்யப்பட்ட மின்சக்தியின் 5மடங்கு சக்தி என்பவற்றிற்கு சமமான சக்தி கடந்த 2004 டிசம்பர் 26ஆம் திகதி உருவான ஆழ்கடல் நிலநடுக்கத்தின்போது பிறப்பிக்கப்பட்டதாக தெரிவிக் கப்படுகிறது.

இச்சக்தி உலகின் மிகப் பெரிய எரிமலை வெடிப்பான இந்தோனேசியா கரகட்டா எரிமலை வெடிப்பில் வெளியேறிய சக்தியைப்போல் 13 மடங்கானது. குறித்த கரகாட்டா வெடிப்பு 1883 இல் நிகழ்ந்தது. இச்சக்தி மின்னலால் உருவாகும் சக்தியைப்போல் ஒரு மில்லியன் மடங்கு அதிகமானது.

சுனாமி பேரலைத்தாக்கத்தைத் தொடர்ந்து பூமி தனது சுற்று வட்டப்பாதையில் இருந்து ஒரு அங்குலம் வரை நகர்ந்துள்ளது.

அத்துடன் ஒரு நாளுக்குரிய கால எல்லையும் சில மைக்கிரோ செக்கன்களால் மாற்றம் அடைந் துள்ளது. இந்த நில நடுக்கத்தில் சுமத்திராவிற்கு தென்மேற்கே உள்ள தீவுகள் 60 அடிகள் வரை நகர்ந்திருக்கலாம். அதுமட்டு மில்லாது சுமத்திராவின் வட முனை 100 அடிவரை தென் மேற் காக நகர்ந்திருக்கலாம் என்றும் பூகோள ஆய்வாளர்கள் தெரிவித் துள்ளனர்.





Baby81

# மீண்டும் ஒரு சாலமன் கதை நம்நாட்டில்!

**ஒரு தாய்கு இரு குழந்தை இருக்கலாம் எட்டுத் தாய்கு ஒரு குழந்தை எப்படி?**


சாலமன் அரசனின் அரண்மனையில் ஒரு விசித்திரமான வழக்கு வந்தது. இருதாய் ஒரு குழந்தையை தனது என்று உரிமை கோரிய வழக்கு. இரு தாய்மார்களும் தமது குழந்தை என்று வாதாடினர். இறுதியில் சாலமன் ஒரு முடிவுக்குவந்தார். சேவகனை அழைத்து சரிபாதியாக குழந்தையை வெட்டிக்கொடுங்கள் என்று பணித்தான்.

சேவகனும் குழந்தையை வெட்ட வாளை ஓங்கினான். அப்போது ஒரு தாய் மன்னா! எனக்கு இந்தக்குழந்தை வேண்டாம் அவளிடமே கொடுங்கள் என்று கதறி அழுதாள். மற்றவளோ குழந்தையை வெட்ட வாள் ஓங்கும்போதுகூட பேசாது இருந்தாள். இதனைக் கண்ட மன்னன் உண்மையானதாய் குழந்தை உயிருடன் இருந்தால் போதும் என்று நினைத்து தடுத்தாள். எனவே உண்மையான தாய் அவளே! அவளிடமே குழந்தையை ஒப்படையுங்கள் எனத் தீர்ப்பு வழங்கினான். இது ஒரு பழையகதை.

இப்போ சுனாமி ஒரு புதுக்கதையை இலங்கையில் கந்தளாயில் எழுதியுள்ளது. இங்கே நாலுமாதக் குழந்தைக்கு இரு தாய்கள் அல்ல எட்டுத் தாய்கள் உரிமைகோரிய அதிசயம் நடந்துள்ளது. இறுதியில் எல்லோருக்கும் DNS TEST செய்துபார்த்து குழந்தை யாருடையது என அறியப் போவதாக அறிவித்ததும் பலர் தாமாகவே பறந்துவிட்டனர். பின்னர் DNS Test இல் உண்மையான பெற்றோர் இனங்காணப்பட்டு குழந்தை உண்மையான தாய் தந்தையான ஜெயராஜ் - ஜெனித்தா தம்பதிகளிடம் ஒப்படைக கப்பட்டது. குழந்தை அபிலாஷ் தாய் தந்தையருடைய அரவணைப்பில் இருந்து ஆறு வாரங்கள் வரை பிரித்துவைத்திருந்தபோது குழந்தைக்கு ***BaBy 81*** என்று இலக்கமே பெயராக இருந்தது. பின் அமெரிக்காசென்று அங்கு தொலைக்காட்சியிலும் காட்சிகொடுத்தது ***BaBy 81***

# ஐரோப்பாவில் புதிய நாணயம்

## புதிய சகாப்தத்தை நாடும் நாணயமும் நாடுகளும்



புதிய நாணயம்



விடைபெற்றுச் செல்லும் யோர்மன் மாக்



பல வருடங்களுக்கு முன் திட்டமிட்டு நாள் குறித்த புதிய நாணயம் சொன்னபடி நாடுகளில், வீடுகளின் கதவைத்தட்டின. ஓய்ரோ நாணயம் வந்துவிட்டது. ஐரோப்பாவில் 12 நாடுகளில் இந்த புதிய நாணயம் புளக்கத்தில். இதனால் அந்தப் பன்னிரண்டு நாடுகளிலும் 50 வருடங்களுக்கு மேலாக புளக்கத்தில் இருந்த நாணயங்கள் செல்லாதவையாக தம்பதவிகளைத் துறக்கின்றன. இந்தப் பன்னிரண்டு நாடுகளிலும் இருந்த ஓய்ரோ நாணயம் பற்றிய ஆரம்பகட்ட திட்டங்களில் ஈடுபட்ட அரசியல்தலைமைகள் மாறிவிட்டன இருந்தாலும் நாடுகளின் நாட்டுப்பற்றால் எந்த மாற்றமும் இன்றி சொன்னபடி சொன்ன முறையில் நாட்டுக்கு நாடு விட்டுக்கொடுப்பனவுடன் இந்த நாணயம் வெற்றிகரமாக வந்துவிட்டது. யோர்மனியில்,மாக்கும், பெல்ஜியத்தில் பிராங்கும், பின்லாந்து பிராங்கும் பிரான்ஸ் பிராங்கும், ஒல்லாந்து குல்டனும், அயர்லாந்து பவுணும், இத்தாலி லீராவும், லக்சம்பேர்க்கில் பிராங்கும், ஒஸ்த்திரியாவில் ஷிலிங்கும், போர்த்துக்கல் எஸ்கூடாவும், ஸ்பானியன் பெசெற்ராவும், கிறிக் டர்சிமும் நாணயங்கள் செயலற்றுப் போகின.

1.01.2001ஆண்டு முதல் புளக்கத்திற்கு வந்த புதிய நாணயமும் அந்தந்த நாடுகளில் இருந்த நாணயங்களும் 28.02.2002 வரை சமகாலப் பாவனையில் இருக்கும். இந்த ஓய்ரோவை சுருக்கி சொல்லும்போது (EURO - EUR என்று வரும்)ஐரோப்பாவின் மத்திய வங்கியாக பிராங்போட் இல் அமைந்துள்ள மத்தியவங்கி செயல்படுகிறது. பிறாங்போட் நகரத்தில் அந்த வங்கியின் முன் EUR வின் குறியீடு ஏற்றப்பட்டுவிட்டது. அதனை மேலே உள்ள படத்தில் காணலாம்.


முன்னர் யோர்மனியில் இருந்து இங்கிலாந்து செல்வது என்றால் நெதலாந்தில் எரிபொருள் நிரப்பிய மீதிக்காசையும், பெல்ஜியத்தில் உணவுண்ட மீதிக் காசையும், கலையில் (பிரான்ஸ்) மாற்றிய மீதிக்காசையும், நிரப்பிக்கொண்டு வீடு வரவேண்டும். இவற்றை மீண்டும் தங்கள் சொந்த நாட்டுக்காசாக மாற்ற அதன் மாற்றீட்டுக்கான பணம் போக, மிஞ்சுவது மிகவும் அருமையாக இருக்கும். ஆனால் இப்போ ஓய்ரோ பணத்துடன் ஓய்யாரமாக ஐரோப்பிய நாடுகள் சுற்றிவரலாம்.

ஒரு யோர்மன் மாக் 0.51 ஓய்ரோவாகவும்,பிரான் ஸ்நாட்டின் ஒரு பிராங் 0.15 ஓய்ரோ வாகவும், அயர்லாந்தின் பவுண் 1.27 ஓய்ரோவாகவும் நெதர்லாந்தின் ஒரு குல்டன் 0.45 ஓய்ரோவாகவும் பெறுமதியுடையன.

கிறீக் ஒரு டர்சமியும், இத்தாலி ஒரு லீராவும், போத்துக்கல் ஒரு ஸ்கோடாவும், லக்சம்போர்க் ஒரு பிறாங்கும், ஸ்பானியன் ஒரு பெஸ்ராவும் ‘0’ ஓய்ரோவாக பெறுமதியற்று விளங்குகின்றன.

# புற்று நோயைக் கண்டுபிடிக்கும் நாய்

*வரும் முன் காப்பது கேலியல்ல! அதுதான் நோய்க்கு வேலி!*





**பயிற்சிப் பாடசாலைக்குச் செல்லும் நாய்கள்**

கொலை கொள்ளை கண்ணிவெடி எனவும் விலங்குளை வேட்டையாடவும் புறத்தே உள்ள கொடுமைகளை ஒழிப்பதற்காகவும் தேவைகளைத் தீர்பதற்காகவும் பல நூறு வருடங்கள் நாய்களைப் பாவித்த மனிதன் இன்று அகத்தே உள்ள தேவைகளைத் தீர்க்கவும் நோய்களைக் காணவும் உதவும் ஆற்றல் மிக்கது நாய் என்பதை இங்கிலாந்து கேம்பிறிச் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் கண்டுகொண்டுள்ளனர்.

நாய்க்கு மனிதனைவிட நுகரும் சக்தி 10 மடங்கு மேலானது. அத்துடன் நாய்க்கு மூக்கிற்கும், மூளைக்கும் இடையே உள்ள தொடர்பு அதிகம். இந்த அபூர்வ சக்தியைவைத்து வேட்டையாட நாய்களைப் பாவித்த நாம், ஏன் மனிதனுக்குள் இருக்கும் நோய்களை மோப்பம்பிடித்து அந்த நோய்களை வேட்டையாடி ஒழிக்க முடியாதா என்று எழுந்த சிந்தனையின் பயனே இன்று புற்றுநோய்க்கு நாய்களைப் பயன்படுத்தி அறியலாம் என்கிற அபூர்வ ஆய்வு ஏற்படக் காரணமானது.

1978 ஆண்டு ஒரு பெண் தான் வளர்த்த நாய் தனது காலில் ஒரு பகுதியைமட்டும் மோப்பம்பிடித்து தினமும் நக்குவதை அவதானித்தாள்.

காலில் சில இடங்களில் சில புள்ளிகள் இருந்தாலும் ஒரு குறிப்பிட்ட புள்ளியையே அந்த நாய் தினமும் நக்கியது. நக்கும்போது நாயைப் பிடித்து இழுத்தால் மூர்க்கத்தனத்துடன் இழுத்துக்கொண்டு வலிய வலிய அந்த ஒரே இடத்தையே நக்கியது.

இதனால் அந்த இடத்தில் ஏதும் இருக்குமோ என்று எண்ணிய அப்பெண் வைத்தியர் தன்னைக் கேலி செய்தாலும் கவலையில்லை என்று எண்ணிக் கொண்டு வைத்தியரிடம் சென்றாள்.

வைத்தியரும் காலை நன்கு கவனித்துவிட்டு நாய் தினம் நக்கும் அவ்வி டத்தில் சிறுதுண்டை வெட்டி பரிசோதனைக்காக அனுப்பிவைத்தார். ஆய்வு முடிந்து அந்தப் பெண்ணுக்கு காலில் புற்றுநோய் மிகமிகத் தொடக்க நிலையில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதன் விளைவே இங்கிலாந்தில் நாய்களைக் கொண்டு புற்றுநோய் கண்டுபிடிக்கும் ஆய்வு ஆரம்பிக்கப்பட்டது. ஆண்டு ஒன்றுக்கு 380 மில்லியன் பவுண்களை புற்று நோய் ஆய்வுக்காகச் செலவுசெய்யும் அரசு நாய்களை இந்த நோய்களின் ஆய்வுக்கு பயன்படுத்தினால் என்ன என்று எண்ணியதில் வியப்பில்லை.

கேம்பிறிஜ் பல்கலைக்கழகம்.சாளி கிளறிக்கன் என்பவரை நாய்களுக்கு பயிற்சியாளராக நியமித்து இந்த ஆய்வினை ஆரம்பித்தது. முதலில் நான்கு கிண்ணங்களில் ஒன்றில் மட்டும் உணவினைவைத்து மோப்பமிட வைத்தனர். அப்போது நாய் அந்த உணவு இருக்கும் கிண்ணத்தைக் கண்டுபிடித்தது.

நாய்க்கு விரும்பிய உணவு கொடுக்கப்பட்டது தான் கண்டு பிடித்தால் தனக்கு நல்ல உணவு கிடைக்கும் என்ற அவாவினை முதலில் நாய்க்கு தூண்டினர்.

அடுத்து மனிதனது சிறுநீரை ஒரு கிண்ணத்தில் வைத்து வேறு வெறும் கிண்ணங்களையும் வைத்தனர். நாய் சரியாக சிறுநீர் உள்ள கிண்ணத்தை மோப்பம் பிடித்தது.

அடுத்து சிறுநீரை மூன்று கிண்ணத்திலும் புற்றுநோய்கண்ட ஒரு மனிதனது சிறுநீரை ஒரு கிண்ணத்திலும் வைத்து நாயை மோப்பமிடவைத்தனர். நாய் வித்தியாசமாக இருக்கும் நோய்கண்டவரது சிறுநீரை மோப்பம் கண்டது. இவ்வாறு செய்கின்றபோது 100க்கு 60 வீதம் சரியாகக்காட்டியது.

இதனை 1.04.1989 ஆண்டு உத்தியோ கபூர்வமாக பத்திரிகைகள் அறிவித்தன. இருந்தும் அத்தினம் April Fool Day என்பதனால் மக்கள் பொய் என்று எண்ணினார்கள். பின்னர்தான் அது உண்மை எனப் புரிந்தனர்.

பின்னர் 7.03.2003 கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் நுரையீரல் புற்று நோய் உண்டா என அறிய இந்த நாய்களின் உதவியை நாடினர். ஒரு பலூனை நோய் உள்ளவர் களையும், நோய் அற்றவர்களையும் ஊத விட்டு அந்தக் காற்றை நாயினைக் கொண்டு மோப்பம் பிடித்தனர்.

நாய் 98 வீதம் சரியாக நுரையிரலில் புற்றுநோய் உள்ளவரைக் கண்டு பிடித்தது இதனால் நுரையீரல் புற்று நோய்யைக் கண்டுபிடிக்க நாய் சிறந்தது என ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சாதாரணமாக ஒரு வைத்தியர் புற்றுநோய் உண்டா எனக் கண்டு பிடிக்கும் போது அது உடலில் அதிகம் பரவிய நிலையில் அதாவது முற்றிய நிலையை அடைந்திருக்கும்.

ஆனால் நாய் நுகர்ந்து அதன் ஆரம்பகட்டத்திலேயே கண்டுகொள்ளும்.

எனவே நாய் வைத்தியரைவிட மேலானது அல்லவா என ஒரு வைத்தியரைக் கேட்டபோது,

"நாய் தங்களது வேலையை சரியாகச் செய்யும் என்று உறுதியானால் தமது வேலைகளை நாயாரிடம் விடுவதில் ஆட்சேபணை இல்லை" என்று விகடமாகப் பதில் சொன்னார்.

விகடமானாலும் விசயம் உண்டல்லவா?

ஒரு சாதாரண நாயினை புற்று நோய் மோப்பம் பிடிக்க பயிற்றவிப்பதற்கு 3வாரம் போதுமானது என்கிறார் அதன் பயிற்சியாளர்.

ஆனால் ஒரு வைத்தியரை படிப்பிக்க 4 முதல் 7 வருடங்கள் ஆகும். எனவே நாய்கள் இங்கு மனிதனைவிட உயர்ந்துவிட்டன அல்லவா.

இருந்தும் நாய்களை நம்பாதீர்கள் அதனை விட இயந்திரங்களைக் கண்டு பிடியுங்கள் என ஒருசாரார் குரல் கொடுக்கின்றனர். நாய்கள் கண்டு பிடித்தாலும் மருத்துவம் செய்யப்போவது வைத்தியர்கள்தானே என்பதனைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று எதிர்ப்போருக்கு பதில் கொடுப்பவரும் உண்டு. சுவாசப்பைப் புற்றுநோயைக் கண்டுபிடிக்க நாய்களைப் பயன்படுத்தும் முறை விரைவில் வரலாம் என்கின்றனர் ஆய்வாளர்கள். ஒரு மனிதன் உணவைச்சுவைத்து நன்றாக இருக்கிறது என்று மட்டும்தான் சொல்வான். ஆனால் நாய் அந்த உணவில் என்ன என்ன எவ்வளவு வீதம் உண்டு என்பதை பகுத்து அறியும் வல்லமை கொண்டது.எனவே நாயின் மோப்பசக்தியை மனிதனின் ஆரோக்கியத்திற்கு பயன் படுத்துவதில் என்ன தவறு. எனவே நம்பிக்கையுடன் அதனைப் பயன் படுத்தலாம் என்கிறார் பயிற்சியாளர் சாளி கிளறிக்கன்.

நாய் உங்கள் மேனியில் செல்லமாக நக்கினால் பயந்து விடாதீர்கள்.
ஆனால், ஒரே இடத்தில் நக்கினால் செல்லம் என்று இருந்துவிடாதீர்கள் உங்கள் உடலில் செல் அதாவது கலங்களில் எதாவது கோளாறு உண்டு என்று உடன் வைத்தியரை அணுகுங்கள். வரும் முன் காப்பது கேலியல்ல அதுதான் நோய்க்கு நாம்போடும் வேலி.

## இறங்க மறுத்த இறாக்கெற்று!









## விண்ணில் கரைந்த கதை

அமெரிக்கா விண்கலம் ஒன்று (1.02.03) கொலம்பியாவில் வெடித்துச் சிதறியது. தரையிறங்குவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்னமே இந்த விபத்து நடந்துள்ளது. இந்தவிபத்தில் சிக்கியவர்களின் மனதை யுருக்கும் படங்களைக் கீழே காணலாம்.






இந்திய விஞ்ஞானி கல்பனா தன் கணவர் ஹாரிசனுடன் நிற்பதையும், அருகில் பயணத்திற்கு முன் இறுதியாக எடுத்துக்கொண்ட படத்தையும் இங்கே காண்கிறீர்கள்

# விரல் நீளப் புடலங்காய் வைத்தியம்!

தாயகத்தில் தோட்டங்களில் புடலங் காய்களுக்கு கற்கள் கட்டி தொங்க விட்டிருப்பதைக்காணலாம். அந்தக் கற்களின் இழுவை அதாவது பாரமானது அந்தப் புடலங்காயைச் சுருளாமலும், அதே சமயம் நிளமாகவும் வருவதற்கு உந்துதலாக அமைந்துவிடுகின்றது.



இதே நுட்பத்தை விரல்கள்வளரு வதற்கும் பாவிக்கின்றனர் என்பதால் இந்த முறையைப் புடலங்காய் வைத்தியம் என்று வைத்துக் கொள்வோம்.

லண்டனில் ஒரு விபத்தில் தனது மூன்று விரல்களையும் இழந்த ஒரு பொறியியலாளர் தற்போது புதிய சத்திர சிகிச்சையும் சில நுட்பமான செயற்பாடுகளினாலும் தற்போது தன் இழந்த மூன்று விரல்களிலும் குறிப்பிட்ட அளவு வளர்ச்சியைப் பெற்றுள்ளார். அதாவது படத்தில் காட்டப்பட்டது போன்று ஒருவித இழுவைச் சுருளை இழந்த விரலில் தினமும் பூட்டி இருப்பதனால் அந்தவிரல்களின் கலங்கள் ஒரு சில செ.மீற்றர் நீளம் வளருவதற்கு ஏதுவாகிறது. இழந்த விரல்கள் ஒரு சிறிது வளர்ந்தாலும் அது பெரிதே. இதனை இழந்தவர்களால் தான் உணரமுடியும். இந்தச் சிகிச்சை முறை சைபிரியாவில் 50 வருடங்களுக்கு முன்னரே இருந்ததாக அறியப்படுகிறது. இப்படியான சில சிகிச்சை முறையினால் விரல்கள் மட்டுமன்றி குட்டையானவர்கள் உயரத்தையும் சற்று கூட்ட முடிந்துள்ளது என இந்த ஆய்வுகளின் நிபுணர்கள் தெரிவிக் கின்றனர்.

உலக அழகிக்கு ஈடாகவும் புன்னகை தவழும் முகத்திற்கு சொந்தக்காரி யுமான ஒரு அழகி, விமானப் பணிப்பெண் வேலைக்கு விண்ணப்பித்து மயிரிழையில் தெரிவுசெய்யப்பாடாமல் விடப்பட்டார். அந்த மயிரிழை அறிவு சம்மந்தமாகவோ தேக ஆரோக்கியம் பற்றியதாகவோ அமையவில்லை. மாறக அவரது உயரம் அத்தொழிலுக்கு சில செ.மீ.அளவுகளால் மறுத்தது. அந்த அழகியின் கவலையை இந்தப் புடலங்காய் வைத்தியமுறை நீக்கிக்கொண்டதால் இன்று ஆனந்தமாகப் பணிபுரிகிறாராம் ஒரு விமானப் பணிப்பெண்ணாக.






# உடலுக்குள் ஓர் சுற்றுலா

## மாத்திரை Camera









உலகெங்கும் சுற்றிச்சுற்றி சுற்றுலாச் சென்று படம் பிடித்த மனிதன் இப்போ உடலுக்குள் குடலுக்குள் சுற்றுலாச் சென்று படம் பிடிக்கின்றான்.

அது எப்படி?

ஒரு குளிசை அளவில் இசுறேல் நாட்டுத்தயாரிப்பான ஒரு அற்புதக்கமறாவே உணவுக் கால்வாய்யூடாகச் சென்று படம் எடுக்கின்றது.

ஒரு செக்கனுக்கு இரு படங்கள் வீதம் தன் பயணத்தில் 60000 ஆயிரம் படங்களை எடுத்து கணனிக்கு உடனுக்குடன் அனுப்புகின்றது.

செவ்வாயில் இருந்து பூமிக்கு படங்களை அனுப்ப முடியுமென்றால் இது முடியாததா என்ன? ஒருவரது குடலை முழுமையாக அறியவேண்டும் என்றால் அவர் செய்ய வேண்டியது இதுதான்.

முதலில் தனது குளிசையளவு கமாறாவின் கட்டுப்பாடு பகுதியினை தன் இடையில் கட்டவேண்டும். பின்னர் குளிசை விழுங்குவதுபோல் அந்தச் சிறு கமராவை விழுங்கவேண்டும். விழுங்கிய மறுசெக்கனில் இருந்து படம் ஒவ்வொரு செக்கனுக்கும் கணனியில் பதிவாகிக்கொண்டு வரும். அத்துடன் இப்படங்கள் வீடியோப் படங்கள் போல் அசைகின்ற படங்களாகவும் பார்க்க முடியும்.

குடலில் நோய்யுள்ள பகுதியை படம் பிடிக்கும்போது அதனை நீண்டநேரம் நின்று நிதானமாக எடுக்கக்கூடிய வசதி இடையில் பொருத்தப்பட்ட கட்டுப்பாட்டுப் பகுதிக்கு உண்டு.

சிறுவயதில் 5 சதத்தை நாம் விழுங்கிவிட்டோம் என்றால் அம்மா அப்பா பதறிப்போக, பாட்டி சொல்வாள் சும்மாவிடுங்கள். காலையில் அதுதானாக வந்துவிடும் பிள்ளைக்கு நிறையச்சாப்பாடு கொடுங்கள் என்பாள்.


காலையில் தாய் ஆசையுடன் ( காசு ஆசையல்ல) காசு வந்திருக்கா என்று பிள்ளையின் மலத்தை சல்லடைபோடுவாள். அங்கே விழுங்கிய காசு இருப்பதைக் கண்டதும் பாட்டிசொன்னது சரிதான் என்று மகிழ்வாள்.

எங்கள் பாட்டி சொன்ன சூத்திரத்தின் (Formuler) அடிப்படையிலேயே இந்தக் வில்லைக் கமறாவும் பயணித்து மலத்துடன் வெளிவருகின்றது.

பாட்டி சொன்னது தப்பு என்றால் கமறாவை நம்பி ஒருவர் விழுங்குவாரா?.

எது எப்படியோ நாம் வெளியில் சுற்றுவதைப்போல் இப்போ உள்ளேயும் சுற்றிச் சுற்றி படம் எடுக்கும் காலம் வந்துவிட்டது.

யேர்மனியில் இந்தவகையான வசதி கொண்ட வைத்தியசாலைகள் 200 உண்டு. ஒரு குளிசைக்கமறாவின் விலை 550 யுரோ மட்டுமே.


'Don't switch his computer off, there's a good five minutes in him yet'

# கள்ள மாட்டைக் கண்டுபிடிக்கும் கருவி

### *யப்பானின் புதிய கண்டுபிடிப்பு!*

ஊரிலே தெருக்களில் இரட்டை மாட்டு வண்டிலில் விறகு ஏற்றிவரும் காட்சிகள் அன்று நீங்கள் அன்றாடம் கண்டதுதான்.

அப்போது சில நேரங்களில் மாடு ஒன்று விழுந்து படுத்துக் கிடக்க வண்டிக்காரன் தடியால் குத்தி குத்தி எழுப்ப முயன்றாலும் எழும்பாது படுத்திருக்கும் கள்ள மாடுகளையும் கண்டிருப்போம்.

இப்படியாக ஒரு மாடு உழைக்க ஒரு மாடு கள்ளம் செய்வதுபோல், இந்தக் கள்ளமாடுகளை உலகநாடெங்கும் மனிதவடிவில் கண்கின்றோம்.

உண்மையில் சோர்வு அடையாவிட்டாலும் தொழிலில் நாட்டம் இல்லா தவர்கள் உடலுக்கு சோர்வாக இருக்கிறது என்று பொய் சொல்லித் தங்கள் வேலைத் தலங்களில் முதலாளியை ஏமாற்றிவிட்டு நேரத்திற்கு வீடு செல்வதும், தொழிலகத்திலேயே சும்மா ஓய்வு எடுப்பதும் இனி எதிர்காலத்தில் முடியாத ஒன்றாகும் சாத்தியம் தென்படுகின்றது.

மனிதனின் சக்தியை எவ்வளவுக்கு எவ்வளவு உபயோகிக்கலாமோ அவ்வளவுக்கு உபயோகித்து உலகில் முன்னணியில் திகழ்வதற்கு கடும் பிரயத்தனம் செய்யும் நாடு யப்பான். இந்த நாடே ஒரு மனிதன் உண்மையில் சோர்வு அடைந்துவிட்டானா? இல்லை இன்னும் எத்தனை மணி நேரத்திற்குபின் அவன் உடல் சோர்வடையும், இது போன்ற தரவுகளைக் கணிக்கக்கூடிய ஒரு உபகரணத்தைக் கண்டுபிடித்துள்ளார்கள்.

இது ஒரு மனிதனின் உடல் உற்சாக நிலையை பத்து நிமிடத்திற்கும் இருபது நிமிடத்திற்கும் முன்னதாகவே எடை போட்டுக் காட்டிவிடுமாம்.


இக்கருவி ஒரு உற்சாகமாக இருப்பவரின் குரல் உயர்வீச்சிற்கும் சோர் வடைந்த நிலையில் இருப்பவரின் குரல் வீச்சுக்கும் இடையே உள்ள அலை வீச்சுக்களை தரவாக வைத்து எண்பது சதவீதம் சரியான ஒரு கருவியைக் கண்டுபிடித்துள்ளனர்.



இவை தொழிலகத்தில் மட்டுமன்றி விமான ஓட்டுனர்களது உடல் நிலைகளைக் கண்டு அறிவதற்கும் உபயோகிக்கப்பட உள்ளது. உலகில் ஏற்படும் விபத்துக்களில் பெரும்பகுதி இந்த உடற் சோர்வினால் என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்தக்கருவியை கண்டு பிடித்த நிறுவனம் *Kakuichi Shiomi, of Electronic Navigation Research Instiute in Japan* ஆகும்.





எரி பொருளுக்காக ஈராக்குடன் மோத வேண்டிய அவசியமில்லை. அரபு நாட்டவருக்கு எரி பொருளைக் கொடுத்த ஆண்டவன் எல்லோருக்கும் பொதுவாக அல்லவா சூரியனைக் கொடுத்துள்ளான். இருக்கும் இடத்தைவிட்டு இல்லாத இடம்தேடி எங்கெங்கோ அலைகிறான் ஞானத் தங்கமே என்ற பாடல் போன்று இல்லாததைத் தேடாமல் இருப்பதைத்தேடும் முயற்சியில் யப்பான் வெற்றி காண்கிறது. அந்தவகையில் Honda கொண்டா நிறவனம் செய்துள்ள வாகனத்தையே மேலே காண்கிறீர்கள். இது சூரிய ஒளியில் ஓடவல்லது. 3010 கி.மீட்டர் தூரம் ஓடிச் சாதனை படைத்துவிட்டு நிற்கிறார் வெறும் ஆமைபோல்.



ஜப்பானில் சூரிய ஒளியில் ஓடும் Car களுக்கான ஓட்டப் போட்டி ஒன்றினை இங்கே காணலாம்.


# சிறுமிகள் விரைவாகப் பூப்பெய்துகிறார்கள்?



சிறுசுகள் படங்களைப் பார்த்துப் பார்த்துப்பார்த்து பெருசுகளாய் போய் விடுகிறார்கள் என்றும், திரைப் படத்தால் பெரியவர்களின் சில நடத்தைகளைப் பின் பற்றுகிறார்கள் என்று ஒரு குறை எல்லா வீடுகளிலும் உண்டு.
வயதுக்கேற்ற திரைப்படங்களைப் பார்க்கவேண்டும் என்பதே அன்று தொட்டு இன்றுவரை பெற்றவர்கள் வலியுறுத்தும் ஒரு விடயமாகும்.

கவுண்டமணி செந்திலின் நகைச்சுவை உதைப்பேன்டா! எருமைத் தலையா!! போன்ற வார்த்தைகளும், வெண்ணிறஆடை மூர்த்தியின் மூதேவி என்ற வாத்தையும் நம் குழந்தைகள் மீது ஒட்டிக் கொள்கின்றன. இது பண்பாட்டு சீரழிவு நோய். ஆனால்! இப்போ சொல்லப்போகும் செய்தி விஞ்ஞானத்தின் ஒரு விளைவு.
அதாவது சின்னஞ்சிறு சிறுமிகள் தொடர்ச்சியாகத் தொலைக்காட்சி பார்த்துவந்தால் விரைவாகப் பூப் பெய்திவிடுவார்கள் என்பதே. இத்தாலியில் உள்ள பிளாரன்ஸ் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் தொலைக்காட்சிப் பெட்டியில் உள்ள கதிர்வீச்சின் விளைவுகள் பற்றி ஆராய்ச்சி செய்தனர்.
6 முதல் 12 வயதுக்கு உட்பட்ட 74 சிறுமிகளிடம். அவர்கள் தினமும் 3 மணிநேரம் தொலைக்காட்சி பார்க்கும் பழக்கமுடையவர்கள்.
அவர்களை ஒரு வாரத்திற்கு தொலைக் காட்சி, விடியோ பார்க்க அனுமதிக் கவில்லை. இந்தக் காலத்தில் அவர்களைச் சோதனையிட்டபோது அவர் களிடம் மெலட்டோனியன் அளவு 30 சதவீதம் உயர்ந்திருந்தது.
மெலட்டோனியன் என்பது தூக்க ஹார்மோன் ஆகும். இது பெண்கள் பூப்பெய்தும் காலத்துடன் தொடர்புடையது. மெலட்டோனியன் அளவு குறைவாக இருந்தால் விரைவாகவே (பருவமடைதல்) பூப்பெய்து விடுவார்கள்.
இன்றைய பெண்கள் விரைவாகப் பூப்பெய்துவதற்கு இந்தத் தொலைக் காட்சியின் தூண்டல் ஒரு காரணம் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக் கின்றார்கள்.

## கடிகாரமல்ல....



பாவனைப் பொருட்களை ஒரு விதத்தில் ஆபர ணங்கள் போல் தயாரிப்பது இன்று நாகரிகம்.
கைவளையலில் கடிகாரம். பதக்கத்துள் கடிகாரம், கடிகாரத்துள் வானொலி, இப்போ கடிகாரம்போல் ஒரு கைத் தொலைபேசி. இதனை சிமன்ஸ் தாபனத்தினர் அறிமுகப்படுத்தியுள்ளனர். இது விரை வில் சந்தைக்குவரவுள்ளது. இனி கைத்தொலைபேசி என்றாலே கடிகாரம் என்னுமளவிற்கு இளசுகள் மத்தியில் பிரபல்யமாகும் என எதிர்பார்க்கப் படுகிறது.






எங்கள் பிள்ளைகள் சேர்ந்து ஒரு வான் தேர் வாங்கியிருக் கிறார்கள் என்று பெருமையாகச்சொல்லும் ஒரு காலமோ! இல்லை அவசரம் என்றால் வான் Taxi ஒன்றினைப் பிடித்துக்கொண்டு போங்களேன் என்று சொல்லும் காலம் நமக்கு விரைவாக வரத்தான் போகிறது.
லண்டன் தெருக்களில் 10 மைல்களைக் கடக்கப் படும்பாடும் அதற்கு எடுக்கும் நேரமும் வாகன நெரிச்சலான நேரத்தில் எரிச்சல் ஊட்டவல்லது. இனி அப்படி ஒரு நேரத்தில் அவசரமானபோது ஒரு வான் Taxi யைப் பிடித்துக்கொண்டு செல்லவேண்டிய இடத்திற்கு விரைவாகப் பறந்திடலாம்.
அதற்கான முதற்கட்ட பரிசோதனை அடுத்த ஆண்டு லண்டனில் நிகழ்த்தப்பட இருக்கின்றது. மேலும் இது சாத்தியமாகும் போது எதிர்வரும் 2010 ம் ஆண்டு மக்கள் பாவனைக்கு வரும். இந்த சிறியரக விமானமானது 7 பேர் செல்லக்கூடியது. ஒரு மோட்டார் வாகனத்தின் சத்தத் துக்கும் குறைவான சத்தத்தில் 240 மீற்றர் உயரத்தில் பறக்க வல்லது. 50 கி.மீற்றதூரத்தினை 4 நிமிடங்களில் அடைய வல்லது. இவ்வளவு இருந்தும் பயணத்திற்கான பணம் அதிகமாக இருந்தால் பலன் இல்லை அல்லவா? பயப்பிடாதீர்கள் 60 இதில் இருந்து 80 யூரோவரையில்தான் 50 கி.மீ தூரத்திற்கு உரிய கட்டணமாக இருக்கும்.
(2010 ம் ஆண்டு பெற்றோல் விலையைப் பொறுத்து இது மாறலாம்) தனிப்படவர்கள் இப்படி ஒரு வான் Taxi யைவாங்குவது என்றால் அதன் விலை 750000 யூரோ மட்டுமே!


இந்த வான் பறவை தனியே கடுகதிச் சேவைக்கு மட்டுமன்றி நோயாளர்களின் அவசர சேவைக்கும் பயன்படுத்தப் படவுள்ளது. இதனை இராணுவம் விட்டுவைக்குமா அவர்களும் முந்திக் கொண்டு இதனைப் பயன்படுத்த வருகிறார்கள். தரையில் நெரிச்சல் என்று வானுக்குப் போனால் அங்கும் நெரிச்சல் உண்டானால் என்ன செய்வது.
அங்கும் சமிகை விளக்குகள் பொருத் தப்படுமா?
சரி!சரி!! என்னதான் இருந்தாலும் தற்போதைய வாகன நெரிச்சலுக்கு ஒரு இடைக்காலத் தீர்வு கிடைக்கிறது.அது போதும்.






# 'சொர்க்கத்தில் இருந்து திரும்பியுள்ளேன்'

- டெனிஷ் ரிட்டோ



**வான்வெளி நகரத்திற்குச் சென்ற முதலாவது உல்லாசப் பயணி**

நல்லதைச் செய்பவர்கள் சொர்க்கத்திற்கும், பாவம் செய்பவர் நரகத்திற்கும் போவதாக நம்முன்னவர்கள் சொல்லிவைத்தார்கள்.
யார்சொன்னால் என்ன? யாவருமே சொர்க்கத்திற்கு போவதைத்தான் கூறியிருக்கிறார்கள். இங்கே முதல் முதல் ஒரு மனிதன் சொர்க்கத்தில் இருந்து வந்திருப்பதாக் கூறுகிறார்.. அவர் வேறுயாருமல்ல அமெரிக்க கோடீஸ்வரர் டினஸ் ரிற்ரோதான். இவருக்கு வயது 60. இவர் கடந்த 06 May 2001சொர்கபுரியாக இருக்கும் அண்டவெளி நகரத்தில் இருந்து திரும்பினார். அப்போது அவர் கூறியவார்த்தைதான் 'நான் சொர்கத்தில் இருந்து வருகிறேன்'என்பதாகும். இந்த அண்டவெளியில் பறந்துகொண்டிருக்கும் ஆய்வுகூடத்துடன்கூடிய ஆராய்ச்சி நிலையத்தை உலகின் 18 நாடுகள் ஒன்றிணைந்து உருவாக்கின. அங்கு அமெரிக்காவைச்சேர்ந்த டினேஸ் தன் விடுமுறையைக்களிக்க விரும்பினார். ஆனால் நாசா அனுமதிகொடுக்கத் தயங்கவே, ரசியநாட்டு உதவியுடன் பயணத்தை மேற்கொண்டார். இவரது சர்ச்சைக்குரிய பயணம் மூன்று நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்பட்டது.
1.இவர் மீண்டும் பூமிக்கு வரமுடியாதுவிட்டால் ஏனைய நாடுகள் பொறுப் பேற்கமாட்டாது. 2. அண்டவெளி ஆய்வுகூடத்தில் ஏதும் பொருட்கள் பழுதுபடச்செய்தாலோ இல்லை உடைத்தாலோ அதன் பெறுமதியை அவர் செலுத்தவேண்டும்.3.இவர் அங்கு ரசியாவிற்கு சொந்தமான விண்கலப் பகுதியிலேயே நடமாட அனுமதிக்கப்படுவார். இம் மூன்று நிபந்தனை களையும் ஏற்று வெற்றிகரமாக தன் விடுமுறையை அண்டவெளியில் கழித்துத் திரும்பியுள்ளார் டினேஸ் ரிற்ரோ.
இவர் சென்ற விண்கலம் பழுதடையுமானால் அதில் இருந்து உயிர் பிழைப்பதற்கான சிறியவிண்கலம் ஒன்றும், எடுத்துச்செல்லப்பட்டது.
இப்படியான ஒரு கலம் மூலம் 1983 ஆண்டு விண்வெளிவீரர்கள் தமக்கு வந்த ஆபத்தில் இருந்து தப்பித்துக்கொண்டனர். இம்முறை ஆபத்து ஏதம் இடம்பெறாதமையினால் எடுத்துச்சென்ற அக்கலத்தினை விண்வெளி ஆய்வு நிலையத்திலேயே விட்டு வந்துள்ளனர். விண்வெளிக்கு முதல் முதல் உல்லாசப் பயணத்தை மேற்கொண்ட தினேஸ் அதற்குச் செலுத்திய பணம். 20 மில்லியன் டொலராகும். இவர் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் அதாவது நாசாவில் பொறியியலாளராகக் கடமை புரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# மன்னிக்கத் தெரிந்த பூமி

பூமியில் வாழ்க்கைக்கு ஏற்ற சூழ்நிலை நிலவுதற்கு ஓசோன் படலமும் ஒரு காரணம். நமது பூமியில் வளிமண்டலம் பல்வேறு அடுக்குகளால் ஆனது.நமக்கு நேர்மேலே உள்ள அடுக்கு டிரோ போஸ்கியர் எனப்படுகிறது. மழைபொழிவதும் மேகம் தவழ்வதும் இங்குதான். இதற்கு மேலே டிரேட்டோஸ்பியர் அடுக்கு உள்ளது. இதுதான் ஓசோன் படலம் அமைந்துள்ளது.

இப்படலம் நிலநடுக்கோட்டிற்கு மேல் மெலிதாகவும், துருவப்பகுதிகளில் தடிப்பானதாகவும் அமைந்திருக்கும். சூரியனில் இருந்து வரும் தீங்கிழைக்கும் புற ஊதா கதிர்களில் இருந்து மனிதனைக்காப்பாற்றுவது ஓசோன் படலமே. தோல் புற்று நோயை உருவாக்கும் இந்த புற ஊதா கதிர்களில் 95 சத வீதத்தை ஓசோன் படலம் பூமிக்கு வரவிடாது தடுத்து விடுகின்றது.

ஆனால் இன்று மனிதகுலம் பூமியை மாசுபடுத்துவதால் அந்த ஓசோன் படலத்தில் பெரும் துவாரங்கள் விழுந்துவிட்டன.


ஆனால் இன்று மக்கள் சற்று பூமிக்கு பயபக்த்தியுடன் நடக்கமுற்பட் டதாலோ என்னவோ பூமியின் தென் துருவத்தில் ஓசோன் அளவு மிகவும் குறைந்துவிட்டது.

கடந்த ஆறு ஆண்டுகளில் இந்த ஓட்டையின் அதிகரிப்பு பரப்பு 2 கோடியே 40 லட்சம் சதுர கில்லோ மிட்டராக அதிகரித்துவிட்டது.

ஆனால் இந்த ஆண்டு சில உற்சாகமூட்டும் அம்சங்கள் நிகழ்ந்துள்ளன. ஓசோன் படல ஓட்டையின் அளவு ஒரு கோடியே 60 லட்சம் சதுர கியோ மிட்டராக குறைந்தள்ளது. இதற்கு முன் இந்த ஓட்டை ஒரே பங்காக அமைந்திருந்தது. ஆனால் இப்போது இது இரு வேறு வெற்றிடங்களாகப் பிரிந்துள்ளது. உலகை மாசுபடுத்தாது விட்டால் இந்த உலகம் இன்னும் கோடிக்காலம் உயிர்வாழும், வாழவிடும்.

# இரண்டு இதயம் வேண்டும் ஒன்று நின்றால் ஒன்று!

"இரண்டு மனம் வேண்டும் இறைவனிடம் கேட்டேன் நினைத்து வாழ ஒன்று! மறந்து வாழ ஒன்று!!" என்று வசந்தமாளிகை படத்தில் சிவாஜி பாடுவதாக ஒரு பாடல் அன்று கண்ணதாசன் எழுதியிருந்தார்.





Hannah Clark

உண்மையில் மனிதனுக்கு இரு இதயம் வேண்டும். ஏன் என்றால் மனிதன் மட்டும்தான் ஆசை ஆசை என்று அளவில்லாது அலைகின்றான்.
சரி அங்கே சொல்லப்பட்ட இதயம் மனம் என்கின்ற பொருளில் வந்தது. இங்கே இப்போ சொல்லப்படுகின்ற இதயம் நேரடியாகவே இதயத்தைக் குறிக்கின்றது. கண்ணதாசன் கேட்ட இரு இதயம் இங்கு சிறுமிக்கு இருந்தமையால் அவள் உயிர் பிழைத்தாள்.

ஆம்.சின்சிறு வயதில் சிறுமி Hannah Clark இன் இதயம் அவள் வயதின் அளவுக்கு மீறி பெருத்து இருந்தமையால் அந்த இதயத்தால் சிறுமிக்கு ஆபத்து ஏற்பட்டது. இதனால் வைத்தியர்கள் சத்திரசிகிச்சைமூலம் சிறுமிக்கு ஒரு மாற்று இதயத்தினை பொருத்தினர். அந்த இதயம் இறைவன் கருணையால் ஒழுங்காக இயங்கியது. இதனால் சிறுமி உயிர்பிழைத்தாள்.

இருந்தாலும் ஒருவகையில் வைத்தியர்கள் பாடு திண்டாட்டமாக இருந்தது. சிறுமிக்கு செயல் இழந்து உருப்பபெருத்து உடலினுள் இருக்கும் இதயத்தை முழுமையாக அகற்றிவிடுவதா இல்லை அப்படியே அதனை செயலிழந்தாலும் உடலினுள் இருக்கவிடுவதா? இதற்காக வைத்தியர்கள் பல மணிநேரம் ஆலோசனை செய்து பழுதான அந்த இதயத்தை அகற்றவதில்லை அது இருக்கட்டும். இருப்பதையேன் அகற்றுவான் என்று விட்டுவிட்டனர்.
இப்போ சிறுமிக்கு இரண்டவயதில் வைத்த இதயம் பத்துவருடங்களின் பின் இப்போ செயல் இழந்துவிட்டது. இதனால் உடனடியாக வைத்தியப் பரிசோதனை இடம்பெற்றது.
வைத்தியர்களுக்கு ஒரே ஆச்சரியமா!
சிறுமி உயிருடன் இருப்பது கண்டு. ஆம் அன்று தேவையா இல்லையா என்று பட்டிமன்றம் நடத்தி இறுதியில் இருக்கட்டுமே என்று விட்ட பழைய இதயம் புதுப்பொலிவுடன் இயங்கத் தலைப்பட்டிருந்தது.
அன்றைய அத்துமீறிய வளர்ச்சி தற்போது 12 வயது நிரம்பிய சிறுமிக்கு ஏற்ற அளவாக இருந்து அழகாக இயங்குகின்றது.
படத்தில் சிறுமியையும் அச்சிறுமிக்கு சிகிச்சை அளித்த வைத்தியரையும் காணலாம்.




Drive Early
Drive Slowly
Drive Safely .

ஆசை!ஆசை! அது காற்றைவிட ஏன் ஒளியைவிட ஓசையைவிட வேகமானது. காலம் என்பது மெதுவாக நகர்வது. 60 செக்கன் ஒரு நிமிடம். 60 நிமிடம் ஒரு மணித்தியாலம். 24 மணித்தியாலம் ஒரு நாள். 365 நாட்கள் ஒரு வருடம். பார்த்தீர்களா? காலம் அசையும் கோலமும் வேகமும்.

இப்படி மெதுவாக அசையும் காலத்தை மிஞ்சி வேகமாக ஓடிக்கொண்டு இருக்கிறது ஆசை என்னும் தேர். ஆனால் அந்த வேகமான தேரை இந்த மெது வாக நகரும் காலம் ஒரு நாள் முந்திக்கொள்ளும்.

நேற்று நடந்ததுபோல் பல இன்ப நினைவுகள். எத்தனை ஆசைகள் எத்தனை கற்பனைகள். இதில் எத்தனை வீதம்தான் ஒருவரது வாழ்வில் நிறைவு பெறுகின்றது.

இப்படி நிறைவு பெற்றாலும் அந்த நிறைவு பெற்ற இடத்தில் இருந்து இன்னும் ஒரு புதிய ஆசை தளிர்விட்டு முளைக்கிறதே!

எந்த ஆசையையும் முழுமையாக நிறைவு செய்யாமல் போவதற்கு பெயர்தான் வாழ்கையா? அதனைத் தான் கண்ணதாசன் கூறுகிறார். இது வேண்டும் என்று இதனைப் பிடிக்கச்சென்று, பின் அதனைவிட்டு, அது வேண்டும் என்று அதன் பின் ஓடி, இறுதியில் அதையும் பிடிக்காமல் எதையுமே பிடிக்காமல் செல்வதற்குத்தான் வாழ்க்கை என்று பெயர்.

வாழ்க்கை நீர்க்குமிழி போன்றது. கண்மூடி விழிப்பதற்குள் மெதுவாகச் செல்லும் காலம் விரைந்து சென்றுவிடும்.

எனவே நாம் எங்கள் கடமைகளை நாளை என்று கொள்ளாமல் இன்றே அதாவது இந்த விநாடியே தொடங்க வேண்டும். இறைவன் இருக்கிறானோ என்று ஒரு கேள்வி இளமையில் எவருக்கும் வரும். உடம்பில் இரத்த நாளங்கள் தடிப்புற்று, இரத்தம் செல்வதற்கு வழியின்றி தடுமாறும் வேளை மனம் தெளிவடைந்து வழிபிறக்கும்.இறைவன்பால் அன்பு வழியும்.

ஆனால் அப்போது நீங்கள் இறைவனை அடைய வேண்டியதூரம் அதிகமாக இருக்கும்.

இன்றே இளமையிலேயே பாதையை வகுத்துக் கொண்டு இறைவன் இருக்கிறானோ இல்லையோ என்ற எண்ணத்தைவிட்டு மனதை நல்வழியில் நேராக நகர்த்துங்கள்.

மெதுவாகச் சென்றாலும் நீங்கள் நிதானமாக அந்த இலக்கை அடையும் போது நிச்சயம் அங்கு ஆண்டவன் தெரிவார்.

ஒரு மரம் தான் பூத்து கனியவேண்டிய காலத்தில் கனிகிறது. ஒருநாள் ஒருமரம் கனிகிறகாலம் எல்லாம் நன்றாகக் கனிந்து, பழங்களை பறவைகளுக்கு விருந்து கொடுத்து முடித்திருந்தது. இப்போ மரம் கனிகள் இன்றி வெட்டையாக இருந்தது. அப்போது அடிமரத்தில் ஒரு நத்தை ஊர்ந்து நுனிமரத்தை நோக்கிவருவது பறவைகளுக்கு தெரிந்தது. பறவைகள் அந்த நத்தையைப் பார்த்து. நத்தையாரே மரத்தின் நுனியில் பழங்கள் எல்லாம் முடிந்து விட்டது. பழக்காலமும் முடிந்துவிட்டது, நீ விணாக மேலே வந்து ஏமாந்து செல்லப்போகிறாய் என்று எச்சரித்தன. நத்தையோ மெதுவாக ஊர்ந்து கொண்டு பறவை களைப் பார்த்துக் கூறியது.
"நான் மரத்தின் நுனியை அடையும் வேளை மரம் கனிகளுடன் தொங்கும் காலம் வந்துவிடும் என்றும். கனி தொடங்கும் வேளை புறப்பட்டால் கனிந்து முடிந்த பின்னரே நான் அங்குபோய்ச்சேர்வேன். எனவேதான் நேரத்தோடு ஆரம்பிக்க வேண்டும். இதனை ஆங்கிலத்தில் இப்படிக் கூறுவார்கள்.
Drive Early -Drive Slowly- Drive Safely .
இதன் உட்பொருள் ஆன்மாவைச் சுட்டி யல்லவா நிற்கிறது




# கோவிலைச் சுற்றிவரும் பிரிட்னி!!!

பிரபல பாப் இசைப்பாடகி பிரிட்னி ஸ்பியர்ஸ் தனது நான்குமாதக் குழந்தை சீயன் பிரிஸ்டுடன் தினமும் ஒரு இந்துக்கோவிலைச் சுற்றிவலம் வருகின் றார். தனது குழந்தையின் எதிர்காலம் சிறப்பாக இருக்கவேண்டும் என்கின்ற ஒரு இயல்பான தாயின் விருப்போடு இவரும் கோவிலைச்சுற்றுகிறார்.
அக்கோவில் கலிபோர்ணியாவில் ஒரு மலைப் பிரதேசத்தில் அமைந் துள்ளது. தனது மனைவியின் செயல் கணவனான கவின் பெடர்லைனுக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை இதனால் குடும்ப உறவு பாதிக்கப்படுமோ என்றுகூடக் கேள்விகள் எழுகின்றன. ஆனால் பாடகி பிரிட்னி அந்த அள விற்கு எனது சுதந்திரத்தை மதிக்கத் தெரியாதவர் அல்ல என்னவர். எங்கள் காதல் பாறை போன்றது அதனை எந்த சக்தியாலும் உடைக்கமுடியாது. எனது சுதந்திரத்தில் எவரும் தலையிடுவதை ஒரு பெண்ணாக நான் விரும்பவில்லை. என் குழந்தையின் நல்வாழ்வுகருதி இந்த வழிபாட்டினைச் செய்கின்றேன் என்கிறார் பிரிட்டினி. அவர் அண்மையில் தன் நான்கு வயதுக் குழந்தையுடன் கட்டியணைத்தபடி முன்னுக்கு இருத்தி வாக னத்தை ஓட்டியபோது காவல் துறையினர் தடுத்து விசாரணைக்கு உட் படுத்தினர். தனது குழந்தைக்குப் பாதுகாப்பு இல்லை அதனாலே அப்படி ஓட ஒரு சூழல் உருவாகியது என வாதிட்டவர் இந்த பிரிட்னி. நெஞ்சுக்கு நிம்மதி ஆண்டவன் சந்நிதி இது அவருக்கும் பொருந்தும் அல்லவா!

# பெண்ணியம் என்பது பேசப்படும் பொருள் அல்ல

பெண்ணியம் என்பது பேசப்படும் பொருள் அல்ல. அல்லது பட்டிமன்றத்திற்கான பகடைக்காய்களும் அல்ல. பெண்ணியம் என்பது வாழ்வுக்குரியது. இதனை தாய்மண்ணில் காட்டிய புண்ணிய நதிகளில் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியவர்களையும் ஒருவராகக் காண்கின்றேன். பேச்சுக்கள் எழுத்துக்கள் படைப்புக்கள் அனைத்துமே செயல் என்னும் மையினால் எழுதப்பட வேண்டும்.

"கூட்டாக உன்னால் நகரமுடியவில்லை என்றால் நின்ற இடத்தில் ஆவது நின்று ஒளிவீசு"

என்கிறது ஒரு கிரேக்கப் பழமொழி. உலகை வலம் வந்த ஒரு நதி இன்று துர்கையம்மன் சன்னிதியில் அமர்ந்துகொண்டு கிரேக்கப் பழமொழியினை பொன் மொழியாக்கும் பொன்னாகப்! பெண்ணாக ஒளி வீசுகிறார்.

இற்றைக்கு 32 ஆண்டுகளின் பின் துர்காதுரந்தரியின் முத்துவிழா சிறப்பு மலராக சிவத்தமிழ்கொண்டு வணங்குவதில் பெருமகிழ்வு கொள்கின்றேன்.

ஆசிரியபணியில் தன் ஆரம்ப சேவையைத் தொடங்கிய அவர்கள் மாணவர்களின் தேவைகளை நன்கு உணர்ந்தவர். எனவே தான் கொண்ட அநுபவங்களின் விளைவாக மாணவர்களுக்கு உதவும் திட்டத்தினை உருவாக்கி தனது ஒவ்வொரு பிறந்ததினங்களிலும் அறக்கொடை நிகழ்வாக மாணவர்களுக்கு உதவி வருகின்றார். சென்ற 2004ம் ஆண்டு கிளிநொச்சி சென்று அங்கு தன் பணி யினைச் செய்து "என்கடன் பணிசெய்துகிடப்பதே" என்பதனைக் காட்டியுள்ளார்.

கோவிலைச் சுற்றி பூந்தோட்டம் உள்ளது போன்று பலதோட்டங்களை உருவாக்கி தினமும் அவற்றிற்கு அன்பு நீர்பாச்சுகின்றர். மகளீர் இல்லம், முதியோர் இல்லம், சைவ ஆய்வு நூலகம், என பல வர்ணப்பூக்கள் கொத்துக் கொத்தாக பூத்துச் சிரிக்கின்றன. இந்தச்சிரிப்பினை துர்க்கா தேவியின் இதழோரப் புன்னகைக்கு ஈடாக எண்ணி மகிழ்கின்றார். அவர்களது முத்து விழாவினை யேர்மனி, கனடா, இங்கிலாந்து, தாயகம் எங்கும் சிவத்தமிழ் விழாவாக எடுத்து சிறப்பு மலரையும் வெளியிட்டு மகிழ்ந்தோம். இது யான் பெற்ற பேறுகளில் பெரும் பேறல்லவா!....



கிளிநொச்சியில் அரசாங்க அதிபருடன்



கிளிநொச்சியில் அறக்கொடைவிழா - 2004




# எப்போது சிரிக்கின்றான்!

நல்லதைச்சொன்னால் நல்லவர் என்றும், தன்னை வல்லவர் என்றும் அடையாளம் காண் பார்கள் என்பதற்காக மட்டும் அசையும் நாவினைப் பார்த்து இந்த அண்டங்களையே அசை யவைக்கும் அந்த ஆண்டவன் ஓசையின்றிச் சிரிக்கின்றான்..

உதவி செய்தவன் உதவி பெற்றவன் தமக்கு எப்போ திருப்பி உதவி செய்வான் என்று காத்திருக்கும் கொடையாளி யைப்பார்த்துச் சிரிக் கின்றான்.

பிறர் துன்பத்தை துடைக்கச் சென்று தன் பெருமை பேசு பவனைப்பார்த்து. ஆண்டவன் நகைக்கிறார்.

நான் ஆம்பிளை நினைச்சா எதுவும் செய்வேன். ஆனால் அப்படி நான் செய்பவன் அல்ல என்று தன் மனைவிக்குக் கூறும் ஆண்மகனைப்பார்த்து ஆண்டவன் அழகாகச் சிரிக்கிறார்..

உங்களைப் போலவா நான் என் பிள்ளையை வளர்த்தேன் என்று தாய்க்கு அறிவுரை கூறும் பிள்ளைகளைப் பார்த்து, அவன் பிள்ளை அவனுக்கு அதனையேகூறும் வரை பொறுமையாகச் சிரிக்கின்றார்..

தாய்மொழியை பிறர் கேட்காவண்ணம் வெட்கத்தில் இரகசியமாகப் பேசும் மொழிப்பற்றாளரை நினைத்து இரகசியமாய் ஆண்டவனும் சிரிக்கின்றார்..

தாய் மொழி தெரியாமல் பிறமொழி பேசும் பிள்ளையின் திறமையைக்கண்டு, கொடுப்புக்குள் சிரிக்கும் பெற்றோரின் இறுமாப்புக்கண்டு ஆண்டவன் அட்டகாசமாய்ச் சிரிக்கின்றான்.

தான் விடும் பிழைகளைத்தானே ஒப்புக்கொள்ளாத அறிஞனைப்பார்த்து ஆண்டவன் அப்பப்போ சிரிக்கின்றான்.

நான் என்றால் நன்றாகச் செய்திருப்பேன், இது நான் எப்பவோ சிந்தித்தனான், ஆனால் எனக்கு நேரமில்லை என்று ஒருவரின் வெற்றியைக்கண்டு விமர்சிக்கும் மனிதனைப்பார்த்து பார்வையால் நகைக்கின்றார்.

# மனவளர்ச்சி குன்றிய மாணவர்க்கு வலிமைசேர்க்கும் சிவபூமி

## நாவலர் பணியைத் தொடரும் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்





செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகனின் அருட்திருப் பணிக்கு உயர்ந்த எடுத்துக் காட்டாக உயர்ந்து நிற்கிறது சிவபூமி.

சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை புதியமாடிக் கட்டடத் திறப்புவிழா 15.04.2006 சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு கோண்டா விலில் நடைபெற்றது. .நல்லை ஆதீனமுதல்வர் அங்கு பேசும் போது ஆறு.திருமுருகனின் ஒவ்வொரு வேர்வைத் துளிகளாலும் இப்பாடசாலை இன்று கட்டப் பட்டு நிமிர்ந்து நிற்கின்றது எனக்குறிப்பிட்ட அவர் அன்று ஆறுமுக நாவலரால் செய்யப் பட்ட பணிகளை இன்று ஆறு திருமுருகன் செய்கின்றார் எனவும் தெரிவித்தார். யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் கலாநிதி. பாலசுந்தரம் பிள்ளை உரையாற்றும் போது யாழ்ப்பாணத்து சைவர்களின் பெருமையை நிலை நாட்டுபவர் ஆறு.திருமுருகன் எனவும், வெளிநாடுகளில் சென்று உரையாற்றும் இவர் அங்கு பெறப்படும் நன் கொடைகளைக் கொண்டு சைவசமயத்திற்கு பணியாற்றுகின்றார் எனவும் பாராட்டினார்.






படம் 1 நல்லை ஆதீன முதல்வர் மங்கல விளக்கேற்றுதல் படம் 2 சிவபூமி பாடசாலை புதிய கட்டடத் தோற்றம். படம் 3 சிவபூமி பாடசாலையிலிருந்து அனுராதபுரம் வரை சென்று பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்ற மாணவனின் பேச்சு.






**ஒரு காய் கனியாக 27 வருடங்கள்**

இந்து சமுத்திரத்தின் சிதறிய முத்துகள் போன்றமைந்த 116 தீவுக்கூட்டத்தையே சீசெல்சு குறிக்கும். இவை 1,3மில்லியன் சதுர கிலோ மீ. பரப்பிலான கடற்பிராந்தி யத்தில் அமைந்துள்ளன. 30 தீவுகள் மாத்திரமே மனித சஞ்சாரமுள்ளவை. மொத்த நிலப்பரப்பு 455.3 சதுர.கிலோ மீ. 49% நிலப்பரப்பு தேசியப் பூங்கா அல்லது பாதுகாப்பான பிரதேசமாகும். இவற்றில் கணக்கிலடங்கா உயிரினங்களும் தாவரங்களும் காணப் படுகின்றன.

இத்தீவுக் கூட்டத்திற்கு 1000 மைல்கள் கிழக்கே இந்தியாவும், இலங்கையும் உள்ளது. மேற்கே ஆபிரிக்காவும், தென் மேற்கே மடகஸ்காவும், மொரீசியசும் உள்ளது.

இவற்றுள் 27கி.மி.நீளமும்11கி.மீ அகலமும் கொண்டது மாகே பெரியதீவாகும். மொத்த சனத்தொகை 81.000. இதில் 72.200 மாகே யில் உள்ளனர். விக்ரோறியா 25,000 மக்களைக்கொண்ட தலை நகரமாகும். பெரும் துறைமுகமும் இங்கு உண்டு.

சஞ்சீவி மலையை அநுமன் சுமந்து செல்கையில் சிதறி வீழ்ந்த துண்டுகளாலும் துகள்களாலும் ஆக்கப்பட்ட சிதறல்களே தீவுக்கூட்ட மானமையால் இப் பிரதேசத்தில் எந்த விதமான விச ஜந்துக்களும் என்றுமே காணப்படுவதில்லை என்ற ஐதீகம். பரவலாக உண்டு.அத்தோடு திருவோடு காய்க்கும் பிறாளைத் தீவிலுள்ள பிரதேசம் பேணிப்பாது காக்கப்படுகின்றது. இத்தீவு மாகேயிலிருந்து 21 மைல் தொலைவில் உள்ள இரண்டாவது பெரிய தீவாகும். உலகிலே வெறெந்தப் பகுதியிலும் இப் பனைமரம் காணப் படாதமையால் இதன் பாதுகாப்பு முக்கியத் துவம் பெறுகின்றது. இதன் காயும் இலையும் உலகிலேயே மிகப்பெரிய காயாகவும் மிகப் பெரிய இலையாகவும் கருதப்படுகின்றது. திருவோட்டுக்காய் கனிய 27 ஆண்டு களாகும். ஒரு காயின் எடை சராசரி 18 கிலோ கிராம் நிறையுண்டு. பெண்பனை 80 அடி உயரம் வளர்ந்து முதிர்ச்சிபெற 25 ஆண்டுகளாகும்.

ஆண்பனை 100 அடிவளர்ந்து முதிர்ச்சி பெற 100 வருடங்களாகும். இப்பகுதியில் ஏறக்குறைய 4000 திருவோட்டுப் பனை மரங்கள் உள்ளன. சில நூற்றாண்டு களுக்கு முன்னர் தமிழ் வர்த்தகர்களால் காய்ந்த திருவோடுகள் மலிவுவிலையில் ஏற்றுமதி செய்யப்பட்டது. (துறவிகள் உணவு ஏந்தும் பாத்திரமான திருவோடு தற்போது அரச கண்காணிப்பில் ஏற்றுமதித் தடைப் பொருளாகப் பாதுகாக்கப்படு வதுடன் அரச அனுமதியுடன் பெறுவதாயின் ஒரு திரு வோட்டுக்காய் 100 அமெரிக்க டொலர் விலையாகும். மேற்படி தரவுகளை ஆதரமாக அளித்து உதவியவர் சீசெல்சு தீவில் வாழும் திரு.விஜயரத்தினம் சிவசுப்பிரமணியம்.

# மதங்கள் மனதைப் புண்படுத்த அல்ல மனதைப் பண்படுத்தவே தோன்றின!








முதல் முதல் எதனைக் காண்கின்றோமோ அது மனதில் படிகிறது. அது கெட்டதாக இருக்கலாம் நல்லதாக இருக்கலாம் எதுவாக இருந்தாலும் அது மனதில் ஒட்டிக்கொள்கிறது. அதனால்தான் நல்லதையே பார்க்கவேண்டும்! நல்லதையே கேட்க வேண்டும்!! நல்லதையே பேசவேண்டும்!!! என்றார்கள்.

கெட்டவர்கள் கூட நல்லதையே செய்து கொண்டுவந்தால் நல்லவர்களாகி விடுவார்கள். நன்மைக்கு மேல் நன்மை செய்யத் தீமைகூட எரிந்து சாம்பலாகிவிடும்.

ஒரு மனிதனுக்கு தாய் எப்படியோ!

அதுபோன்றே அவன் சார்ந்த மதமும். மதங்கள் எவையும் கெட்டவை அல்ல. மனங்கள்தான் மாறுபட்டு மாசு பட்டுக்கிடக்கின்றன. நம்மை நாமும் தாழ்த்திக்கொண்டு பிறர் நம்மைத் தாழ்த்த ஏதுவாகவும் வழிவிட்டுக் கொண்டு நாம் வாழ்கின்றோம்.

உலகெங்கும் வாழும் சில மனிதர்கள் சுதந்திரம் என்ற போர்வையால் தந்திரமாக பிறர் கண்களைக் கட்டிக் கொண்டு, தம் எண்ணம்போல் விளையாடுகிறார்கள்.

இந்துமதம், கிறித்தவமதம், இஸ்லாமியமதம் என்று வேறுபாடு அவனுக்குக் கிடையாது. கேட்டால் தமக்கு அதன் அருமை பெருமை தெரியாது என்கிறான்.

கலைக்கு எல்லை இல்லை! ஆனால் நல்லது கெட்டது எனபதற்கு சில எல்லைகளை நம் சான்றோர்கள் வகுத்துள்ளார்கள். இதனை மீறும்போது அறத்துடன் வாழ்பவர்கள் மனம் புண்படுகின்றது. மனதைப் பண்படுத்தத் தோன்றிய மதம் இன்று மனதைப் புண்படுத்த வைக்கிறது.

ஒவ்வொரு மதங்களுக்கும் மதச்சின்னங்கள் உண்டு. அவை புனிதமானவை. இறைவனு க்குச் சமமானவை. அவற்றை நாம் ஆண்ட வனாகவே நேசிக்கின்றோம்.

இன்று பாதணிகளில் சைவக் கடவுளான விநாயகரின் திருவுருவம் பொறிக்கப்பட்டு மேற்கு நாடுகளில் விற்பனைக்கு வந்துள்ளது. அதுமட்டுமல்ல மூக்குநீர் சிந்தும் காகிதத் திலும், பெண்களின் உள்ளாடை களிலும் ஏன்! மலசலக்கிண்ணத்தின் மூடிகளிலும் தெய்வ உருவங்கள் பொறிக்கப்பட்டு அவை அழகுக்குரிய வடிவங்களாகச் சித்திரிக்கப் படுகின்றன. மேலும் சிவனின் திருக்கரங்களில் மதுபானத்தினைக் கொடுத்து விளம்பரப் பொருளாகப் பரம்பொருளைக் காட்டுகின்றனர்.

இது சைவசமயத்தின் பெருமை அறியாதோர் செய்யும் வேலை. அதனைக்கூட மன்னிக் கலாம். இதனைப் பாருங்கள்....



எமது தமிழ் திரைப்படங்களைப் பாருங்கள். அங்கே வில்லன் என்றாலே வீபூதிபட்டையாக அணிந்து காவி யுடையணிந்து உருத்திராட்ச மாலைபோட்டு அதாவது சிவ சின்னங்களுடன் வந்து பழிக்குரிய செயல்கள் எல்லாம் செய்வார். பெண்களின் கற்பை காணிக்கை கேட்பார்.

(இதனைப்பார்த்து இதற்கென்றே சாமியாராகும் கும்பல்கள் தந்த வினையாகவும் இவையிருக்கலாம்)முன்பெல்லாம் சிவசின்னத்துடன் வருபவர்கள் ஒழுக்க சீலர்களாகக் காட்டப்பட்டனர்.

அதனால் ஒரு சில ஒழுக்கம் கெட்டவர்கள் கூட அந்தச் சின்னத்தினை அணிந்து புனிதமாக மாறிய கதைகள் பல உண்டு.

இன்று அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெறும் சாமிகளின் திருக்கூத்தை மொத்த சைவர்களது கூத்தாக்கி குளிர்காய்வது அருவருக்கத்தக்கது. எமது குழந்தைகள் சிவசின்னத்தைக் கண்டால் பயம் வருகிறமாதிரி படங்கள் வருகின்றன. இவை வருங்காலத்தில் தவிர்க்கப்படவேண்டும்.



அண்மையில் ஒரு இணையத் தளத்தில் மேரி மாதாவினைத் தேடும் போது வந்து கிடைத்தது ஒரு படம் இது. அது கிறிஸ்தவ மதத்தினைப் புண்படுத்து வதாக அமைந்திருந்தது.

ஆண்களின் சலகூடத்தில் உள் கோப்பை ஒரு மரியாவாக உருபெற்று முகத்தில் சிறுநீர்கழிப்பதாக அமைக் கப்பெற்றுள்ளது.

இது கலையா? கவலை தரும் கலையிது.

மனங்களை வெல்வது தான் கலைகளின் வேலையாக இருக்கவேண்டும். மனங்களை வேதனைப் படுத்துபவை கலைகளாக இருக்கமுடியாது.

அண்மையில் முகம்மதுவின் படத்தின் தலையில் வெடிகுண்டு வரைந்து டென்மார்க் பெரும் சர்ச்சைக் குள்ளானது. முஸ்லீம் மக்களின் மீது உள்ள வெறுப்பைக்காட்ட அவர்கள் மதத்தை அவமதிப்பது எந்த விதத்திலும் நீதியாகாது. அதே நேரம் எங்கள் மதங்கள் மிதிக்கப்படும் வேளையிலும் நாம் ஒரு நாகரிகமான மதத்தினைப் பின்பற்றுபவர்கள் என்பதனை எடுத்துக்காட்டி எம் மதங்களின் உயர்வை உறுதிப் படுத்துவோம்.

தவறு இருந்தால் எடுத்துச் சொல்வோம். தண்டனைகளை நாம் கையில் எடுக்காது, நம்மைப் படைத்தவன் கையில் விட்டு விடுவோம். மதங்கள் மனங்களைப் பண்படுத்தட்டும் அதனால் மனிதம் செழிக்கட்டும்.

## T.T.S Brothers

*Asien Supermarkt*

RHEINISCHE STR 52
44137 DORTMUND
GERMANY
Tel.0231 819288 Fax.0231 833431

GARTEN STR-29
48147 MÜNSTER
GERMANY
TEl:0251-2301184
Fax: 0251-2301183

## Y&G Asian Foods



மொத்த விற்பனையாளர்கள்

Tel:02332/553331
Fax: 02332/662543
Handy: 0170 247 93 44

Breitenfelder Str.32
58285 Gevelsberg
Germany

## Asiat Center & Call Center

Asian Grocery & international Calls

**Tel: 02406 - 666851 Fax: 02406 - 666852**

Damm Str.15
52134 Herzogenrath
Aachen

உரிமையாளர்.S.செல்வரட்ணம்

## ttn



Tel: 0208 3771402

தமிழ் ஒளி

## T.R.S Traders

உரிமையாளர்: P. இராஜேந்திரவரதன்

Königswall-16
44137 Dortmund

Tel.: 0231/160 494
Fax: 0231/165 652

## முத்து கடல் மீன்கள்




**Fisch&Foods GbR**
**Tel: +49 911 97790466**
**Fax:+49 911 457183**
Nuernberger Str 178
90762 Fuerth

## Ayurveda Wellness praxis

டாக்டர். ஆனந்தி

Dr.Anandi

A.M.P,S.M.P,R.M.P,(India)Dipl.Ayurveda(Germany)

**Dülken Str.5**
**51143 KÖLN-PORZ**
**KÖLN**

**Mob. 0173 267 4544**
**Tel: 02203 29 75 838**
**02203 94 70 41**

## Sukan Kamalanathan



Versicherungakaufmann i.d.A
Hamm
The first qualified tamil insurance broker
in Germany at Debeka

Tel:02381 3600762 Mob 0179 71 90 138

## Nathan Travel




Tel: 02302-2781161
Fax:02302-2781162
Handy: 0179 148 48 92
(Mo-So:24 Hours)
Web:Sl-Travel.de

Nathan Travel
Crengeldan -2- 58455 Witten

## APIRAAMI ENTERPRISE

அபிராமி என்ரப்பிறைஸ்

Tel.: 0201/236925
Fax: 0201/236928

Pfredemarkt 9
45127 ESSEN

## Kajana's Asian Mini Markt

Wiessenburg Str 1
91710 Gunzenhausen

Tel:09831 882487
Fax:09831 881791

## K.T.S Asian Shop

**Tel&Fax:0201 321288**

K.T.S Asian Shop
Beising Str.41
45141 Essen

*"Athisayaula" Well Wishers*

### *JET TRAVELS*
Sivam
Tel: 416 291 0177
Fax: 416 291 4049
e-mail:jettravels@on.aibn.com
4429 Sheppard Avenue East
Scarborough,Ontario M1S 1V3

### *R & S Auto Sales*
Buy Sell-Trade
*Radha*
Tel: 416-412-3838 Fax: 416-412-1174
4362 Sheppard Ave. E. Scarborough, Ont. M1S 1T6

### *Janakan Pictures Film Production*
*S. Srimurugan*
1409 bridle Town Circle
Scarborough, Ont. M1W 2V5
Tel: 416-499-4710 Cell: 416-873-4100

### *N.K.S. Drapery & Blinds*
*Ketha*
210 Silverstar Blvd. Unit 825 ( Midland & Finch )
Scarborough, Ont. M1V 5J9
Tel: 416-321-6420 or 905-944-0218
Cell: 416-738-3370

### *Athavan Publications Inc.*
*Senthi Chelliah*
201-792 Kennedy Road
Scarborough, Ont. M1K 2C8
Tel: 416-615-4646 Fax: 416-615-2414
E-mail: tamilsguide@rogers.com

### *Bharradhi Arts*
1083-1085 Midland Avenue
Scarborough, Ont .M1K 4G7
Tel: 416-457-8424 or 416-755-8338
E-mail: bharradhiarts@rogers.com

### *J.R.B UNIVERSAL INC*
R.R Rajkumar B.Com.Hons.M.B.A,
( Diploma in Accy)
Business Tp: 416 752 7555
Cell: 416 9379 081-Fax: 416 752 7556
2390 Eglinton Ave. East,
Suite # 206 B
Scarborough, Ont. M1K 2P5

### *S.K.T Jewellers & Textiles*
2062 Lawrance Ave.East,
Scarborough,ON.(Warden& Lawrance)
Tel:(416) 615-0197

### *Hopper Hut*
Hopper Hut
Banquet Hall
880 ELLESMERE Rd
(At Kennedy) UNIT 217
SCARBOROUGH ON
(416) 299 4311/299 7013



To Invest in Canadian Real Estate Properties

Preferred.France Switzland Germany U.K Netherland.Australia U.S

உங்கள் ஊழியன்

### *Neel Surendran*
Tel:+1905 793 5000
E-mail:neel@royallepage.ca

**T.J.B.Brothers**

Graf Beust Str.10
41836 Hückelhoven
Tel: 02433-90 32 82
Fax: 02433-90 32 81

**Orientalische Textilien & Schmuck**

Königswall 16 (Am HBF)
44137 Dortmund
Germany
Tel: 0231/162377
Fax: 49.0231/147836

165 Upper Tooting Road
Tooting London
SW17 7TJ
U.K
Tel:0208 68 23 958

**Gopara Gnanam**

Import & Export

Altenberger Str.9
48161 Münster
Germany
TEl:02533/93 33 33 Fax: 93 33 35

1100 Upper Tooting
SW17 7EN
U.K
Tel: 0208 682 4004
Fax:0208 682 4002

**S.K.Silks Paradise**

S.K.Silks Paradise
Adler str 33
44137 Dortmund
Tel:0231-9501647 Fax:0231- 9501648

**SHAN TELECOM**

Tel:0461 4935675
Fax;0461 4935676
Handy:0173 31 20 376
Rathaus Str.7
24937 Flensberg

**ARO PRASI TRADE**

Tel: 02339/6478
Fax: 02339/121855
Glashüttenplatz 11
45549 Sprockhovel

**Little India**

Textile & Jewellery

Adolf Fleken Str.9
41460 Neuss
Tel 02131 / 27 36 92
Fax:02131/738784

**ASIA BAZAR**

An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-308292

**புதிய அமுதசுரபி**

New Amuthasurabi
Rheinische Str.55 44137 Dortmund
Tel&Fax:0231/12 06 69 2
Tel:0231/15 08 74 5 Tel:0231/15 08 74 6

**பிருந்தா**

Silk House

Ludwig str. 92
70197 Stuttgart
Tel : 0711/ 61 58 976
Fax: 0711-61 42 663
Handy :01703344059

**கனீன் எலற்றோனிக்ஸ்**

Schevenhofer Weg 24,
42111 Wuppertal
Tel: 0205 3423 740
Fax: 0205 3423 741

**TamilFlights**

Tel:02131 73 87 83
Fax: 02131 73 87 84
Tamil Flights
Adolf Fleken Str.9
41460 Neuss
தொடர்புகளுக்கு:
Sabesh:0176 61 002 413
Rishi:0174 96 44 965

# வாழ்த்து உலா

கனடா

சித்திரக் கலைஞர் சிவாவின் அற்புத வெற்றிப் பாதையில் முத்திரை பொறிக்கும் நிலாவான அதிசய உலாவுக்கு வாழ்த்துகிறேன்.

**திரு எஸ்.திருச்செல்வம்** தமிழர் தகவல் - கனடா

அதிசய உலாவில் அவர் மூளையின் புத்தியும் யுக்தியும் நிறைவாகப் புலப்படுகின்றது.

**பொ.கனகசபாபதி** :மகாஜனக் கல்லூரி முன்னாள் அதிபர்.

சிவகுமாரனின் எழுத்துக்கள் ஒவ்வொன்றும் அறிவுச்சித்திரங்கள்.அவை கல்விக்கு பயன் தரும் நற்பத்திரங்கள்.

கலைக்கதிர் **கதிர்.துரைசிங்கம்**

யேர்மனி

அதிசய உலாவிலே இணைந்து உலாவ விரும்பும் சிறியோர் பெரியோர், மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் பற்பல அறிவுலாக்களைக் காண்பிக்கும் அதிசயநூல் இது.

கலைவிளக்கு **திருமதி விக்னா பாக்கியநாதன்** B.A.

அதிசய உலா புது வித கலாநிதி
விதி வெலும் சாதனை வெளிப்படும் வளர்நிலா

கவிதா ஞான வாரிதி **கோசல்யா சொர்ணலிங்கம்**

அதிசய உலா கல்விக்கும் கலைக்கும் - ஓர்
புதிய விழா! மாணவர்க்கு இது ஓர் இனிய உலா!!

கவிச்சித்திரா **சுகந்தினி சுதர்சன்**

வானத்திற்கு அழகு வட்ட நிலா
வண்ணத்தமிழிற்கு அழகு அதிசய உலா

**நகுலா சிவநாதன்** (பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியை)

உள்ளங்கைகளில் உலாவரமுடியும் 'அதிசய உலா நூல்' வைத்திருந்தால்.

சிந்தனைச்செல்வர் **ஏழிலன்**

அதிசய உலா ஓர் கல்விச் சுற்றுலா!

**கே.எஸ்.சுதாகர்** அவுஸ்த்திரேலியா

வெற்றிமணியை மாணவர்கள் பறித்துப் படிக்கக் காரணமே இந்த அறிவியல் சுற்றுலாத்தான். அதனை ஒரே சுற்றில் தந்த வெற்றிமணிக்கு வாழ்த்துக்கள்!

குரும்பசிட்டி **வலன்ரீனா இளங்கோவன்** B.A

பல்துறைகளையும் சார்ந்த சுவையான செய்திகள் பல வண்ணப் படங்களுடன் அழகான வடிவமைப்பில் வெளியாகின்றனவே! வெற்றி மணியின் தமிழ் ஒலி உலெகங்கும் ஓங்கி ஒலிக்க வாழ்த்துகள்.

**சசிரேகா பாலசுப்பிரமணியன்**

*செயல் முகாமையாளர், காந்தளகம், சென்னை.*

## அறிமுகம்





**கலாநிதி மு.க.சுப்பிரமணியம் சிவகுமாரன்**

அழகியலுணர்வும் அறிவாற்றலுமுடைய கலைஞர் ஆவர்.

அவர் மாதந்தோறும் வெளியிட்டு வரும் வெற்றிமணி, சிவத்தமிழ் என்னும் இதழ்கள் அவருடைய ஆற்றலை வெளிப்படுத்துகின்றன.

நுண்கலைப் பட்டதாரியான கலாநிதி சிவகுமாரன் அக்கலையறிவினை அறிவியலுடன் இணைத்து நோக்கும் தகைமையுடையவர். அவருடைய பன்முக அறிவினையும் ஆற்றலையும் வெளிப்படுத்துவதாக இந்நூல் அமைகின்றது. குரும்பசிட்டி அறிஞர்களையும் கலைஞர்களையும் தந்த மண். கலாநிதி சிவகுமாரன் அங்கிருந்து இடம்பெயர்ந்து யேர்மனியைத் தன் புகலிட நாடாகக் கொண்டவர்.

புலம்பெயர்ந்து வாழும் நம்மவர்களை எண்ணும் அதேவேளை தாயக மக்களையும் அவர் நினைந்து பணிசெய்பவர். தாயக மாணவர்களுக்கு இலவசமாக வழங்குவதற்காக இந்நூலை எழுதியுள்ளார். இந்நூலிலே புலம்பெயர்ந்து வாழும் நம் மாணவர்களது சாதனைகளை எமக்கும் அறிமுகம் செய்கிறார். இளைய சமூகத்தினை எப்பொழுதுமே மனத்தில் நிறுத்தித் தன் கலைப் பணியையும் அறிவுப் பணியினையும் அவர் ஆற்றி வருகிறார். விஞ்ஞான உலா, விநோத உலா, அதிசய உலா, சரித்திர உலா, காதல் உலா, சமய உலா, கலை உலா, சாதனை உலா என இந்நூலிலுள்ள கட்டுரைகள் இவர் நோக்கினையும் போக்கினையும் நமக்கு நன்கு உணர்த்துகின்றன.

புலம்பெயர்ந்து வாழும் நம்மவர்களுள் சாதனை பல செய்து வருபவர்களுள் கலாநிதி சிவகுமாரனும் ஒருவர் என்பதை இங்கு நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

*பேராசிரியர் அ.சண்முகதாஸ்*

